# ஞானச்சுடர்

வைகாசி 2018


245 ஆவது மலர்




வெளியீடு:

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

# குறள் வழி



தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றால் தேறின்
அருளாதான் செய்யும் அறம்.

**பொருள்:** உயிர்களிடத்து அருள் செய்யாதவன் தருமம் செய்வது மனத் தெளிவில்லாதவன் உண்மைப் பொருளைக் கண்டது போலாகும் (249)

வலியார்முன் தன்னை நினைக்கத் தான்தன்னின்
மெலியார்மேல் செல்லு மிடத்து.


**பொருள்:** தன்னைக் காட்டிலும் எளியவரைத் தான் வருத்தச் செல்லும்போது, தான் வலியார்முன் அஞ்சி நிற்கும் நிலையை நினைத்துக்கொள்ள வேண்டும். (250)

# நற்சிந்தனை

## மறப்பேனோ குருநாதன் தன்னை

### முத்தி நல்குமே
### உற்றதுணை

வெண்பா



சற்குருவைப் போற்றித் தரணியிலே சீரடியார்
பொற்பதத்தைப் போற்றிப் புகலுவேன் – கற்றவர்கள்
நாடுஞ் சிவதொண்டன் நாஞ்சிவம் என்றுசொல்லி
ஓடி வருவான் உவந்து 05

உவந்து வருவானோ மென்றுரு வேற்றிப்
பவம்வெந்து போக வருள்வான் – தவஞ்செய்வார்
கண்டு மகிழுவார் காதலுட னாதரிப்பார்
பண்டுபோ லென்றும் பரிந்து 06

பரிந்தன்பர் பாதத்தில் பாங்குடனற் போது
சொரிந்துசிவ தொண்டன் தொழுது – கரங்கூப்பிச்
சீவன் சிவனாச் சிவநாமம் பாடுவான்
தேவர் புகழுநிற்பான் தேர்ந்து 07

# ஞானச்சுடர்



வெளியீடு:

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

உ

# ஞானச்சுடர்

வெளியீடு - 2 சுடர் - 245

2018 வைகாசி

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| கடவுளின் வழிபாடு... | கு. சோமசுந்தரம் | 01 -03 |
| திருச்சதகம் | சு. அருளம்பலவனார் | 04 -06 |
| வரலாற்று ஒளியில்... | கௌ. சித்தாந்தன் | 07 -11 |
| திருவருட்பயன் | ஆ. ஆனந்தராசன் | 12 -17 |
| இடுக்கண் வருங்கால் நகுக | கே.எஸ். சிவஞானராஜா | 18 -19 |
| நித்திய அன்னப்பணி... | சந்நிதியான் ஆச்சிரமம் | 20 -21 |
| இறைவனை அடைய... | க. சிவகுமார் | 22 -23 |
| வழித்துணை | ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் | 24 -25 |
| வயிரவர் வழிபாடு | திருமதி பொ. திலகவதி | 26 -27 |
| மண்டூர் கந்தசுவாமி கோயில் | மூ. சிவலிங்கம் | 28 -31 |
| சங்கரா ஆர் கொலோ சதுரர்? | இரா. சத்துருசங்காரவேல் | 32 -36 |
| சமய வாழ்வு | இரா. செல்வவடிவேல் | 37 -39 |
| பெரியபுராணப் பெருமை | அ. சுப்பிரமணியம் | 40 -42 |
| கண்டோம் கதிர்காமம் | அன்னைதாசன் | 43 -44 |
| சிவனடியே சிந்திக்கும்... | பு. கதிரித்தம்பி | 45 -46 |
| சித்தர்களின் ஞானம் | சிவ. மகாலிங்கம் | 47 -52 |
| தொண்டர் தம் பெருமை... | திருமதி ஜெ. இராஜேஸ்வரி | 53 -54 |
| படங்கள் தரும் பதிவுகள் | சந்நிதியான் ஆச்சிரமம் | 55 -58 |
| வட இந்திய யாத்திரை | மோகனதாஸ் சுவாமிகள் | 59 -60 |


வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)

**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

தொலைபேசி இலக்கம்: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்

# ஞானச்சுடர் சித்திரைமாத வெளியீடு

**வெளியீட்டுரை:-**

ஞானச்சுடர் 244ஆவது மலருக்குரிய வெளியீட்டுரையினை ஆச்சிரமத்தோடு ஆரம்ப காலம் தொட்டு இணைந்திருந்த இளைப்பாறிய கிராம சேவையாளர் திரு க. ஸ்ரீஸ்கந்தராஜா அவர்கள் மேற்கொண்டார்கள்.

அவர் தனது ஆரம்ப உரையில் சந்நிதியான் ஆச்சிரமம் ஆற்றும் சகல சமய, சமூகப் பணிகளின் பெறுபேறுகளை சபையில் உள்ள அடியார்களுக்கு உரைத்ததுடன் ஆச்சிரமம் ஆற்றும் பணிகளில் காத்திரமான பங்கு வகிப்பது மாதாந்தம் வெளியிடப்படும் ஞானச்சுடர் வெளியீடாகும். அவ்வெளியீட்டின் காரணமாக வருடம் ஒருமுறை தாமும் பங்குபற்ற வேண்டிய நிலையைச் சந்நிதி வேலவன் ஏற்படுத்தி உள்ளான் என்று கூறித் தனது வெளியீட்டுரையை நிறைவு செய்தார்.

**மதிப்பீட்டுரை:-**

சித்திரை மாதம் வெளியிடப்பட்ட ஞானச்சுடர் மலருக்குரிய மதிப்பீட்டுரையினை இளைப்பாறிய அதிபரும் ஆச்சிரமத்தின் வளர்ச்சிக்கு தன்னாலான பங்களிப்பை வழங்கி வருபவருமான திருமதி தவமலர் சுரேந்திரநாதன் அவர்கள் மேற்கொண்டார்கள்.

ஒரு மலர் வெளியீடு என்பது எவ்வளவோ கடினமான செயற்பாடு. ஆனாலும் பேரவையால் வெளியீடு செய்யப்பட்டு வருகின்ற இம் மலரானது 244 மாத காலமாக தொடராக வெளியிடப்பட்டு வருவது ஒரு சாதனையாகும். அதற்கும் சந்நிதி வேலவனது கிருபை வேண்டும். அக்கிருபையானது சந்நிதியான் ஆச்சிரமத்தைச் சூழ அலை வீசிக்கொண்டு இருப்பதை இச்சாதனையூடாக அறியமுடிகின்றது என்று கூறியதோடு ஒரு ஆன்மீக மலர் தொடராக வெளிவருவதனூடாக பலவித ஆன்மீக எழுத்தாளர்களை சமூகத்திற்கு இனம் காட்டியுள்ளது என்று கூறி மலரில் இடம்பெற்ற கட்டுரைகளை தரம் பிரித்து தனது ஆளுமைக்குட்பட்ட விதத்தில் மதிப்பீடு செய்து சபையில் உள்ள அடியார்களுக்கு விளக்கிக் கூறியதுடன் தனது மதிப்பீட்டுரையினை நிறைவு செய்தார்.

# சுடர் தரும் தகவல்

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் வைகாசி விசாகத்தை முன் பின்னாக வைத்து வைகாசிப் பெருவிழா எனும் நிகழ்வை 1993ஆம் ஆண்டு தொடக்கம் வருடா வருடம் நடாத்தி வருகின்றனர். ஆரம்ப காலங்களில் ஒருசில வருடம் ஆலய முன்வீதியில் அரங்கம் அமைத்து இவ்விழா நடாத்தப்பட்டது. படிப்படியாக இவ்விழாவானது சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடாத்தப்பட்டு வருடா வருடம் மிகவும் சிறப்புடன் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை யாவரும் அறிவர்.

சந்நிதியான் ஆச்சிரமத்தில் ஆண்டுதோறும் நடைபெற்றுவரும் வைகாசிப் பெருவிழா நன்னாளில் சமயச் சான்றோர்கள், பல்கலை வித்தகர்கள், வைத்திய கலாநிதிகள், சமூக சேவையாளர்கள் எனப் பலரையும் "ஞான பண்டித..." எனும் முருகன் திருநாமத்தோடு கூடிய விருது வழங்கப்பட்டு கௌரவிக்கும் நிகழ்வு நடைபெறுவது ஆச்சிரம ஆர்வலர்கள் அனைவரும் அறிவர். இந்த வரிசையில் இம்முறை 29.05.2018இல் வைகாசிப் பெருவிழா நடைபெற முருகன் திருவருள் கூடியுள்ளது.

தேசிய மட்டத்திலும், மாகாண மட்டத்திலும் சிறப்புச் சித்திபெற்ற மாணவர்களுக்கான விருது வழங்கும் நிகழ்வு 17.02.2018இல் நடைபெற்றமை அனைவரும் அறிந்ததொன்று. விருதுபெற்ற மாணவர்களது எண்ணக் கருத்துக்களையும், நிகழ்வில் கலந்து சிறப்பித்த அதிபர்கள் - ஆர்வலர்களின் கருத்துக்களையும் "வித்தகச் செழுமை" எனும் தலைப்பில் நூலுருவாக்கி வைகாசிப் பெருவிழாவன்று வெளியிடப்படவுள்ளது. வழமையான வைகாசிப் பெருவிழா நிகழ்வோடு ஒப்பிடுகையில் இது ஒரு வித்தியாசமான அம்சமாகும்.

அண்மையில் மணிவிழாக் கண்டவரும், சந்நிதியான் ஆச்சிரமத்துடனும் - சைவ கலை பண்பாட்டுப் பேரவையுடனும் செயற்பாடுகளில் நீண்டகாலமாகவே உறுதுணையாக இருந்து வருபவருமான ஓய்வுபெற்ற அதிபர் ஆறுமுகம் சிவநாதன் அவர்களும் இப் பெருவிழா நன்னாளில் கௌரவிக்கப்படவுள்ளார்.

# ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய திருவகுப்பு

## 07. பொருகளத் தலகை வகுப்பு

அதிர்த்த பரிபுர பதத்தி பயிரவி
யமைத்த கரதலி ப்ரியத்தை யுடையன
அடித்த தமருக கரத்தர் பயிரவர்
நடித்த நவரச நடத்தை யறிவன
அருக்கர் பதமல வுடுக்கள் பதமள
வடுக்கு பிணமொரு குறட்டி லடைசுவ
அளக்க ருடைபட மிகுத்த குருதியை
யடைத்து மடைபட வுடைத்து விடுவன
அரக்கர் முடிகளை யடுப்பு வகிர்வன
அவற்றி னுலையென இரத்தம் விடுவன
அடுக்க லெனுமவ ரெயிற்றை யவர்கர
வகப்பை யவைகொடு புகட்டி யடுவன
அமிழ்த்தி யடிவிழு பிணத்தி னிணவெளி
றளற்றி னிடையடி வழுக்கி விழுவன
அடப்பை யிடவரு மணுக்க ருடன்வரு
தடக்கை மதமலை நடத்தி வருவன:,

குதித்து மகிழ்வொடு மிதித்து நடமிடு
குறட்கு மிகுதசை கொடுத்து வருவன
கொழுத்த குரகத விறைச்சி வகைவகை
குவித்து முறைமுறை யவித்து நுகர்வன
குருத்து மலரினும் வெளுத்த நிணமது
கொளுத்தி யனலதில் வெதுப்பி யிடுவன
குதட்டி நெடியன வுதட்டி லிடுதசை
கொடிக்கு முதுசின நரிக்கு முமிழ்வன
குணக்கு வளைகடல் வடக்கி யமதிசை
குடக்கு முழுவது மடக்கு வயிறின
குரக்கு மிடறின கரத்தி லெழுகிரி
குலுக்கி யடியொடு பறித்து நிமிர்வன
குறித்து முழுகியு மிரத்த நதியிடை
குடித்து முணர்வொடு களித்து வருவன
குறத்தி யிறைவனை நிறைத்து மலரடி
குறித்து வழிபடு குணத்தை யுடையன:,

# வைகாசிமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

**Dr T. ஸ்ரீஸ்கந்தராசா**
(லண்டன்)
**பொ. கஜேந்திரகுமார்**
(யாழ்ப்பாணம்)
**ச. கந்தசாமி**
(தேவன் ஸ்ரோர்ஸ், ஆவரங்கால்)
**மா. நாகலிங்கம்**
(லக்ஷ்மி வெதுப்பகம், பத்தமேனி, அச்சுவேலி)
**க. அரியரத்தினம்**
(கதிர் தொலைத்தொடர்பு நிலையம், வல்வெட்டி)
**கா. அருந்தவராசா**
(பிரதானவீதி, தொண்டைமானாறு)
**சி. தங்கவேல்**
(கேம்பிரிட்ஜ் கல்வி நிறுவனம், நவிண்டில்)
**க. கிருபாகரன்**
(சந்தைவீதி, உடுப்பிட்டி)
**நா. சுந்தரம்**
(இளைப்பாறிய பிராந்திய நிர்வாக அலுவலர், உரும்பராய்)
**ந. நற்குணராசா**
(தாதி உத்தியோகத்தர், யாழ். போதனா வைத்தியசாலை)
**P. சாந்தரூபன் G.S**
(சாருகாந் தொலைத்தொடர்பு நிலையம், கெருடாவில்)
**திருமதி இ. லோகநாதன்**
(இளை. பொது முகாமையாளர், மானிப்பாய்)
**Dr V. பாலகிருஷ்ணன்**
(கரவெட்டி)
**இ. கணேசலிங்கம்**
(கிராம உத்தியோகத்தர், அச்சுவேலி)
**ஆ. வேலாயுதம்**
(உலக்கை ஓடை, கம்பர்மலை)
**வீ. நடராசா**
(சாவகச்சேரி)

சி. கஜன்
(சண்டிலிப்பாய்)
S. இராசரத்தினம்
(நீர்வேலி)
த. விக்னேஸ்வரன்
(தங்கராசா நகை மாளிகை, யாழ்ப்பாணம்)
உரிமையாளர்
(சுந்தரம் பிறதேர்ஸ் மருந்துக்கடை, திருநெல்வேலி)
K. அருள்வேல்
(விரிவுரையாளர், யாழ் பல்கலைக்கழகம்)
ஆ. குலேந்திரநாயகம்
(கிராம உத்தியோகத்தர், அச்சுவேலி)
செ. கஜேந்திரன்
(கந்தர்மடம், யாழ்ப்பாணம்)
ஐ.கோ. சந்திரசேகரம்
(மார்ஷல், யாழ் பல்கலைக்கழகம்)
செல்வி T. பெரியதம்பி
(முன்னாள் கல்விப் பணிப்பாளர், பருத்தித்துறை)
செல்வி பா. ரதிவதனி
(மாயக்கை, தம்பசெட்டி)
Dr P. சிவபாலன்
(உரும்பராய்)
மாணிக்கம் குட்டித்தம்பி
(வல்லியாவத்தை, கரணவாய்)
திருமதி சீ. ஆதவன்
(வல்லிபுரக்கோவில் வீதி, புலோலி)
சாவித்திரி அருணாசலம்
(தும்பளை, பருத்தித்துறை)
க. பொன்னுச்சாமி
(அம்மன் கோவிலடி, கரணவாய்)
பேரின்பபாலசுப்பிரமணியராசா கபிலேஷன்
(அரசவீதி, உரும்பராய் கிழக்கு)
ஐ. புவனேஸ்வரன்
(அச்சுவேலி)
நி. ஜெயந்தன்
(மங்கை ஸ்ரோர்ஸ், நீர்வேலி)

சு. சந்திரலிங்கம்
(ஆனைக்கோட்டை)
பாலகுரு விமலேந்திரன்
(குரு பிறிண்ரேஸ், ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி)
பொ. கந்தையா
(புருடிலேன், அரியாலை)
செ. கிருஷ்ணராஜா
(கலட்டி வீதி, கோண்டாவில்)
வை. சிற்றம்பலம்
(தேவி வாசம், கொக்குவில்)
மா. தங்கவேல்
(சுண்ணாகம்)
வரதலிங்கம் செல்வமோகன்
(மோகன்கடை, ஆவரங்கால்)
திருமதி கண்மணி கணபதிப்பிள்ளை
(பத்தமேனி, அச்சுவேலி)
தா. தர்மலிங்கம்
(கொக்குவில்)
த. கணேசலிங்கம்
(தில்லையம்பலம் கந்தையா ஸ்ரோர்ஸ், ஆனைக்கோட்டை)
ம.செ. சபாநாயகம்
(மாலிசந்தி, கரவெட்டி)
K. வேணுகோபாலு
(வேணி இல்லம், புலோலி)
S. மிகிந்தலா
(ரூபின்ஸ் வைத்தியசாலை, கரவெட்டி)
திருமதி S. உமாரதி
(மங்கை இல்லம், உடுப்பிட்டி)
செ. ஸ்ரீதரன்
(விமலவாசா, உச்சில் ஒழுங்கை, கரவெட்டி)
சி. மதியழகன்
(திக்கம், அல்வாய்)
ஜெகநாதன் ஜனனி
(யாழ்ப்பாணம்)
சிவரஞ்சன் கலைவாணி
(போதராமடம், துன்னாலை)

**ஐ. சிவஞானம்**
(கமலபதி, கரவெட்டி)
**அ. சின்னத்தம்பி**
(மாய்க்கிராயன், துன்னாலை)
**கதிரவேலு சதாசிவம்**
(அந்திரான், கரவெட்டி)
**ச. ஜெகசோதிராசா**
(ஆனைக்கோட்டை மேற்கு)
**ம. பிரசாந்தன்**
(யாழ்ப்பாணம்)
**த. முருகானந்தா**
(பிரம்படிலேன், கொக்குவில்)
**A.T. கதிரவேல்**
(திருநெல்வேலி, யாழ்ப்பாணம்)
**த. யாழினி**
(கந்தர்மடம், யாழ்ப்பாணம்)
**ஆறுமுகம் மயில்வாகனம்**
(இணுவில் கிழக்கு)
**வே. பாண்டியர்**
(கைதடி தெற்கு)
**வ. இராசையா**
(இருபாலைவீதி, கோப்பாய்)
**சோ. இராசலிங்கம்**
(ஆவரங்கால் கிழக்கு)
**சி.க. இராசரெத்தினம்**
(பத்தமேனி, அச்சுவேலி)
**K. குலரெட்ணம்**
(நவாலி வடக்கு, மானிப்பாய்)
**சி. பாலபாரதி**
(கற்கோவளம், பருத்தித்துறை)
**சு. பானுஜா**
(துன்னாலை, கரவெட்டி)
**ச. தெட்சணாமூர்த்தி**
(கோண்டாவில்)
**ஜெயசந்திரபோஸ் இந்திராணி**
(அச்சுவேலி)

# கடவுளின் வழிபாடு ஆன்மாவின் அத்தியாவசியத் தேவை

– திரு குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள் –

இன்று நாம் வாழ்கின்ற காலப்பகுதி, முன்னர் என்றும் இல்லாத அளவிற்கு மக்களின் வாழ்க்கை முறையில் அவதியும் அவசரமும் அந்தரமும் ஆக்கிரமிப்புச் செய்து வருவதைக் காணக்கூடியதாக உள்ளது. காலையில் அவதி அவதியாக எழுந்து; காலைக் கடன்களை அரைகுறையாக முடிக்கின்றனர். உணவு சமைப்பதிலும், உண்பதிலும் கூட அவசரம். உடைகளை அணிவதிலும் அவசரம். இடையில் யாரும் தெரிந்தவர்கள் எதிர்ப்பட்டால், அவர்களுக்கு வணக்கம் கூறி, குசலம் விசாரிப்பதிலும் அவசரம். பலர் நடப்பதில்லை; ஓடுகிறார்கள். இல்லை இல்லை பறக்கிறார்கள். வாகனங்களில் செல்பவர்களின் கவனம் வேறிடங்களில் சுற்றி வட்டமிட; வீதி விபத்துக்கள் தவிர்க்கமுடியாதனவாகிவிட்டன. அலுவலகங்களிலும், வேலைத் தலங்களிலும், பாடசாலைகளிலும், தத்தம் கருமங்களிலும் அவசரம் தான் முன்னிற்கிறது. அவ்வாறே, முடிவுகள், தீர்மானங்கள் என்பவற்றை எடுப்பதிலும்; நடைமுறைப்படுத்துவதிலும்கூட, அவதியும் அவசரமும்தான் முதன்மை பெறுகின்றன. அவ்வாறே எடுத்த தீர்மானங்களை இடையில் கைவிடுவதிலும் அவசரம். பின்னர் வீடு திரும்புவதிலும் அவசரம், வீதிகளில் மட்டும் வாகனங்கள் ஊர்ந்து செல்லவேண்டிய நிலை. காரணம் வாகனங்களின் அதிகரிப்பால் ஏற்படுகின்ற நெரிசல். ஒருவரின் பாதி ஆயுட்காலம் வீதிகளிலேயே செலவாகி விடுகின்றன. வீதிகளிலும் மனதிற்கு நிம்மதியோ, அமைதியோ இல்லை. மனம் அலைந்து கொண்டும்; பிறரைச் சபித்துக்கொண்டும் இருப்பதால் அதனை அந்தரம், அமைதியின்மை என்பன ஆக்கிரமிக்கின்றன.

தற்காலத்தில் மனித வாழ்க்கையில் எங்கும் எதிலும் அங்கிங்கெனாதபடி நீக்கமற வியாபித்து மனித வாழ்க்கையை முற்றுமுழுதாக ஆக்கிரமித்துக்கொண்டும்; அதிகாரம் செலுத்திக்கொண்டும் இருக்கின்றன, இந்த "அவசரம்" என்கின்ற பித்து. அவதியும் அந்தரமும் அதனுடன் கூடப்பிறந்தவை. அவை தற்கால மனிதரைப் படுத்தாத பாடுபடுத்துகின்றன. மனிதரும் அவற்றுடன் உறவுகொண்டு, ஆதரித்து வருகின்றனர். கடவுளின் இடத்தை, அவசரம் எடுத்துவிட்டமையே இந்த அவலங்களுக்கெல்லாம் காரணம்.

எத்தனையோ மனிதர்கள் அவசர புத்தியினால் அலைக்களிக்கப்பட்டு மன இறுக்கம், பதகளிப்பு, மன அழுத்தம், மனவேதனை போன்ற மனநோய்களுக்கும்; உளப்பிணிகளுக்கும் உள்ளாகின்றனர். உடல் நோய்களுக்கு முக்கிய காரணம் உளப்பிணிகள் என்பது மருத்துவர்களின் முடிவு. மனமது செம்மையானால்; மந்திரம் தேவையில்லை, மருந்தும் தேவை இல்லை. உடல் நோய்களும் ஏற்படாமல் தவிர்த்துக்கொள்ள முடியும்.

எத்தனையோ பேர் அவசியக் கடமைகளையும் அலுவல்களையும் கூட அவசர புத்தியினால் தவறவிட்டு விடுகின்றனர். பின்னர் வருந்துகின்றனர். நிலத்தில் கொட்டிவிட்ட பால்; கடந்துவிட்ட காலம்; விட்டுவிட்ட இளமை இவற்றை மீளப்பெறுதல் மனித இயல்புக்கு அப்பாற்பட்டது.

*உடல் அமைதிபெற மனதை எப்பொழுதும் அமைதியாக வைத்துக்கொள்.*

அதேவேளை அவசரப்படவேண்டிய, அவசிய கருமங்களை ஆறப்போடுவதிலும்; பின்னர் பார்த்துக்கொள்ளலாம் எனச் சமாதானம் கூறி; அவற்றைப் பின்போடுவதிலும், ஒத்தி வைப் பதிலும்; பின்னர் மறந்து விடுவதிலும்; இக்காலத்தவர் சமர்த்தர்களாகவும், சாதுரியமானவர் களாகவும் உள்ளனர்.

கடவுள் வழிபாடு பற்றித்தான், இங்கு குறிப்பிடப்படுகிறது. இன்று, கடவுளை நாடு வதிலோ; இறைவனைச் சிலநிமிட நேரமாதல், மனத்தினால் சிந்திப்பதிலோ; ஆலய வழிபாடு செய்வதிலோ, பிரார்த்தனையில் ஈடுபடுவதிலோ, தற்கால மனிதர்களில் பெரும்பாலானவர்கள்; சிரத்தை கொள்வதாக இல்லை. மக்கள் மத்தியில், அமைதி குலைந்திருப்பதற்கும்; நிம்மதி குன்றியிருப்பதற்கும்; பிரச்சினைகள், அவலங்கள், அனர்த்தங்கள், நோய்கள், பிணிகள், துன்பங் கள், துயர்கள்; தாராளமயப்படுத்தப்பட்டிருப்பதற்கும்; பிரதான காரணம் இப்பொழுது புரிகிற தல்லவா? இனியும் மனிதர்கள் இவ்வுண்மையைப் புரிந்துகொள்ள மறுத்தால்; நல்லபடி வாழ மறுத்தவர்கள் ஆகிவிடுகின்றனர்.

கடவுளைப் பற்றி நினைக்காத நாளும்; பேசாத நாளும்; கடவுளைப் பிரார்த்தனை செய்யா நாளும்; பிறவாத நாளாக எண்ணுபவர்கள் நாம். "பேசாத நாளெல்லாம் பிறவா நாளே" என்கிறார்; "மனிதப் பிறவியும் வேண்டுவதே, இந்த மாநிலத்தே", என்று தில்லைக் கூத்தனை வேண்டுதல் செய்தவர் திருநாவுக்கரசு நாயனார். எனவேதான் "நின்றும், இருந்தும், நடந்தும், கிடந்தும்; என்றும் அவன்தாள் நினை" என்று நமது அருளாளர்கள் எமக்கு அறிவுரை கூறியுள்ளார்கள். நாம்தான், மூத்தோர், பெரியோர், பெற்றோர், அறிவோர் சொல்லும் அமுத வார்த்தைகளைச் செவிமடுப்பதில்லை என்று சத்தியப்பிரமாணம் எடுத்து விட்டோமே! "மூத்தோர் வார்த்தை அமிர்தம்" என்கின்ற முதுமொழியை விலக்கிவிட்டு அல்லல் படுவதிலும்; அல்லல் களைப் பிறருக்கு வழங்குவதிலும் முழுமையாக ஈடுபட்டு வருகின்றோமே! கலிகாலக் கோலம் இப்படித்தான் என்று கூறிவிட்டு, அமைதி கொள்கிறார்கள். மூத்தோர், பெரியோர்கள். வேறு என்ன செய்வர். "மௌனம் கலகநாஸ்தி" என்கின்ற மகாவாக்கியம் தற்காலத்திற்குத்தான் மிகப்பொருத்தமாக உள்ளது. "தன்னைத்தான் காக்கில் மௌனம் காக்க" என்ற அனுபவ ரீதியாகக் கிடைக்கப்பெற்ற புதுமொழி; ஆயிரம் பொற்காசு பெறுமதியைக் கொண்டுள்ளது. ஆற்றாமையின் விளைவேயன்றி; இது ஆன்மீகத்தின் விளைவு அன்று. நரித்துறவு என்பதும் இதுதானோ!

மனிதப்பிறவியெடுத்த நாம், கடவுள் நினைப்புடன் என்றும் வாழவேண்டியவர்கள். "அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது" என்கிறார் ஔவையார். "இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ, யாதுமறியோம்" என்கிறார் ஓர் அருளாளர். பிறப்பும் இறப்பும் நம் கையில் இல்லை என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். எமக்குப் பூர்வ புண்ணியத்தின் பயனாகக் கிடைக்கப்பெற்ற மனிதப் பிறவியைத் துர்ப்பிரயோகம் செய்தல் ஆகாது. "மனிதப் பிறவியெடுத்ததன் நோக்கம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்" என்கிறார் நமது ஐந்தாங்குரவரான நாவலர் பெருமான்.

கடவுள் நினைப்புடன் என்றும் வாழவேண்டியவர்கள் நாம். அதற்கு ஒரு சிறந்த வழி பிரார்த்தனை செய்தல். இறைவனுடன் கொள்ளுகின்ற உறவுதான் பிரார்த்தனை என்றும், அதன்மூலம் எண்ணங்கள், சிந்தனைகள், உணர்வுகள், பேச்சுக்கள், செயல்கள் யாவும் இறைவன் பற்றியதாக மேல்நிலைக்கு உயர்த்தப்படுகின்றன என்று பெரியோர் கூறியுள்ளனர்.

*பிறருடைய குற்றச்சாட்டுக்கு ஒருபோதும் செவிசாய்க்காதே.*

கடவுளைச் சிந்தித்தல், தியானித்தல், துதித்தல், நாமங்களை உச்சரித்தல், தோத்திரஞ் செய்தல், வழிபடுதல் என்பவற்றில் ஈடுபடும் காலம், தவப்பொழுதாக அமைகின்றது.

"பிரார்த்தனை ஆத்மாவின் அத்தியாவசியத் தேவையாகும். மூச்சுக்காற்று நாம் உயிர் வாழ்வதற்கு எத்துணை இன்றியமையாததோ, அத்துணை முக்கியத்துவம் வாய்ந்தது பிரார்த்தனை. "ஒவ்வொரு முறையும், கடவுளின் பெயரை திரும்பத் திரும்பச் சொல்லும்போதும் கடவுளின் அருகே நீங்கள் வருகிறீர்கள்" என்கிறார் காந்தியடிகள். மகாத்மா காந்தி, பிரார்த்தனைமூலம் சத்தியம், அஹிம்சை என்பவற்றின் உறுதுணையுடன்தான்; மாபெரும் சாதனைகளையெல்லாம் நிலைநாட்டினார். அடிமைப்பட்டுக் கிடந்த பாரத நாட்டிற்குக் கத்தியின்றி, ஒரு துளி இரத்தமுஞ் சிந்தாமல், மாபெரும் சாம்ராஜ்யத்தின் பிடியிலிருந்து ஆங்கிலேயரின் அடிமைத் தனத்திலிருந்து, இந்தியா தேசத்திற்கு விடுதலை பெற்றுக்கொடுத்தார்.

கடவுள் வழிபாடு, ஆன்மா எனப்படுகின்ற நம் உயிரின் தேவை. உடல் தேவைகள்- (பசி, தாகம், கழிவகற்றல் என்பன) போன்றே; உயிரின் தேவையும் உடனுக்குடன் காலம் தாழ்த்தாமல், நிறைவேற்றப்படவேண்டிய தேவை என்பதை நாம் உணர்வோமாக. உடலைப் போஷித்து வளர்ப்பது போன்றே; நம் உயிரின் தேவையையும் பூர்த்தி செய்தல்; விருத்தெரிந்த இளமை தொட்டு; மரணபரியந்தம் தொடர்ந்து நடைபெறவேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு; உடனடியாகச் செயலிலும் இறங்கவேண்டும் என்ற தவிப்பை நிறைவு செய்வோமாக.

"வாழ்க வளமுடன், வாழ்க வையகம்"

"வையகமுந் துயர் தீர்கவே"

---

## மகான்களின் மகிமை

14.04.2018 விளம்பி வருஷப் பிறப்பன்று நானும் பிள்ளைகளும் சந்நிதியானைத் தரிசித்துவிட்டு மோகன் சுவாமியிடம் கைவிஷேடம் பெற்றுக்கொள்வதற்காக சந்நிதியான் ஆச்சிரமத்திற்குச் சென்றிருந்தோம். நாம் மதியம் 12.00 மணியளவில் அங்கு சென்றதும் சொற்ப நேரத்தில் எமக்கு உணவு பரிமாறப்பட்டு வயிற்றுப்பசி தீர்த்தபின்னர் அடியவர்கள் அமர்வதற்காக ஒதுக்கப்பட்ட இருக்கையில் நீண்டநேரமாக காத்திருக்கின்றோம். எனக்கு இது கஷ்டமாக இருக்கவில்லை. ஆனால் எனது பிள்ளைகளுக்கு இது ஒரு சங்கடமாகத் தோன்றியது. ஆனாலும் அவர்கள் ஐயாவிடம் கைவிசேடம் வாங்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார்கள். அன்னதானக் கந்தனிடம் வழிபாடு நிறைவு செய்த அடியார் கூட்டம் தொடர்ந்து வந்துகொண்டே இருக்கின்றது. அன்னதானம் வழங்குகின்ற சகோதரர்களும் உண்மையில் களைத்துவிட்டனர். அவ்வளவு அடியார் கூட்டம். அவ்வடியவர்களுக்கு அன்னதானத்தை நிறைவாக வழங்கவேண்டும் என்கின்ற எண்ணம் மட்டும்தான் சுவாமிகளிடம் நிறைந்திருந்தது. ஆனாலும் திடீரென எங்கள் பக்கம் பார்வைபட்டதும் வழமையாக எமக்கெல்லாம் கைவிசேடம் தருவதற்கு பூஜை அறைக்குச் சென்று எமக்கு கைவிசேடத்தை அன்பாகவும் மகிழ்ச்சியுடனும் தந்தார். நாம் அவரது ஆசீர்வாதத்தை பெற்ற பின்னர்தான் கைவிசேட புண்ணிய நேரம் மதியம் 1.30 முதல் 2 மணிவரை கைத்தொலைபேசியில் பார்வையிடுகின்றேன். ஐயா எமக்கு 1.45 மணியளவில் தான் கைவிசேடம் தந்திருக்கிறார். அப்பொழுதுதான் நான் கூறினேன் ஐயா நேரம் பார்க்காமல் எமக்கு உகந்த நேரத்தில் கைவிசேடம் தந்திருக்கிறார். இதுதான் மகான்களுக்குரிய மாண்பு.

~திருமதி த. வசந்தகுமாரி~

*உனது நன்மையைக் கருதிப் பிறருக்குத் தீங்கு செய்யக்கூடாது.*

(தொடர்ச்சி...)

# திருச்சதகம்

## பத்திவைராக்கிய விசித்திரம்

(திருப்பெருந்துறையிலருளிச் செய்யப்பட்டது)

மறைந்த
– சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள் –
(யாழ்ப்பாணம் – காரைநகர்)

## 06. அநுபோக சுத்தி

59. மானேர் நோக்கி யுமையாள் பங்கா வந்திங் காட்கொண்ட
தேனே அமுதே கரும்பின் தெளிவே சிவனே தென்தில்லைக்
கோனே யுன்றன் திருக்குறிப்புக் கூடு வார்நின் கழல்கூட
ஊனார் புழுக்கூ டிதுகாத்திங் கிருப்ப தானேன் உடையானே.

**ப-ரை:**

மான் நேர் நோக்கி உமையாள் பங்கா- மானினது நோக்குப் போலும் நோக்கினையுடைய உமையம்மையை ஒரு கூற்றிலுடையவனே, இங்கு வந்து ஆட்கொண்ட- இந்நிலவுலகத்தில் பரமாசாரியனாக வலிய எழுந்தருளி வந்து என்னை அடிமை கொண்டருளிய தேனே அமுதே கரும்பின் தெளிவே- தேனும் அமுதமும் கருப்பஞ்சாறும் போன்றவனே, சிவனே- சிவன் என்னும் நாமம் நினக்கேயுரிய செம்மேனி யெம்மானே, தென்தில்லை கோனே- தெற்கின் கட் தில்லைச் சிற்றம்பலத்தின் கண் எழுந்தருளியிருக்கும் கூத்தப்பிரானே, உடையானே- எல்லா உலகங்களையும் உயிர்களையும் உடமையாகவும் அடிமையாகவும் உடையவனே, உன் தன் திருக்குறிப்பு கூடுவார் நின் கழல்கூட- நின்தன் திருவுள்ளக் கருத்துப் பொருந்தப்பெற்ற மெய்யடியார்கள் நின் திருவடியை அடைய, ஊன் ஆர் புழு கூடு இது காத்து- யானோ தசை நிறைந்த புழுக்கூடாகிய இவ்வுடலைப் பாதுகாத்து, இங்கு இருப்பதானேன்- இந்நிலவுலகத்தில் இருக்க வேண்டியவனாயினேன். இது தகுமோ?

உமையாள் பங்கா, இங்கு வந்து ஆட்கொண்ட தேனே அமுதே கரும்பின் தெளிவே சிவனே தில்லைக்கோனே உடையானே நின்தன் திருவுள்ளக்குறிப்புக் கூடுவார் நின் திருவடியை அடைய, யானோ புழுக் கூடாகிய இவ்வுடலைப் பாதுகாத்து இந்நிலவுலகில் இருக்கவேண்டிய வனாயினேன், இது தகுமோ என்பதாம்.

மானேர் நோக்கி உமையாள்- மானின்மட நோக்குப் போலும் நோக்கினையுடைய உமையாள். "மானேர் நோக்கியுடையாள் பங்கா" (சத 85) எனவும் "மான்மட நோக்கி" (திருக்கோவை 21) எனவும் வருவன காண்க. உமையாள் பங்கா என்றார், இறைவன் அடிகளை ஆட்கொள்ள வந்த காலத்துத் திருவருட்சத்தியோடு வந்தமையின் இங்கு வந்து- இந் நில வுலகில் வலிய வந்து. "அரையாடு நாக மசைத்தபிரான் அவனியின் மேல், வரையாடு மங்கைதன் பங்கொடும்வந் தாண்டதிறம்" (தெள்6) என அடிகள் பிறாண்டும் அருளியமை காண்க. இறைவனது திருவருட் காட்சி அடிகட்குக் கழிபேரின்பமும் உறுதியும் பயந்தமையின்

"தேனே அமுதே கரும்பின் தெளிவே" என விளித்தார். "தேனே யமுதே கரும்பின் தெளிவே தித்திக்கும் மானே" (சத 90) என வருதலுங் காண்க.

தென்தில்லை- தெற்கின்கட்டில்லை (திருக்கோவை 127 பேர்) நின்னால் ஆட்கொள் ளப்பட்டவர்களில் நின் திருவுள்ளக் குறிப்புப் பொருந்தப்பெற்ற மெய்யடியார்கள் நின் திருவடியை அடைய, அதனைப் பொருந்தப் பெறமாட்டாத யான் இவ்வுடலை ஓம்பி இங்கு இருக்க வேண்டியவனானேன்; இது தகுமோ என்பார் "உன்றன் திருக்குறிப்புக் கூடுவார் நின்கழல் கூடப் புழுக்கூடிது காத்திங் கிருப்பதானேன்" என்று அருளிச் செய்தார். அடியேனை யும் கழல் கூடும் வண்ணம் அருள்செய்ய வேண்டும் என்பது குறிப்பு இவ்வுடம்பு எடுத்ததன் பயன் இறைவன் திருவடியை அடைதலேயென்பது,

"படிறாயின சொல்லிப் பாழுட லோம்பிப் பலகடைச்சென்
றிடறா தொழிது மெழுநெஞ்சமே யெரியாடி யெம்மான்
கடறாயின நஞ்ச முண்ட பிரான் கழல்சேர்தல் கண்டா
யுடறா னுள பயனாவ சொன்னே னிவ்வுலகி னுள்ளே"

(பொன்வண்ணத் 13)

எனப் பதினோராந் திருமுறையில் வருதலானுமறிக.

இதன்கண், ஊனார் புழுக்கூடிது காத்திங் கிருப்பதானேன் என்பதனால் பிராரத்த வினையினால் உண்டாகும் அநுபோகங்களின் தீமையை நீக்கி அருளவேண்டுமென்பது பெறப்படுதலின் அநுபோகசுத்தி என்னும் ஆறாம்பத்து நுதலிய பொருள் போந்தவாறு காண்க. 55.

60\. உடையா னேநின் றனையுள்கி யுள்ள முருகும் பெருங்காதல்
உடையார் உடையாய் நின்பாதஞ் சேரக் கண்டிங் கூர்நாயின்
கடையா னேன்நெஞ் சுருகாதேன் கல்லா மனத்தேன் கசியாதேன்
முடையார் புழுக்கூ டிதுகாத்திங் கிருப்பதாக முடித்தாயே.

**ப-ரை:**

உடையானே- என்னை ஆளாகவுடையவனே, நின்தனை உள்கி- நின்னை நினைந்து, உள்ளம் உருகும் பெரு காதல் உடையார்- மனம் உருகுகின்ற பேரன்பினை உடையவர்கள், உடையாய் நின்பாதம் சேர கண்டு- தம்மை அடிமையாக உடையையாகிய நின் திருவடிகளை அடையக் கண்டு வைத்தும். இங்கு ஊர் நாயின் கடையானேன்- இவ்வுலகில் ஊரில் அலைந்து திரியும் நாயினும் கடைப்பட்டவனும், நெஞ்சு உருகாதேன்- அன்பின்மையால் உள்ளம் உருகாதவனும், கல் ஆம் மனத்தேன்- கல்லைப் போன்ற மனத்தினையுடையவனும், கசியாதேன்- அதனால் மனம் நெகிழப் பெறாதவனுமாகிய யான், முடை ஆர் புழுகூடு இது காத்து- தீயநாற்றம் நிறைந்த புழுக்கூடாகிய இவ்வுடம்பைப் பாதுகாத்துக்கொண்டு, இங்கு இருப்பதாக முடித்தாயே- இந்நிலவுலகத்தில் இருக்கவேண்டியவனாக முடிவு செய்து விட்டனையோ.

உடையவனே, நின்னை நினைந்து உள்ளமுருகும் பெருங் காதலுடையவர்கள் தம்மை அடிமையாக உடையையாகிய நின் திருவடியை அடையக் கண்டும், இவ்வுலகில் ஊர் நாயினும் கடைப்பட்டவனும் அன்பின்மையால் உள்ளமுருகாதவனும் கல்போன்ற

மனத்தினையுடையவனும் அதனால் மனம் நெகிழப் பெறாதவனுமாகிய யான் முடையார் புழுக்கூடாகிய இவ்வுடம்பைப் பாதுகாத்துக்கொண்டு இங்கு இருக்கவேண்டியவனாக முடிவு செய்து விட்டனையோ? என்வினை இருந்தவாறென்னே என்பதாம்.

உள்குதல்- நினைத்தல். காதல்- அன்பு. உள்ளம் உள்குதற்கும் உருகுதற்கும் பெருங்காதல் ஏதுவாகும். பெருங்காதலுடையார் என்றது மெய்யன்பர்களை. உடையாய் நின்பாதம் என்றது அம்மெய்யன்பர்களை அடிமையாக வுடையையாகிய நினது திருவடியென்ற வாறு. ஈண்டு உடையாய் என்பது முன்னிலை வினையாலணையும் பெயர். கண்டும் என்புழி உம்மை தொக்குநின்றது, கண்டும் உருகாதேன் என இயையும்.

ஊர்நாய்- தன்னை வளர்ப்பவரின்மையால் ஊனுக்கும் உறைவிடத்துக்கும் ஊரில் அலைந்து திரியும் நாய். ஊர்நாயிற் கடையானேன் என்பது முதலாக அடிகள் தம்மைப்பற்றிக் கூறியன. "பணியுமா மென்றும் பெருமை" (குறள்) என்னும் முறைமை பற்றியனவாகும். கல்லா மனத்தேன் என்பதற்குத் தத்துவ ஞானத்தையுதவும் நூல்களைக் கற்றறியாத மனத்தையுடையேன் எனினுமாம். கசிதல்- உள்ளம் உருகுதற்கு முன்னிகழும் நிகழ்ச்சி. "கருணையே நோக்கிக் கசந்துளம் உருகி" (வாழாப் 7) "கசிந்துருக வேண்டுவனே" (புலம்3) "கசிந்துருகக் கேதங்கெடுத்தென்னை யாண்டருளும்" (வார்த்தை 9) முடை- புலால் நாற்றம் எனினுமாம். முடித்தாயே- ஏ, வினாப்பொருட்டு.

இதன்கண், கூடிது காத்திங்கிருப்பதாக முடித்தாயே என்றதனால் உடலோடு இருக்கும் காலத்துளவாகும் அநுபோகங்களால் தீங்குண்டாகாதவாறு அவற்றை நீக்கியருள வேண்டுமென்பது பெறப்படுதலின் அநுபோகசுத்தியென்னும் ஆறாம்பத்து நுதலிய பொருள் போந்தவாறு காண்க. 56

(தொடரும்...

## வைர வியாபாரி

வைர வியாபாரி ஒருவன் தன் வைரங்கள் அனைத்தையும் விற்றுவிட்டு பணத்தை ஒரு முட்டையில் கட்டிக்கொண்டு தன் சொந்த ஊருக்கு திரும்பிக்கொண்டிருந்தான். வழியில் ஒரு ஆற்றைக் கடக்கவேண்டி இருந்தது. ஆனால், எதிர்பாராதவிதமாக அந்த ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. வெள்ளத்தைப் பொருட்படுத்தாத வைர வியாபாரி எப்படியாவது ஆற்றைக் கடந்து சென்றுவிடலாம் என்று எண்ணி அந்த ஆற்றில் இறங்கினான். அப்போது வெள்ளம் அவனை நிலை தடுமாறச் செய்தது. இதனால் அவன் தன் பணமுட்டையை வெள்ளத்தில் தவறவிட்டான். உடனே ஐயோ என் பணமுட்டையை வெள்ளம் அடித்துச் செல்கிறதே யாராவது காப்பாற்றுங்கள் என்று கதறினான். அந்த ஆற்றில் மீன் பிடித்துக்கொண்டிருந்த ஒரு மீனவனின் காதில் இந்த வைர வியாபாரியின் கதறல் சத்தம் கேட்டது. உடனே அவன் ஆற்றில் குதித்து கடுமையாகப் போராடி அந்தப் பணமுட்டையை எப்படியோ மீட்டு எடுத்து கரையை அடைந்தான். இந்தப் பணமுட்டையை காப்பாற்ற சொல்லி யாரோ கதறினீர்களே, நீங்கள் எங்கு இருக்கிறீர்கள்? நான் உங்கள் பண முட்டையை மீட்டுக்கொண்டு வந்துவிட்டேன். வந்து பெற்றுக்கொள்ளுங்கள் என்று சத்தம் போட்டு அழைத்தான். ஆனால் வெகுநேரம் ஆகியும் யாரும் அதைப் பெற வரவில்லை. பிறகுதான் அவனுக்குப் புரிந்தது. அந்தப் பணமுட்டைக்குச் சொந்தக்காரர் ஆற்று வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டார் என்று. ஐயோ பாவம். அந்தப் பணக்காரர் இந்தப் பணமுட்டைக்குப் பதிலாக தன்னைக் காப்பாற்றும்படி குரல் கொடுத்திருந்தால் அவரைக் காப்பாற்றி இருப்பேனோ என்று அந்த மீனவன் வருந்தினான். இப்படித்தான் நாமும் நம் தேவைகளை சில நேரங்களில் இறைவனிடம் சரியாக வேண்டாமல் வெறும் பணத்தை மட்டுமே வேண்டுகிறோம். அதனால் பல நேரங்களில் நாம் நம் வாழ்வில் உயிருக்கு சமமான நிம்மதியை இழக்கநேரிடுகிறது.

*உன்னைத் தேடி எது வந்தாலும், அது உன் நன்மைக்கே என்று எடுத்துக்கொள்.*

# வரலாற்று ஒளியில் அருணகிரிநாத சுவாமிகள் அருளிய ஈழத்துத் திருப்புகழ் பாடற் சிறப்புக்கள்

– திரு கௌ. சித்தாந்தன் அவர்கள் –

## ஆய்வுச்சுருக்கம்

முருகவழிபாடு இலங்கைத் தமிழ்ச் சைவர்களின் மிகத்தொன்மை வாய்ந்த வழிபாடாகும். இதன் மிகச் சிறந்த அடையாள இடமாக விளங்குவது கதிர்காமத்தலமாகும். முருகப்பெருமானின் சக்திகளாகிய வள்ளி, தெய்வானை என்னும் இருவரில் இச்சாசக்தியான 'வள்ளி' இலங்கையைச் சேர்ந்த வேட்டுவ குலப் பெண்ணாவாள். இவளின் வாழ்விடமாகிய கதிர்காமத்தில் முருகப்பெருமான் விரும்பியுறைகின்ற காரணத்தினால் அவரைத் தரிசிப்பதற்கு இலங்கையைச் சேர்ந்தவர்களும் ஏனையவர்களும் கதிர்காமம் வந்து பலவாறு பரவுவார்கள். கதிர்காம முருகனைத் தமது புலமையாற்றலால் பாடிப் பரவியவர்களில் அருணகிரிநாத சுவாமிகளும் ஒருவர். இவர் முருகனருள் பெற்ற மகான். இக்கட்டானதொரு காலகட்டத்தில் இத்தலத்தின் மீது திருப்புகழ் பாடியமையால் இவ்வாலயம் பல சிறப்புக்களைப் பெற்றது.

## அறிமுகம்

தமிழ்நாட்டுப் பல்லவ - பாண்டிய மன்னர் காலத்தில் வாழ்ந்த ஞானசம்பந்தப் பெருமானும், சுந்தரமூர்த்திசுவாமிகளும் ஈழத்துச் சிவத்தலங்களான திருக்கேதீச்சரம், திருக் கோணேச்சரம் என்பவற்றின் மீது (சுந்தரர் திருக்கேதீச்சரம் மட்டும்) பதிகம் பாடி 'பாடல்பெற்ற சிவத்தலங்கள்' என்ற மகிமையினை இத்தலங்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்தமை போன்று கி.பி பதினைந்தாம் நூற்றாண்டினராகக் கருதப்படும் அருணகிரிநாத சுவாமிகள் கதிர்காமம், கந்தவனம் முதலான முருகத்தலங்கள் மீது சந்தத் திருப்புகழ் பாடி இவற்றையும் பாடல்பெற்ற தலங்கள் என்ற சிறப்புக்கு உரித்தாக்கினார். அருணகிரிநாதருக்குப் பின்பு இலங்கையைச் சேர்ந்த பல சைவப் பெரியார்கள் கதிர்காமத் தலத்தின்மீது பல்வேறு வகையான பிரபந்தங் களைப் பாடியருளியிருந்தாலும் திருப்புகழுக்குரிய இடத்தை அவற்றால் பெறமுடியவில்லை. இத்தகைய ஆற்றல்மிக்க ஈழத்துத் திருப்புகழ்ப் பாடற் சிறப்பினை அது பாடப்பெற்ற காலப் பகைப்புலம், அதன் உள்ளடக்கச் சிறப்பு என்ற வகையிற் பகுத்து நோக்கலாம்.

## திருப்புகழ் தோன்றிய காலச் சூழல்

"வீரவேல், தாரைவேல், விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல், செவ்வேள், திருக்கைவேல் வாரி
குளித்தவேல், கொற்றவேல், சூர்மார்பும் குன்றும்
துளைத்தவேல் உண்டே துணை"

எனும் அச்சம் நீக்கி அபயமளிக்கும் பாடல் திருமுருகாற்றுப்படையின் வேறாக, அந்த நூலின் தனிப் பாடல் பகுதியில் வருவது. இப்பாடலைத் தமிழகத்திலும் சரி, இலங்கையிலும்

சரி வாழ்கின்ற சைவத் தமிழர்கள் தமக்கு விரோதிகளால் இடர் ஏற்படும் காலங்களில் எல்லாம் பாடிப்பரவிப் பயன்பெறுவது வழக்கம். அருணகிரியாரின் திருப்புகழிலே அவரின் தனிப்பட்ட வாழ்வின் பாதிப்பும் விரவிக் காணப்பட்டாலும் அப்பாடல்களுக்கு சமயம் சார்ந்த பங்களிப்பும் உண்டு.

சோழராட்சியின் பின்னர் தமிழ்நாடு வலிகுன்றி, நிலை தளர்ந்த நிலையில் அந்நியப் படையெடுப்புக்கள் ஏற்பட்டு கோயில்கள் இடிக்கப்பட்டும், ஆலயச்சொத்துக்கள் சூறையாடப்பட்டும் பேரச்சத்தை எமது மக்களுக்கு ஏற்படுத்திய ஒரு சூழலில் அந்த அச்சத்தைப் போக்க முருகவழிபாடு தலையெடுத்தது. இந்த அடிப்படையில்தான் அருணகிரிநாதரின் வரவைப் பார்க்கவேண்டியிருக்கின்றது. தாயுமானவர்முதல் தொடர்ந்து பலவேறு காலங்களிலும் வாழ்ந்த சித்தர்கள் வரை அருணகிரியாரின் பாடலின் செல்வாக்கிற்குட்பட்டமை தெரிகின்றது. இவர் பாடிய திருப்புகழ்களின் மொத்த எண்ணிக்கை 16000 என்பர். ஆயினும் 1307 பாடல்களே எமக்குக் கிடைத்தன. இவற்றில் ஈழத்துத் திருப்புகழ் முப்பத்து நான்கு வரையிலாகும்.

### ஈழமும் அருணகிரியும்

அருணகிரிநாதர் தமிழ்நாட்டிலே வாழ்ந்த காலத்திலே இலங்கையில் போர்த்துக்கேயர் ஆட்சி நிலவியிருந்திருக்கின்றது. இலங்கைத் தமிழ்ச்சைவர் வரலாற்றில் அஃது ஓர் இருண்டகாலம் என்று கூறலாம். இலங்கைச் சைவப்பெரியாரான ஞானப்பிரகாசமுனிவர் இங்கு சைவப்பணியாற்ற முடியாமல் தமிழகம் சென்று பணியாற்றிய காலம். இலங்கைச் சைவர்கள் வெளிப்படையாகத் தமது சமய அநுட்டானங்களையோ, வழிபாடுகளையோ மேற்கொள்ளமுடியாது அச்சத்துடன் வாழ்ந்த காலம். எனவே இந்த அச்சத்தைப் போக்கி சைவத்தை வாழவைப்பதற்கான பணிகளில் ஒன்றாக அருணகிரிநாதர் ஈழத்தின் முருகத் தலங்கள் மீது திருப்புகழ் பாடியிருக்கின்றார்.

ஈழத்தில் கதிர்காமம், நல்லூர், கந்தவனம், திருகோணமலை எனும் நான்கு தலத்தின் மீது திருப்புகழ் பாடப்பட்டிருக்கின்றது. 34 பாடல்களில் 31 பாடல்கள் கதிர்காமத் தலத்தின்மீது பாடப்பெற்றதிலிருந்து அத்தலத்தின் பெருமையினை உணர்ந்து கொள்ளலாம். இத்தலம் தொடர்பாக "திருமகளுலாவு மிருபுயமுராரி ....." (01), "எதிரிலாத பக்தி தனைமேவி....." (02), "இறவாமற் பிறவாமல்...." (30) என்று தொடங்கும் திருப்புகழ் பாடல்களைத் தெரியாத ஈழத்துத் தமிழ்ச்சைவர் இரார். ஏனைய பாடல்களும் சந்தச் சிறப்பும், கருத்துச் செறிவும் உடையவை.

### நேரில் வந்து பாடப்பெற்றவையா?

எமது சமயகுரவர்கள் இராமேஸ்வரத்தில் நின்று ஈழத்துச் சிவத்தலங்களைப் பாடியருளியது போன்று அருணகிரியாரும் கதிர்காமத்தைப் பற்றிக் கேள்வியுற்று தாம் அவதரித்த திருவண்ணாமலையில் நின்று பாடினாரா? அல்லது நேரில் வந்து தரிசனஞ்செய்து பாடினாரா? என்று அறியமுடியாதிருக்கின்றது. சைவப்பெரியார் குல.சபாநாதன் அவர்கள் "அருணகிரிநாதர் கதிர்காம தலத்தைப் பற்றிக் கூறியிருக்கும் சரித்திர உண்மைகளை நோக்கினால் அவர் கதிர்காமத்தைத் தரிசித்திருத்தல் கூடும் என்ற கொள்கை வலியுறுத்துவதைக் காணலாம்"[3] என்பர்.

*உடலில் அணியும் உடையைவிட மேலானது முகத்தில் அணியும் மலர்ச்சி.*

அருணகிரிநாதருக்கு முன்னர் வாழ்ந்தவரான புகழேந்திப்புலவர் (13 ஆம் நூற்றாண்டு) அவர்களும் கதிர்காமத்தலத்தைப் பாடியிருக்கின்றார். இவர் வாழ்ந்த காலத்திலே யாழ்ப்பாணத்தைத் தமிழரசர் ஆண்டனர். இவர் இத்தலத்தை நேரில்வந்து தரிசித்துத்தான் பாடினார் என்பதற்கு இவரால் பாடப் பெற்றதாகக் கூறப்படும் பாடல் வலுவான சான்றாகக் காணப்படுகின்றது. கதிர்காமத்தில் முருகப்பெருமானின் வாகனமாகக் கூறப்படும் மயில் "பாம்பொன்றைக் கவ்வி வருத்தியமையினைக் கண்ட புலவர்பிரான் அந்தப் பாம்பை விட்டு விடச்செய்யுமாறு கதிர்காமப்பெருமானை வேண்டும் வகையிலான குறிப்பிட்ட பாடல் தக்கசான்றாகும்.[4]

இப்படிப்பட்டதல்ல அருணகிரிநாதரின் ஈழத்துத் தலத் திருப்புகழ்ப்பாடல்கள். போர்த்துக் கேயப் படையினர் 1640 ஆம் ஆண்டளவில் பெரும்படையுடன் கதிர்காமக் கோயிலைக் கொள்ளையடிக்கச் சென்று அது முடியாமல் சிலரைக் கொலையும் செய்துவிட்டு வந்ததை தக்கசான்றுடன் திரு.குல. சபாநாதன் தமது நூலிற் குறிப்பிட்டுள்ளார். எனவே போர்த்துக் கீசரினால் ஏற்படக்கூடிய விளைவையும் எதிர்பார்த்துத்தான் அருணகிரிநாதரும் கதிர்காமத் தலத்திற்கு வந்திருக்கலாம்.

இப்படியாகப் போர்த்துக்கேயரின் கொடுங்கோன்மைக்கு மத்தியிலும் அருணகிரியார் கதிர்காமம் வந்து பாடினார் என்று கொண்டாலும் ஏனைய மூன்று தலங்களுக்கும் சென்று பாடியிருப்பார் என்று கொள்வதற்கில்லை. ஏனெனில் அத்தலங்கள் தொடர்பாக அருணகிரியார் கூறும் தகவல்கள் அத்தலங்கள் மீது பக்திகொள்வதற்குப் போதுமானதாக இல்லை.

## கதிர்காமத் திருப்புகழ்ச் சிறப்பு

முருகப்பெருமானின் புகழை இன்னிசையாகப் பாடுவதும் பெண்களுடனான சிற்றின்ப உறவுகளை அருவருப்பை ஏற்படுத்தக்கூடிய முறையில் வர்ணித்துப் பாடி இறைநாட்டத்தை ஏற்படுத்துவதும் இவரது படைப்புக்களில் பொதுவாக நாம் காணும் பண்பாகும்.

கதிர்காமத்தை சிங்கள மக்கள் 'கதுறு கம' (நச்சுமரங்கள் நிறைந்த இடம்) என்று கூற அருணகிரியார் 'கதிர்காமம்' 'கதிர காம' என்றுதான் பாடுகின்றார்.

## மாமன் - மருமகன் உறவுமுறை

மனித உறவு முறைகளில் தாய்மாமன் - மருமகன் உறவுமுறைதான் மிகவும் உணர்வுபூர்வமானதென்று உளவியலாளர் கூறுவர். திருமால் அல்லது விஷ்ணு என்பவர் முருகப்பெருமானுக்கு தாய்வழி மாமனாவார். திருப்புகழில் வரும் 'பெருமாள்' என்பது திருமாலைக் குறிக்கும். இங்கு முருகனைப் 'பெருமான்' என்று கூறாமல் பெருமாள் என்று கூறுவதன் மனோவியல் தத்துவம் மாமனை நினைப்பித்து நினைத்ததைச் சாதிக்கச் செய்வதற்கே எனலாம். "திருமகளுலாவு....." என்று தொடங்கும் முதற்பாடலிலேயே ஏழு இடங்களில் "பெருமாள்காண்" என்று குறிப்பிட்டு நிறைவில் "பெருமாளே!" என்று நிறைவு செய்வது இங்கு நோக்குதற்குரியது.

## முருகன் - ஞானசம்பந்தன்

கம்பனை 'அபரபிரமன்' என்று பண்டிதமணியார் கூறுவது போன்று ஞானசம்பந்தரை 'அபரசுப்பிரமணியர்' என்று சொல்லும் வழக்குமுண்டு. இவ்வாறான வழக்கு

அருணகிரியாரால்தான் ஏற்பட்டதென்று தெரிகின்றது. தமிழ்நாட்டில் எண்ணாயிரம் சமணரைக் கழுவேறச் செய்து சைவசமயத்தை ஞானசம்பந்தர் வெற்றியீட்டச் செய்தமையால் புறச்சமயிகளுக்கு அவர்மீது மிகுந்த அச்சமிருப்பது இயல்பானது. சம்பந்தப்பெருமானுக்குரிய பேராற்றல் அவர் முருகப்பெருமானின் அவதாரமென்பதாலேயே என்பது அருணகிரியாரின் சிருஷ்டிப்பு. இதனால்தான்,

"வழுதி கூனிமிர்த்த பெருமாளே" (2)

"அழுதுலகை வாழ்வித்த கவுணியகு லாதித்த
வரிய கதிர்காமத்தி லுரியாபி ராமனே" (4)

என்று குறிப்பிட்டுப் பாடியுள்ளார். இதன் உள்ளார்த்தம் எதிரிகளுக்கு அச்சமூட்டுவதாக இருக்க வேண்டும்.

கதிர்காமத்தலத்தின் மீதும் அவனடியார் மீதும் அந்நியரை அச்சங்கொள்ளச் செய்வதற்காக முருகப்பெருமானின் இச்சாசக்தியாகிய வள்ளியை "இலகு சிலைவேடர் கொடி"(1) என்றும், முருகப் பெருமானை "கொடிய சூர்கெட்டு முறிய வேல்தொட்ட பெருமாளே"(8) என்றவாறும் பாடியிருப்பதும் உளவியல் தொடர்பான தாக்குதல்களே எனலாம்.

## நிறைவுரை

இலங்கைத் தமிழ்ச் சைவர்களை முருகவழிபாட்டின் வழிவந்த சைவர்கள் என்று குறிப்பிடுவது பொருத்தமானது. இதற்குக் காரணம் கந்தபுராணத்தின் செல்வாக்கென்று தெரிகின்றது. இக்கந்தபுராணம் கி.பி 12 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததென்பர். இக் கந்த புராணத்தின் செல்வாக்கு தமிழகத்தைவிட இலங்கையில்தான் அதிகம். இக்கந்தபுராணத்தை அருணகிரியார் நன்கு கற்றிருந்தார் என்பதை அவரின் திருப்புகழ் எடுத்துக்காட்டுகின்றது. இதுமாத்திரமன்றி பிற்காலத்தில் கதிர்காமத்திருத்தலம் தொடர்பாக ஈழத்தில் எழுந்த கதிர்காமக் கலம்பகம் (1897), கதிர்காமவந்தாதி (1915), கதிர்காமவேலவர் பதிகம் (1921), கதிரை யாத்திரைவிளக்கம் (1925), கதிர்காம ஸ்வாமி தோத்திரம் (1932) முதலான பிரபந்தங்களுக்கும் முன்னோடியான பெருமை அருணகிரிநாத சுவாமிகளின் ஈழத்துத் திருப்புகழ்ப் பாடல்களுக்குரியதெனலாம்.

### அடிக்குறிப்புக்கள்

1. பத்துப்பாட்டு வரிசை - திருமுருகு ஆற்றுப்படை, (1992), அநுராகம் வெளியீடு, சென்னை, பக். 17 - 18.
2. அருணகிரிநாதர் அருளிய ஈழத்துத் திருப்புகழ், (2004 தை), சிவதொண்டன் சபை, யாழ்ப்பாணம்.
3. சபாநாதன்,குல., (1947), கதிர்காமம், திருமகள் அழுத்தகம், சுன்னாகம், பக்.23
4. "தாயரவை முன்வருந்துஞ் சந்ரோ தயந்தனக்குன்
   வாயரவை விட்டுவிடமாட்டாயோ - தீயரவைச்
   சீறு மயிற்பெருமா டென்கதிர்கா மப்பெருமாள்
   ஏறு மயிற்பெருமா ளே!"

   - தமிழ் நாவலர் சரிதை
5. சபாநாதன்,குல., (1947), கதிர்காமம், பக். 23 - 24

*தன்னம்பிக்கை உயரும்போது உனது ஆற்றலும் அதற்கேற்ப உயரும்.*

**உசாத்துணைகள்**


* இளையதம்பி,அ.க., (1926), கதிர்காமவேலவர்.
* இறையரசன், பா., (1982), தமிழ் இலக்கியவரலாறு, பூம்புகார் பிரசுரம், சென்னை.
* சபாநாதன்,குல., (1947), கதிர்காமம், திருமகள் அழுத்தகம், சுன்னாகம்.
* சேதுராமன்,சி., (2012), தமிழ் இலக்கியவரலாறு, பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை.


**திருமதி வசந்தா வைத்தியநாதனின் மறைவையொட்டி**

**அஞ்சலிக் கவிதை**

## நிமலனிடம் இறைஞ்சுகின்றோம்!

இந்து மதத்தின், எங்கள் இனிய தமிழ் மொழியதனின்
ஈடிணையே இல்லா நற் புகழையெல்லாம்
சந்ததமும் பரப்பி, சமூக நலன்கள் பேணி,
சகலருமே விரும்புகின்ற சொற்பொழிவுகள் ஆற்றி
சிந்தைகளில் நிறைந்திட்ட **சிவநெறிப் பெண்ணே**! எங்கள்
**செஞ்சொற் செல்வியே**! வசந்தா தேவியே! வித்தகியே!
உந்தன் உயிர் பிரிந்த செய்தி கேட்டதாலே,
உளம் நொந்து வருந்தியுமே நிற்கின்றோமே!

தேர் ஊர்ந்து வருகின்ற திருக்காட்சியை, எங்கள்
திருக் கோவில் பூசைகளில் நடப்பவற்றை, நீங்கள்
நேர்முக வர்ணனை செய்யும் போழ்திலக் காட்சிகளை
நேரிற் காண்பது போன்றே உணர்வு கொள்வோம்!
ஊர் ஊராய்ச் சென்றெங்கள் மதம், மொழியின் புகழை
உரைத்த **அருள் மொழி அரசியாய்த்** திகழ்ந்த
பேர் பெற்ற பேச்சாளப் பெண்மணியே! நின்னிழப்பால்
பெருந்துயரில் ஆழ்ந்திங்கு தவிக்கின்றோமே!

"**செஞ்சொற்செல்வி**" என்றும், "**ஞான சிரோண்மணியே**" என்றும்
"**தொண்டர் திலகம்**" என்றும், "**விழைத்தமிழ் வித்தகி**" என்றும்
நெஞ்சங்கள் மகிழ்ந்து பட்டம் அளித்தே பாராட்ட நல்ல
நெறி முறைகள் தவறாது வாழ்ந்தாயம்மா!
வஞ்சகக் காலனவன் வலையினிலே வீழ்ந்திங்கு
வாழ்வை முடிக்க விதி வந்ததாய்ச்சோ?
நெஞ்சார நினை வாழ்த்தி, நின் ஆத்ம சாந்திக்காய்
நிமலனிடம் இறைஞ்சியுமே நிற்கின்றோமே!

-கி. குலசேகரன்-

*இறைவனை உணர எளியவழி அவனுடைய திருநாமத்தை இடையறாது ஓதுதலேயாகும்.*

(தொடர்ச்சி...

# உமாபதி சிவம்

அருளிய

# திருவருட்பயன்

(விரிவான பொருளுரையும் தெளிவுரையும்)



முனைவர் ஆ. ஆனந்தராசன்

### 75. முத்தியில் உயிரும் சிவமும் நிற்கும் முறைமை

ஒன்றானும் ஒன்றாது இரண்டானும் ஓசையெழாது
என்றால் ஒன்றன்று இரண்டும் இல்.

**பொருள்:**

உயிரும் கடவுளும் பொருளால் ஒன்றே எனில், முத்தியில் ஒன்றுதல் என்பது நிகழாது. ஒன்றுதலாவது இரு பொருள்களின் செயலாகும். பொருள் ஒன்றே உள்ளது என்றால், ஒன்றுதல் என்பது எப்படி நிகழ முடியும்?

இனி, முத்தியில் உயிரும் கடவுளும் இரண்டாய் நிற்கும் என்றலும் பொருந்தாது. அவை இரண்டாய்ப் பிரிந்து நிற்பின் அங்கே ஒன்றுதல் என்னும் பேச்சு எழுவதற்கே வழியில்லை.

இதனால், முத்தியில் உயிர் இறைப் பொருளோடு ஒன்றாய்ப் போய் விடாமலும், உயிரும் இறைவனும் தம்முள் இயையாத வேறுபட்ட இரண்டு பொருள்களாய் நில்லாமலும், உயிர் இறைவனோடு கலப்பினால் ஒன்றாய் நின்று பேரின்பத்தை நுகரும் என்பது பெறப்படும்.

**சொற்பொருள்:**

ஒன்றானும்- உயிரும் சிவமும் (குட ஆகாயமும் பெரிய ஆகாயமும் போல) பொருளால் ஒன்றேயெனின், ஒன்றாது- முத்தியில் அவை ஒன்றும் என்பது கூடாது, இரண்டானும்- இனி, உயிரும் சிவமும் (இருளும் ஒளியும் போல) இரு வேறு தன்மையை உடைய பொருள்களாயிருப்பின், ஓசைஎழாது- ஒன்றுதல் என்னும் பேச்சு எழுவதற்கே வழியில்லை, என்றால்- இவ்வாறாதலின், ஒன்றன்று- உயிரும் சிவமும் பொருளால் ஒன்றும் அன்று, இரண்டும்இல்- தம்முள் இயையாத, இருவேறு தன்மைப்பட்ட பொருள் ஆதலும் இல்லை.

**விளக்கம்:**

**ஒருமைக் கொள்கையை மறுத்தல்:**

ஆசிரியர் முதலில் ஏகான்மவாதம் என்னும் ஒருமைக் கொள்கையை எடுத்து மறுக்கிறார்.

அக்கொள்கைப்படி, உள்ள பொருள் ஒன்றே. அதுவே பிரமம் ஆகிய பரம்பொருள். அதனின் வேறாய் உயிர் என்பதொன்று இல்லை. இப்பிரமமே எண்ணிறந்த உயிர்களாய்த் தோற்றம் அளிக்கிறது. குடத்தினுள் இருக்கும் ஆகாயமும் வெளியில் உள்ள ஆகாயமும் ஒன்றேயாம். குடம் உடையும்போது உள்ளேயிருக்கும் குட ஆகாயம் வெளியிலுள்ள பெரிய ஆகாயத்தோடு சேர்ந்து விடுகிறது. அதுபோல, பிரமமும் உடம்பில் தொடக்குண்டிருக்கும் சீவனும் உண்மையில் ஒன்றுதான். முத்திநிலையில் சீவன் உடம்பின் தொடர்பு நீங்கித் தன் உண்மை நிலையாகிய பிரமம் ஆகிவிடும் என்று அக்கொள்கை கூறும்.

இவ்வொருமைக் கொள்கையை "ஒன்றானும் ஒன்றாது" என்ற தொடரால் மறுக்கின்றார் ஆசிரியர். உயிரும் இறைவனும் குட ஆகாயமும் பெரிய ஆகாயமும் போலப் பொருளால் ஒன்றாய் இருப்பின், அவை பின்னர் ஒன்றும் என்றல் கூடாது. ஒன்றுதல் என்பது இரு பொருளின் செயலாகும். ஒரு பொருளுக்குப் பிறிதொரு பொருள் இருந்தாலன்றி ஒன்றுதல் என்பது நிகழாது. முத்தியில் ஒன்றுதல் நிகழ்வதனால், பொருள் ஒன்றன்று; இரண்டே என்பது விளங்கும்.

**இருமைக் கொள்கையை மறுத்தல்:**

இனி, மற்றொரு கொள்கை உள்ளது. அது முன்னைய கொள்கை போலில்லாமல் உயிரும் கடவுளும் என இரண்டு பொருள்களை ஒப்புக்கொள்ளும். ஆயின் அவற்றின் இயல்பைக் கூறும்போது, அவை இருளும் ஒளியும்போல இருவேறு தன்மைப்பட்ட பொருள்கள் என்று கூறும். இக் கொள்கை துவைதம் அல்லது பேத வாதம் எனப்படும். தமிழில் இருமைக் கொள்கை எனக் குறிக்கப்படும்.

இக் கொள்கையை "இரண்டானும் ஓசையெழாது" என்ற தொடரால் மறுக்கின்றார் ஆசிரியர். வேறுபட்ட தன்மையை உடைய இரு பொருள்கள் எக்காலத்திலும் ஒன்றுதல் இயலாது. ஆதலால் உயிரும், கடவுளும் இருளும் ஒளியும்போல வேறானவை என்றால் ஒன்றின என்ற சொல் எழுவதற்கே வழியில்லாமற் போகிறது. இவ்வாறு இருமைக் கொள்கை பொருந்தாமையை எடுத்துரைக்கிறார்.

**சைவ சித்தாந்த நிலை:**

இங்ஙனம் முதலடியில் இரு சாரார் கொள்கைகளையும் மறுத்துரைத்த ஆசிரியர் அடுத்த அடியில் சைவ சித்தாந்தக் கொள்கை இது எனத் தெளிவாகக் காட்டுகிறார். முத்தியில் உயிர், சிவம் எனப் பொருள் இரண்டு உளதாயினும் அவை இரண்டாய்ப் பிரித்து நிற்றல் இல்லை.

நுகர்பவன் நுகரப்படும் பொருளுக்கு வேறாய் நிற்பின் இன்ப நுகர்ச்சி உண்டாகாது. அவன் அப்பொருளோடு ஒன்றுபடும் போதே இன்ப நுகர்ச்சியைத் தலைப்படுவான். இஃது உலக இன்பத்திற்கும் பொருந்தும்; முத்தியின்பத்திற்கும் பொருந்தும்.

முத்தியில் நுகர்பவனாகிய உயிர் நுகரப்படும் பேரின்பப் பொருளாகிய சிவத்திற்கு வேறாய் (உயிரும் சிவமும் இரண்டாய்) பிரிந்து நிற்குமானால் உயிருக்குப் பேரின்பம் விளையாது. முதற் கொள்கை கூறியபடி உயிர் சிவத்தோடு ஒன்றாய்ப் போய் விடுமானாலும் இன்ப நுகர்ச்சி உண்டாகாது. நுகர்பவனாகிய உயிரே இல்லாத போது நுகர்ச்சி எப்படி ஏற்படும்?

*துன்பம் என்பது உனக்குக் கண்ணாடி போன்றது.*

இதுவரை கூறியவற்றால், முத்தியில் உயிர் சிவத்தோடு ஒன்றாய்ப் போதலும் இல்லை. இரண்டாய் நிற்றலும் இல்லை என்பது விளங்கும். இதனையே "ஒன்றன்று இரண்டு மில்" என்ற தொடரால் உணர்த்துகிறார் ஆசிரியர்.

இங்ஙனமாயின், வேறு எப்படிக் கொள்வது? என்ற வினா எழும். சைவ சித்தாந்தம் இதற்கு விடையளிக்கிறது. உயிரும் சிவமும் ஒரு பொருள் அல்ல; தம்முள் இயைபில்லாத, இரு வேறு தன்மைப்பட்ட பொருள்களும் அல்ல. அவை இரண்டு ஆயினும் இயைந்து ஒன்றா தற்குரியவை. அம்முறையில் உயிர் சிவத்தோடு, இரண்டு என்று சொல்ல வராதபடி, ஒன்றி, வேறு காணப்படாது நிற்கும் என்பதாம்.

**உப்பும் நீரும்:**

இவ்வாறு உயிர் சிவத்தோடு ஒன்றாய் நிற்றலுக்கு உவமையாக நீரில் உப்பானது கலந்து அந்நீரோடு ஒன்றாய் நிற்றலை எடுத்துக் காட்டுவர்.

உப்பும் நீரும் இரு வேறு பொருள்களாயினும் தம்முள் இயைந்து ஒன்றாதற்குரிய பொருள்கள். அவைபோல உயிரும் சிவமும் உள்ளன.

நீரில் கலந்த உப்பு கண்ணுக்குப் புலனாகாது. நீர் மட்டுமே உள்ளது போலத் தோன்றும். அதுபோல உயிர் சிவத்தோடு ஒன்றி வேறு காணப்படாது நிற்கச் சிவம் ஒன்றுமே உள்ளதுபோலத் தோன்றும்.

உப்பும், நீரும் இயைந்துள்ள நிலையில் அதனை ஒன்று என்பதா? இரண்டு என்பதா? உப்பு அடியோடு இல்லாமற் கெட்டொழியுமாயின், ஒன்று என்று சொல்லிவிடலாம். ஆனால், உப்புக் கெடாமல் நிற்கிறது. நீரில் உள்ள உவர்ப்புச்சுவை நீங்காமையால் உப்பாகிய பொருள் அங்கே கெடாமல் உள்ளது என அறியலாம். எனவே அதனை ஒன்று என்பது பொருந்தாது.

இனி, இரண்டு என்று சொல்ல வேண்டுமாயின், உப்பு தனது கட்டித் தன்மை நீங்காமல், நீருக்கு வேறாய் நிற்றல் வேண்டும். அப்பொழுதுதான் நீரும் உப்பும் ஆகிய இரண்டு அங்கே உள்ளன என்று கூற முடியும். ஆனால், உப்பு அவ்வாறு தனியே நிற்றல் இன்றித் தனது கட்டித் தன்மை நீங்கி நீரோடு வேறற நிற்கிறது. எனவே அதனை இரண்டு என்று சொல்வதும் பொருந்தாது.

**உயிரும் சிவமும்:**

இதுபோலத் தான் முத்தியில் உயிரும் சிவமும் இயைந்துள்ளன. அதனை ஒன்று என்பதா? இரண்டு என்பதா? சிவத்தை அணைந்த உயிர் கெட்டொழியுமாயின், ஒன்று என்று சொல்லி விடலாம். ஆனால், உயிர் கெடாமல் நிற்கிறது. சிவம் இன்பத்தைத் தரும் பொருளாய் நிற்க, உயிர் இன்பத்தைப் பெறுபவனாய் நிற்றல் நீங்காமையால், உயிர் அங்கே கெடாமல் உள்ளது என அறியலாம். எனவே அதனை ஒன்று என்பது பொருந்தாது.

இனி, இரண்டு என்று சொல்ல வேண்டுமாயின், உயிர் தனது சீவத்தன்மை நீங்காமல் சிவத்திற்கு வேறுபட்டு நிற்றல் வேண்டும். அப்பொழுதுதான் உயிரும் சிவமும் ஆகிய இரண்டு அங்கே உள்ளன என்று கூற முடியும். ஆனால், உயிர் அவ்வாறு தனியே நிற்றல் இன்றித் தனது சீவத்தன்மை நீங்கிச் சிவத்தோடு வேறற நிற்கிறது. எனவே அதனை இரண்டு என்று சொல்வதும் பொருந்தாது.

*பிறர்மீது கருணைகாட்டும் குணம், கடவுள் உனக்கு அளித்திருக்கும் வரம்.*

இவ்வாறு உயிரும் சிவமும் ஒன்றாகாமல் இரண்டாகாமல் நிற்கும் முறைமையையே "ஒன்றன்று இரண்டும் இல்" எனக் குறிப்பிட்டார் நம் ஆசிரியர்.

### 76. உற்றார், பெற்றார், பற்றார்

உற்றாரும் பெற்றாரும் ஓவார்; உரைஒழியப்
பற்றாரும் அற்றார்பவம்.

**பொருள்:**

தாம் வேறு நில்லாது திருவருளிற் பொருந்தி அதனோடு ஒன்றாய் நின்றவரும், அதன்மேல் சிவப் பேற்றினை எய்தி நிட்டையில் நின்றவரும் மெய்ப்பொருளை ஒருபோதும் நீங்க மாட்டார். அவர்க்கு இனிப் பிறவி இல்லை.

இந்த உற்றாரும், பெற்றாரும் போல மெய்ப்பொருள் ஒன்றையே பற்றமாட்டாமல் கேட்டல், சிந்தித்தல் என்ற படிநிலைகளில் நிற்ப வரும் மேற்படிகளை எய்திப் பிறவி அறும் நிலையைப் பெறுவார்கள்.

**சொற்பொருள்:**

உற்றாரும்- தெளிதல் என்ற நிலையிற் சென்று, திருவருளிற் பொருந்தி அதனோடு ஒன்றாய் நின்றவரும், பெற்றாரும்- அதன்மேல் உள்ள நிட்டை கூடுதலாகிய முடிந்த நிலையை எய்திப் பேரின்பத்தில் அழுந்தினவரும், ஓவார்- மெய்ப்பொருளைவிட்டு ஒருபோதும் நீங்க மாட்டார். அவர்கள் மீளப் பிறத்தல் இல்லை, உரை ஒழியப் பற்றாரும்- இனி, தெளிதல், நிட்டை ஆகிய நிலைகளிற் சென்று மெய்ப்பொருள் ஒன்றையே பற்றமாட்டாதவராய், கேட்டல், சிந்தித்தல் ஆகிய படிநிலைகளில் நிற்பவரும், பவம் அற்றார்- மேற்படிகளை எய்திப் பிறவி அறும் நிலைமையைப் பெறுவார்கள்.

**விளக்கம்:**

**உற்றார்:**

முந்திய அதிகாரத்தில் நாம் பார்த்தபடி எல்லாப் பற்றினையும் அறவே விடுத்து, யான் எனது என்னும் நினைப்புச் சிறிதும் இன்றி, எச்செயலையும், தன் செயலாக உணராது திருவருட் செயலாக உணர்ந்து, அத்திருவருளிடத்தில் அடங்கி நிற்கப் பெறும் நிலையே சுத்த துரியம் என்னும் அருள் நிலையாகும்.

இங்கு ஒரு கேள்வியை எழுப்பலாம். இந்நிலையில் நிற்கும் ஞானிகளும் "யான் செய்தேன், யான் செய்வேன்" என்றெல்லாம் சொல்கிறார்களே. எனவே அவர்களுக்கும் "நான்" என்ற முனைப்பு இருக்கத்தானே செய்கிறது. இதற்குச் சான்றாகப் பின்வரும் நிகழ்ச்சி ஒன்றைக் காட்டலாம். பாண்டிமாதேவியாரும் அமைச்சர் குலச்சிறையாரும், ஞானசம்பந்தப் பெருமானின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கித் தமது உயிரையும் மன்னவன் உயிரையும் உய்விக்கும்படி வேண்டுகிறார்கள். அவர்களை நோக்கிப் பிள்ளையார், "நீங்கள் சிறிதும் அஞ்சவேண்டா. மெய்யுணர்வில்லா சமணர்களை யாவரும் காண வாதில் வென்று பாண்டியனைத் திருநீறு அணியும்படி செய்வேன்" என்கிறார். "யான் இதனைச் செய்து முடிப்பேன்" என்று தன் முனைப்போடு நாம் சொல்வோம் அல்லவா? அதுபோலத்தானே

ஞானசம்பந்தரும் சொலகிறார். நமக்கும் அவருக்கும் என்ன வேறுபாடு இருக்கிறது? என்று கேட்கலாம்.

சாதி குலம் பிறப்பு என்னும் தடஞ்சுழியில் தடுமாறி நிற்கும் நம்மவர் நிலை எங்கே! ஞானத்தின் திருவுருவாய்ப் பொலியும் சம்பந்தப் பெருமானின் நிலை எங்கே! அவரது நிலையை உணராமல் கேட்கின்ற கேள்வி இது.

ஞானிகளது புறத்தோற்றம் உலகத்தாரது தோற்றத்தோடு ஒத்துத் தோன்றினாலும் உண்மையில் அவ்வாறு இல்லை என்பதை உணர்தல் வேண்டும். உலகத்தார்போல அவர்களும் "யான் செய்தேன், யான் செய்வேன்" எனச் சொல்வழக்குப் பற்றிக் கூறுவாராயினும் அவர் உணர்வு, "எல்லாம் சிவன் செய்தது" என்றே உணர்ந்திருக்கும்.

ஞானசம்பந்தர் தாம் சொல்லியவாறே சமணரை வாதில் வென்று பாண்டியனுக்குத் திருநீறு அளித்தருளினார். சிவபெருமானது திருநெறி எங்கும் திகழச் செய்தார். இச்செயலை எல்லாம் அவர் தாம் செய்ததாக நினையாது இறைவனது செயலாகவே உணர்ந்து நின்றார். "உன்னையன்றி வேறொரு உணர்வும் இல்லேன். உயிர்கள் உய்யும் வண்ணம் நீ திருக்கூத்து இயற்றுவதை இடையறாது நினைப்பதே நியமமாகும்" என்று அவர் அருளிச்செய்த அருள்மொழிகள் ஆழ்ந்து உணர்தற்குரியவை.

"கொன்றையம் முடியினாய் கூடல் ஆல வாயிலாய்
நின்றயங்கி ஆடலே நினைப்பதே நியமமே"

என இறைவனது திருக்கூத்தினைக் குறிப்பிட்டு எல்லாச் செயலும் அவன் செய்தனவே யாம் என்பதைப் புலப்படுத்தி, அதனை என்றும் மறந்தறியாத தமது நிலையை அவர் இங்கே உணர்த்தியுள்ளமை காணலாம்.

இவ்வாறு எச்செயல் செய்யவரினும் அதனைத் திருவருட் செயலாகத் தெளிந்து திருவருளோடு ஒன்றி நிற்கும் நிலையாகிய இது சிவயோகம் எனப்படும் துரிய அருள் நிலையாகும்.

இந்நிலையில் நிற்பவரையே "உற்றார்" எனக் குறிப்பிட்டார் ஆசிரியர். உற்றார் என்பதற்குத் திருவருளைத் தலைப்பட்டு ஒன்றினோர் என்பது பொருளாகும்.

**பெற்றார்:**

இதற்கு மேல், திருவருளுக்கு முதலாகிய சிவத்தை அணைந்து பேரின்பத்தில் தோய்ந்து நிற்கும் நிலையாகிய நிட்டையினை எய்தியவரைப் "பெற்றார்" எனக் குறிப்பிட்டார் ஆசிரியர். முடிவாய் உள்ள சிவயோகமாகிய துரியாதீத ஆனந்த அனுபவத்தைப் பெற்றவர் ஆதலின் இப்பெயர் அவருக்குப் பொருந்தியதாயிற்று.

சிவத்தை அணைந்து இன்புறுதல் பரமுத்தியாதலின் அதனை உடம்பு நீங்கிய பிறகு அல்லவா பெற இயலும். உடம்பு உள்ள பொழுதே அதனைப் பெற இயலுமோ? என்று ஐயுறலாம். அவ்வாறு ஐயுற வேண்டுவதில்லை. உடம்பு உள்ள பொழுதும் இறைவன் உடன் இருக்கவே செய்கின்றான். எப்பொழுதும் உடனாக இருக்கின்ற அவனை உடம்பு உள்ளபொழுதே அடையலாம். அணைந்து இன்புறலாம். ஆயின் அதற்கு அவனை என்றும் மறவாமை வேண்டும். பத்தியினால் அவனை இடையறாது ஏத்துதல் வேண்டும். மறவாமையும், பத்தியினால் ஏத்துதலும் ஆகியவற்றை இடையறாது செய்து வருபவர் இவ்வுடம்பு உள்ள

*ஒருவனின் குணம் அவன் பழகும் மக்களைப் பொறுத்திருக்கிறது.*

பொழுதே சிவத்தை அணைந்து இன்புறுவர் என்பதில் சிறிதும் ஐயமில்லை. சிவத்தை அணைந்து அவனை நீங்காதே நிற்பது "நிருவிகற்ப நிட்டை" என்று சொல்லப்படும். நிட்டை என்று சொன்னாலே அது நிருவிகற்ப நிட்டையையே குறிப்பதாகும்.

இனி, நிட்டை கூடியவர் அந்நிலையினின்றும் நீங்கி உலக நினைவுற்று உலகத் தாரோடு பொருந்தி நிற்பது "சவிகற்ப நிட்டை" எனப்படும். இவ்வாறு சிவபோகமாகிய நிட்டையினின்றும் மீள்வோர் சிவயோகமாகிய அருள்நிலையில் நிற்றலன்றி அதற்குக் கீழே வாரார். நால்வர் பெருமக்களும் மற்றுள்ள நாயன்மார்களும் சவிகற்ப நிட்டையில் இருந்தவர்களே யாவர். அஃதாவது, உலக வாழ்வில் உள்ளபொழுதே திருவருளில் அழுந்தி நின்றவராவர்.

**பற்றார்:**

கேட்டல், சிந்தித்தல் நிலைகளில் நின்று திருவருளைத் தலைப்பட மாட்டாதவர் "பற்றார்" எனப்பட்டார். இவரது நிலையினை அறியும் நெறி, உயிர் விளக்கம் என்ற அதிகாரங்களின் முன்னுரையில் ஓரளவு அறிந்துள்ளோம்.

கேட்டல், சிந்தித்தல் நிலைகளில் யான் எனது என்னும் பற்றுக்கள் அறுதல் இல்லை. அவை முற்றாக நீங்குவது தெளிதல் என்ற நிலையிலேதான். ஆகவே, தெளிதல் நிலைக்குச் சென்று திருவருளை உறுதியாகப் பற்ற முடியாமலும், யான் எனது என்னும் பற்றினை விட முடியாமலும் நிற்பவராகிய இவர்கள் ஏனைய உலக மாந்தர்போலப் பிறப் பிற்கு ஆளாவர் போலும் என்ற எண்ணம் நமக்கு எழலாம் அல்லவா? அதனை நீக்குகிறார் ஆசிரியர்.

உலக வாழ்வில் உழலும் நமக்கும் சிற்சில சமயம் ஞான வேட்கை எழுதல் உண்டு! சிறந்த சித்தாந்தச் சொற்பொழிவைக் கேட்கும்போது "இவ்வளவு அருமையான கருத்துக்கள் சித்தாந்த நூல்களில் உள்ளனவா? இவற்றையெல்லாம் தெரிந்து கொள்ளாமல் காலத்தை வீணாக்கி விட்டோமே. இனிமேலாவது சிவஞான போதத்தைப் படிக்க வேண்டும் என்ற ஆர்வம் மேலோங்கி எழும்.

ஆனால், அந்த ஆர்வம் வீடு வரையில்தான். வீட்டிற்குள் புகுந்துவிட்டால் குடும்ப எண்ணங்கள் மனதிற்குள் குடிபுகுந்துவிடும். ஞான வேட்கை வந்த சுவடு தெரியாமல் போய்விடும். இதற்கு ஓர் உவமை சொல்லலாம். இரவில் உறக்கத்தின்போது இடையிடையே சிறிது விழிப்பு உண்டாகும். சில நொடிகள்தான் அந்த விழிப்பு இருக்கும். பிறகு மறுபடியும் கண்மூடி உறக்கத்தில் ஆழ்ந்து விடுவோம். அந்தச் சிறிது நேர விழிப்பைப் போலத்தான் நமக்கு ஏற்படுகிற ஞானவேட்கையும் நிலைத்தல் இன்றி விரைவில் நீங்குகிறது.

ஆனால், ஞான நெறியை மேற்கொண்டு, கேட்டல், சிந்தித்தல் என்ற நிலைகளில் நிற்பவர்களின் ஞான வேட்கை நிலையுடைய உண்மையான ஞானவேட்கையாகும். ஆதலால் சத்தி நிபாதம் வாய்க்கப் பெற்ற அவர்கள் இப்பொழுது பற்றார் என்ற நிலையில் நின்றாலும் ஞானவேட்கையில் தீவிரம் கொண்டு தெளிதல் முதலிய மேல்நிலைகளைப் படிப்படியே அடைந்து பிறவி அறும் நிலையைப் பெறுவார்கள் என்பது உறுதி. அது பற்றியே "பற்றாரும் அற்றார் பவம்" என்றார் நம் ஆசிரியர்.

(தொடரும்...

*பொறுமை என்பது ஒவ்வொரு மனிதனுக்கும் மிக முக்கியமான குணமாகும்.*

# இடுக்கண் வருங்கால் நகுக

– திரு கே.எஸ். சிவஞானராஜா அவர்கள் –

எந்தவொரு மனிதனுக்கும் வாழ்க்கையில் துன்பமானது துரத்திக்கொண்டேயிருக்கும் அதில் இருந்து விடுபடுவதற்கும் நாமே பொறுப்பாளியாக வேண்டும். துன்பங்களைக் கொண்டாடுதல் வாழ்க்கையல்ல. அதை மறப்பது என்பது எளிதான விடயமுமல்ல. அப்போ என்ன செய்யலாம்? துன்பம் வரும்போது அதற்காக வருந்தாமல் மனதுக்குள் சிரிக்க வேண்டும். ஏனென்றால் அத் துன்பத்தை நெருங்கி அழிப்பதற்கு அதைப்போன்ற ஒரு ஆயுதம் இவ்வுலகில் வேறு எதுவும் இல்லை என்று சொல்லலாம். இடுக்கண் வருங்கால் நகுக என்பது வள்ளுவம் தந்த திருவாக்காகும். இதன் தாற்பரியத்தை உணர்ந்ததனாலேயே இந்த உலகம் இவ்வளவு காலம் நீடித்து வாழ்ந்து இனிக்கிறது. இப்பொழுது யாரால் சிரிக்க முடிகிறது?

உடலுக்குத் தீனி போடுபவர்களால் சிரிக்கமுடிவதில்லை. உள்ளத்திற்குத் தீனிபோடு பவர்களால் சிரிக்க முடிகிறது. உள்ளத்தில் சிரிக்கவும், உடலில் பொலியவும் அவரவர் தாம் தாமே தம்மை உருவாக்குதல் அவசியமாகிறது.

தவத்திரு யோகர் சுவாமிகள் உபதேசித்தது போன்று, இறைவனின் சொருபமே ஆத்மாக்கள். இரண்டுமே பிரிக்கமுடியாததாகும். நானே அவன். அவனே நான். ஆன்மாவுக்குத் துன்பம் ஒருபோதும் நிகழ்வதில்லை. எனவே ஆன்மா என்றும் இன்பமயமாய்ப் பிரகாசித்த வண்ணம் இருப்பதனால் துன்பம் ஆன்மாவைத் தீண்டுவதில்லை. ஆடம்பரமான உடம்பே துன்பத்தை விலைக்கு வாங்கிக்கொள்கிறது. அதனாலேயே நாம் ஒவ்வொருவரும் உடம்புக்கு வேண்டாதன அத்தனையையும் பூசிமெழுகி செயற்கை அழகினை ஊட்டி உண்மையை மறைத்து வைத்திருக்கின்றோம். முதுமையை எப்போது நாம் இளமையாக்க ஆயத்தமானோமோ அன்றே துன்பம் ஊற்றெடுக்க ஆரம்பித்துவிட்டது எனலாம். முடி நரைத்தது என்றோ, பற்கள் விழுந்தன என்றோ, உடல் சுருங்கியதென்றோ, நடை தளர்ந்தது என்றோ, அனுபவிக்க முடியவில்லையென்றோ நீங்கள் கருதுவீர்களாக இருந்தால் உடலுக்குத் துன்பம் வந்துவிட்ட தென்பதே கருத்தாகும். எனவே துன்பத்திற்கு மூலகாரணம் நாமேதான். நாம் என்று சொல் லும்போது நமக்குள்ளே விளையும் ஆசையே அடிப்படையாகும். ஆதலால் ஆசையை அகற்ற அகற்ற உள்ளத்திலும் உடலிலும் இன்பம் பொங்கும். இது வந்துவிட்டால், இடுக் கண் என்பது எம்மை அணுகாது. இன்பமும் துன்பமும் ஒன்றாகவே தென்படும். ஞானிகளுக்கு இதுவே மருந்தாகும். இத் தாற்பரியத்தை உணர்ந்துவிட்டால், துன்பம் இன்பமாகி சிரிக்க வைக்கும். சிரிக்க வேண்டும்.

"இடுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத்தூர்வது அஃதொப்பது இல்" (621)

இதன் பிரகாரம் துன்பம் கடல்போல் அலை அலையாய் வரும்போது, வருந்தாமல் மனதுக்குள் சிரிக்க வேண்டும்.

*விவேகம் மனிதனை அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கிறது.*

"அடுக்கி வரினும் அழிவிலான் உற்ற
இடுக்கண் இடுக்கட் படும்" (625)

அடுத்தடுத்து துன்பம் வந்தாலும் தனது முயற்சியைக் கைவிடாதவனை அத்துன்பம் பார்த்துத் துன்பப்படும் என்பதாக வள்ளுவம் கூறும்.

அறிவுடையோர் தத்தம் உடம்பானது துன்பம் என்ற வாளுக்கு இலக்காகும் என்பதை அறிந்து, தம்மீது வந்த துன்பத்தைத் துன்பமாகக்கொள்ளமாட்டார்.

காந்தி, அன்னை திரேசா, அம்பேத்கார் போன்றோர்க்கு அவமானம், துன்பம் ஏற்பட்ட போதெல்லாம் அவர்கள் அதுபற்றிப் பெரிதாக எதுவுமே அலட்டிக்கொள்ளவில்லை, பதிலாக இன்பம் கொண்டு சிரித்தார்கள். இதன் பலனாக அவமானப்படுத்தியவர்களே வெட்கித் தலைகுனிந்தார்கள். இதுவே, ஒன்னார் விழைகின்ற சிறப்பாகும்.

"இன்னாமை இன்பம் எனக்கொளின் ஆகுந்தன்
ஒன்னார் விழையுஞ் சிறப்பாகும்"

பகைவன்கூட விரும்பி மதிக்கத்தக்க சிறப்பு, துன்பத்தை வெல்பவனுக்கு உண்டு. ஆன்மீகமும், அரசியலும் நமக்குச் சிரிப்பையே பரிசாக அளிக்கின்றன.

---

## கல்வியின் பயன்

ஒரு தேசத்தில் ஓர் அரசனுக்கு இரண்டு புத்திரர்கள் இருந்தார்கள். அரசன் தன் பிள்ளைகள் இருவரில், மூத்தவனுக்கு நாளுக்கு நாள் அவன் வேண்டியளவு திரவியங்களைக் கொடுத்துக்கொண்டும் இளையவனுக்கு ஓர் உபாத்தியாயரை வைத்து ஒழுங்காகக் கல்வி கற்பித்துக்கொண்டும் வந்தான். இளையவன் கிரமமாகக் கற்றுக் கல்வி அறிவு ஒழுக்கங்களிற் சிறந்தவனாயினான். மூத்தவன் தான் வைத்திருந்த செல்வத்தினாலே மேன்மேலும் செருக்கும் அகங்காரமும் உள்ளவனாய் கல்வியையும் நல்லொழுக்கத்தையும் அவமதித்துத் துட்டனாயினான்.

இந்த இரண்டு புத்திரர்களும் பிதாவினாலே வேறு வேறு தேசங்களுக்கு அனுப்பப்பட்டார்கள். மூத்தவன் தன் பொருள்களையே துணையென்று அவைகளை எடுத்துக்கொண்டு குறித்த தேசத்துக்குப் போய்த் தன் மனம் போனவாறே பல வீண் செலவுகள் செய்து தான் கொண்டுபோன பொருள் முழுவதையும் இழந்து, பழிபாவங்களைத் தேடித் தரித்திரனாகிப், பின் கடன்பட்டு அக்கடனைச் செலுத்த முடியாமையினாலே சிறைச்சாலையில் அடைபட்டுப், பெருங்கஷ்டத்தை அனுபவித்தான்.

இளையவன் கல்வியே துணையென்று உறுதிசெய்து, தான் படித்த புத்தகங்களை எடுத்துக்கொண்டு குறித்த தேசத்தை அடைந்து, கல்வியிற் சிறந்து விளங்கி அத்தேசத்து அரசனால் உபசரிக்கப்பட்டு, அவன் தன் மகளை விவாகஞ் செய்து கொடுக்கச் சிலகாலம் அங்கிருந்து, பின்பு தன் மனைவியோடும் அரசன் கொடுத்த அளவிறந்த திரவியங்களோடும் தன் பட்டணத்தை அடைந்தான். பிதா அவனுடைய நல்வரவினால் மிகுந்த சந்தோஷமடைந்து, தன்னுடைய இராச்சியத்தை அவனுக்கே கொடுத்தான். பிதாவினுடைய அரசுரிமையைப் பெற்ற இளைய குமாரன், தன் தமையன் அந்நிய தேசத்தில் சிறைச்சாலையில் அகப்பட்டிருத்தலைக் கேள்வியுற்று, அவனைச் சிறையினின்றும் மீட்டு, நீதி கோணாது அரசாண்டு, பெருமகிழ்ச்சியோடு வாழ்ந்தான். மூத்த குமாரனுக்குரிய அரசுரிமை இளைய குமாரனுக்குக் கிடைத்தற்குக் காரணங் கல்வியே.

— இந்து ஒளி —

*அனுபவம் ஓர் அருமையான பள்ளிக்கூடம்.*

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம்

| | | |
|---|---|---|
| ப. ஜதுஷன் | வல்வெட்டித்துறை | 1000. 00 |
| இந்திரகுமாரி | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| ய. திரிஷா | அவுஸ்திரேலியா | 5000. 00 |
| பொ. யோகேஸ்வரன் | சங்கானை | 1000. 00 |
| ந. காந்தராஜா | சங்கானை | 1000. 00 |
| மு. தேவராஜா | திருகோணமலை | 200. 00 |
| ராசரத்தினம் அனுதா | நல்லூர் | 1000. 00 |
| வை. தனகேசவன் | இணுவில் | 1000. 00 |
| தி. கிருஷ்ணரூபன் | ஆதிகோயிலடி | 10000. 00 |
| க. கோகுலவாசன் | சரசாலை | 500. 00 |
| இ. கருணாநிதி | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| யமுனா சபேசன் | இணுவில் | 2000. 00 |
| K.V. துரைசாமி நினைவாக | மயிலிட்டி | 2000. 00 |
| பத்மாசினிதேவி சிவரெட்ணம் | இணுவில் | 1700. 00 |
| சி. ஜெயதேவி | லண்டன் | 5000. 00 |
| ப. கீதப்பிரியன் | நீர்வேலி | 2000. 00 |
| Dr கனகலிங்கம் குடும்பம் | வெள்ளவத்தை | 5000. 00 |
| கோகுலவாணி சிவகுமார் | கனடா | 2500. 00 |
| T. நவிக்கா, T. அகல்யா | லண்டன் | 10000. 00 |
| சு. கார்த்திக், சு. கிருஸ்னி | லண்டன் | 5000. 00 |
| த. கணேசலிங்கம் | ஏழாலை | 1மூடை அரிசி |
| பூ. வரதராஜா | சுழிபுரம் | 10000. 00 |
| K. குணா | குப்பிளான் | 2000. 00 |
| கு. ரங்கநாதன் | இணுவில் | 4000. 00 |
| நா. நாகஞானி | லண்டன் | 2500. 00 |
| நா. சற்ஜீன் | லண்டன் | 2500. 00 |
| கோ. கோபாலகிருஷ்ணன் குடும்பம் | புங்குடுதீவு | 5000. 00 |
| T. ஸ்ரீதரன் | லண்டன் | 10000. 00 |
| இ. சுபாஸ்கரன் | கொடிகாமம் | 5000. 00 |
| திருமதி பொ. செல்வக்காந்திமதி | கிளிநொச்சி | 3000. 00 |
| கா. கஸ்ஷியா | பிரான்ஸ் | 1000. 00 |
| கு. தியாகராஜசர்மா | நீர்வேலி 1பட்டி பருப்பு, 1மூடை அரிசி | 6000. 00 |
| மு. சிவராஜா குடும்பம் | வல்வெட்டி | 5000. 00 |

*கல்வியின் வேர்கள் கசப்பானவை, ஆனால் அதன் கனிகள் இனிப்பானவை.*

| | | |
|---|---|---|
| திரு கலைமோகன் குடும்பம் | வல்வெட்டி | 5000. 00 |
| மு. முருகதாஸ் | நீர்வேலி | 500. 00 |
| க. மகேஸ்வரி | கரவெட்டி | 1000. 00 |
| நா. நல்லதம்பி | மட்டுவில் | 15000. 00 |
| தயாநிதி பாலசுந்தரம் | கோண்டாவில் | 1000. 00 |
| ம. சுவாமிநாதன் நினைவாக | ஆவரங்கால் | 5000. 00 |
| ஓர் அன்பர் | சங்கானை | 1000. 00 |
| நி. விசாகன்<br>நி. சிவசக்தி<br>அ. நிவேதா<br>அ. நேத்திரா | லண்டன் | 5000. 00 |
| சு. மகாராஜன் வட்டுக்கோட்டை (முதியோர்களுக்கான சவர்க்காரத் தேவைக்காக) | | 10000. 00 |
| திருமதி சதாசிவமூர்த்திமூலம் திருமதி சு. தெய்வநாயகி நினைவாக | கனடா | 100 டொலர் |
| ஸ்ரீ சிவராம் ரேடேர்ஸ் | யாழ்ப்பாணம் | 2புட்டி பருப்பு 1புட்டி அரிசி |
| பா. யாதவன் | அவுஸ்திரேலியா | 10000. 00 |
| கா. தயாபரன் | கொழும்பு | 3மூடை அரிசி |
| ஜெ. பிரவீன், ஜெ. நேத்திரன் | வவுனியா | 3000. 00 |
| சி. மகாலிங்கம் J.P | கொற்றாவத்தை | 1000. 00 |
| சா. சிவதர்சினி | லண்டன் | 10 டொலர் |
| நெ. காயத்திரி | கோப்பாய் | 5000. 00 |
| சு. சிவதாசன் G.S | புன்னாலைக்கட்டுவன் | 4500. 00 |
| வை. பிரகலாதன் | மருதனார்மடம் | 500. 00 |
| ஏ. நிரோஜன் | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| துரைராசா மங்கையற்கரசி நினைவாக | யாழ்ப்பாணம் | 1500. 00 |
| R. குலசிங்கம் | கோண்டாவில் | 5000. 00 |
| கி. ஸ்ரீபத்மநாதன் | தாவடி | 5000. 00 |
| T. உருத்திரா | பருத்தித்துறை | 15000. 00 |
| நா. ஞானசம்பந்தர் | சுதுமலை | 5000. 00 |
| J. சஜீபன் | சங்கானை | 500. 00 |
| திரு மகேஸ்வரன் (வேல்சாமி) | மட்டக்களப்பு | 1000. 00 |
| க. விஜயரூபன் | உரும்பராய் | 1000. 00 |
| பூ. இராசையா | கொழும்பு-6 (வாழ்வாதார உதவி) | 25000. 00 |
| மு. சிவபாலன் | U.K | 5000. 00 |
| N. சிவகுமார் | U.K | 2000. 00 |
| Dr கு. குகானந்தன் | பிட்டமாறுவ | 3000. 00 |
| த. பானுஷா | அவுஸ்திரேலியா | 5000. 00 |
| மு. கந்தசாமி | வரணி மரக்கறி, 1மூடை அரிசி | 3000. 00 |

(தொடரும்...

*செல்வத்தினால் வருவதைவிட, சாதனையால் வரும் புகழ் நிலைத்து நிற்கும்.*

# இறைவனை அடைய இராமாயணம் காட்டும் பாதை

– திரு கதிர்காமநாதன் சிவகுமார் அவர்கள் –

இறைவனுக்கு எந்தவிதமான கடமையோ, எதையாவது அடையவேண்டும் என்ற ஆசையோ கிடையாது. காரணம், அவர் பூரணமானவர்.

"மூன்று லோகங்களிலும் நான் செய்யவேண்டியது எதுவுமே இல்லை. அடைய வேண்டியது எதுவும் என்னால் அடையப்படாததாகவும் இல்லை" என்று கீதையில் ஸ்ரீ கிருஷ்ணன் கூறியுள்ளார்.

இவ்வாறிருக்கையில் பகவான் எதற்காக மத்ஸ்ய, கூர்ம, வராஹ, நரஸிம்ஹ, வாமன, பரசுராம, ராம, பலராம, கிருஷ்ண அவதாரங்களை எடுத்துக்கொண்டார்? "மற்ற வர்களுக்கு உதவி செய்ய வேண்டும்" என்பதுதான் அதற்குக் காரணமாகும். அரக்கர்கள் இடையூறு செய்து கொண்டிருந்ததால், மக்களுக்கும், தேவர்களுக்கும் மிகுந்த துன்பம் உண்டாயிற்று. அந்த சமயம் கடவுள், "நான் இங்கேயே இருந்து விடட்டுமா அல்லது மக்களைக் காப்பாற்றுவதற்காகச் செல்லட்டுமா? இதில் எது சிறந்தது?" என்று சிந்தித்தாராம். ஒரு தராசை எடுத்து "கைவல்யம்" என்பதை ஒரு தட்டிலும் "பரோபகாரம்" என்பதை மறு தட்டிலும் இட்டுப் பார்த்தார். பரோபகாரம்தான் அதிக எடையுள்ளது என்பதை அது காட்டியது.

கைவல்யத்தையும், பரோபகாரத்தையும் நிறுத்துப் பார்த்த பகவான், பரோபகாரம்தான் அதிக எடை வாய்ந்தது என முடிவு செய்தார். அதனால் தர்மத்தைக் காக்க பத்துமுறை அவதரித்தார். ராமர் அனுபவித்த துன்பம்தான் எத்தனை? மஹாராஜா தசரதனுக்கு மைந்த னான அவர் தனக்குப் பட்டாபிஷேகம் செய்யவிருந்த தினத்தன்றே காட்டிற்குச் செல்ல வேண்டியிருந்தது. தனது மனைவியோடும் சகோதரனோடும் அவர் காடு சென்றார்.

காட்டில் அமைதியான வாழ்க்கை கிடைத்திருந்தால் பொறுத்துக்கொள்ளலாம். ஆனால் அவர் அப்படி அமைதியாக வாழ்க்கை நடத்த முடிந்ததா? இல்லை ஆரம்பத்தில் அரக்கர்களின் தொல்லை இருந்தது.

சிறிது காலங்கழித்து ராமனின் மனைவியே அபகரித்துச் செல்லப்பட்டாள். இவ்வளவு துயரையும் ராமர் மற்றவர்களுக்காகப் பொறுத்துக்கொண்டார். ராமர் இத்தனை துன்பத்தையும் ஏற்றுக்கொண்டிராவிட்டால் இராவண வதம் ஏற்பட்டிருக்காது; மக்களுக்கு மகிழ்ச்சி கிடைத் திருக்காது. மஹரிஷிகள் தங்களது யக்ஞங்களை இடையூறில்லாமல் செய்திருக்க முடியாது; பெண்கள் பயமின்றி நடமாட முடிந்திருக்காது.

"எதற்காக ராமர் அவ்வளவு துன்பங்களையும் ஏற்றுக்கொண்டார்?" என்று கேட்டால், "மற்றவர்களுக்கு உதவி செய்வதற்காக" என்பதுதான் அதற்குப் பதிலாகும்.

இராமாயணச் சரித்திரத்திலிருந்து கிடைக்கும் நீதி என்ன? அதாவது நாமெல்லோரும் இறைவனை அடையப் "பரோபகாரத்திற்கு ஈடான தர்மம் வேறெதுவும் இல்லை" என்பதுதான். ராம ராஜ்யம் என்பது பரோபகாரம் நிறைந்த மன்னனும், மக்களும் உள்ள நாடாகும். மற்றவன்

ஒரு நல்ல காரியம் செய்வதற்கு உதவியாக நாம் ஏதாவது செய்தோமேயானால், நாம் மிகப் பெரிய தர்மம் செய்தவர்களாகிறோம். அதேபோல், மற்றவர்களின் துன்பங்களைப் போக்குவதில் நாம் ஒரு கருவியாக இருந்தால், நாம் மிகப் பெரிய தர்மம் செய்தவர்களாகிறோம். பரோப காரத்தைக் காட்டிலும் மெச்சத் தகுந்தது வேறொன்றுமில்லை. அதனால்த்தான் நமது முன்னோர்கள் அதற்கு அத்தகைய தரும காரியங்களுக்கு அதி முக்கியத்துவம் கொடுத் தார்கள்.

ஆதிசங்கரர் பலவிதமான இன்னல்களுக்கு உள்ளானார். தமது அற்ப ஆயுளான 32 வருடங்களுக்குள், பாரதம் முழுவதும் மூன்றுமுறை திக்விஜயம் செய்தார். அவரது காலத்தில் ரயில் வண்டியோ, மோட்டார் வாகனமோ இருக்கவில்லை; அவர் நடந்தே செல்லவேண்டி இருந்தது. ஆனாலும் அவர் நாட்டின் மூலை முடுக்குகளுக்கெல்லாம் சென்று, பண்டிதர்களுடன் வாதங்களில் கலந்துகொண்டு, அவற்றில் அவர்களை வென்று, அவர்களுக்கு ஸனாதன தர்மத்தின் உண்மையான கருத்தை உபதேசித்தார். மற்றவர்களுக்கு உதவவேண்டும் என்பதுதான் அவரை அவ்வாறு செய்யத் தூண்டியது. அந்த எண்ணம் இல்லாமலிருந்தால் ஞானியான அவர் தனது வாழ்வை பிரச்சனைகள் எதுவும் இல்லாமல், தனிமையில் கழித்திருக்க முடியும்.

"பரோபக்ருதி சூன்யஸ்ய திங்மனுஸ்யஸ்ய ஜீவிதம்"

என்று ஓரிடத்தில் கூறப்பட்டிருக்கிறது. "மற்றவருக்கு உதவி செய்யாத மனிதன் ஒருவனின் வாழ்க்கை வீண்!" அத்தகையோர் வையகத்தில் வாழ்ந்துகொண்டிருந்தாலும் இருந்தும் இறந்தவரே என்பதே அதன் பொருள்.

ஏன் இத்தகைய உறுதியோடு இந்த வாக்கியம் சொல்லப்பட்டிருக்கிறது? வாழும் போதும் சரி, இறந்தபிறகும் சரி பிறருக்கு உதவாதவனால் என்னதான் பயன்? அறிவில்லாத அற்ப பிராணிகளேயாயினும் அவையெலாம், மனிதனைக் காட்டிலும் சிறந்தவைகள்.

"ஜீவந்து பசவோ யேஷாம் சர்மாப்யுபகரிஷ்யதி"

ஒரு பிராணியினுடைய தோலாவது அது இறந்த பிறகு பயன்படுகிறது. அத்தோலில் இருந்து காலணிகள் செய்யலாம். மனிதத் தோலினால் இந்தப் பயன்கூட இல்லை. அவனை இறந்தவுடன் எரிக்கத்தான் வேண்டும். அல்லது புதைக்க வேண்டும். இறந்தபிறகு பயன்படாத மனிதன் இருக்கும்போதுகூட பயன்படவில்லையென்றால் அத்தகையவனால் என்ன பிரயோசனம்?

மற்றவர்களுக்கு உதவி செய்யும் எண்ணம் உண்டாவதற்கு குரு மற்றும் இறை வனுடைய கிருபை தேவை. அந்தக் கிருபை இல்லாவிட்டால், மற்றவர்களை அடிக்க வேண்டும். அவர்கள் துன்புறுவதைக் கண்டு மகிழ வேண்டும் என்னும் அசுர எண்ணங்கள்தான் மனதில் எழும். இறைவனுடைய அருளைச் சம்பாதிக்க, நாம் சகல ஆத்துமாக்களுக்கும் நம்மால் இயன்ற சேவைகளைப் புரிய வேண்டும். அவ்வாறு சேவை புரிவோமானால் நம் மனதில் தீமைகள் நீங்கி, புனிதம் ஏற்படுகிறது. நம் தூய மனதில் நல்ல எண்ணங்கள் ஏற் பட்டு அதன் வழியே நாம் வாழ்வோமாகில், நம் வாழ்வு மேன்மை அடையும்.

பரோபகாரச் சிந்தனை பெருகி அதன் வழியே வாழ்வோமாகில், நாமெல்லோரும் இறைவனைச் சரணடைந்து சதா காலமும், இறை இன்பத்துடன், நித்திய வாழ்வு வாழலாம். இறைவனை அடைய நமக்கு இராமாயணம் காட்டும் பாதை இதுவேயாகும்.

*ஆயிரம் உபதேசங்களைவிட ஒரு அனுபவம் பாடம் கற்றுத்தரும்.*

# வழித்துணை 11

– ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் அவர்கள் –

01 தன்னவரைத் தக்கவராய், பிறர்தம்மைத் தகாதவராய்
எண்ணுகின்ற எண்ணத்தில் மாற்றம் இன்றேல்
புன்னகைகள் செய்வதும்பொய் புகழ்ந்துரைகள் பேசலும் பொய்
இன்னும்நாம் மனிதர்களாய் இல்லையென்பதே மெய்யாகும்.

02 கடல் நீரைச் சூடாக்கி கார்முகில் ஆக்கி
உடல் குளிர வைத்துப்பின் உம்மகத்தே மழைபொழிய
திடம் கொண்டு யாரும் வருவரென்று எண்ணாதீர்
மடல் எழுதும் கணபதிக்கு மழைதருவார் அவரே.

03 விலங்குகளும் பறவைகளும் இறைவனுக்கு வாகனமாய்
துலங்குதல்போல் மானிடரேன் மானிலத்தில் இல்லையெனில்
உலகினையே படைத்தோனை படைத்தவர்தாம் என்போரை
தலமேறத் தகுதியற்றோர் என்பதினைக் காட்டுதற்காம்.

04 அறுகம் புல்லரைத்து ஆவின்பால் அதில்கலந்து
இறுகப் பிடித்துஅதை இலையொன்றின் மேல்வைத்து
சிறுமலர் எடுத்துநாங்கள் சிவசிவ எனச் சூடிவிட்டு
பெறுவதைக் கேட்டால் பெருமான் பேருளை மறுப்பாரோ.

05 அறிவுடையோர் என்றுமட்டும் இருப்பதில்நாம் பலனில்லை
குறிக்கோளும் உடையோராய் இருத்தல் வேண்டும்
வறியவரும் சிறியவரும் நெறியோடு வாழ்வதற்கு
உறுதியோடு உழைப்போரே அறிவுடையோராவர்.

06 தலையெழுத்து என்பதொரு தூரநோக்குக் கருத்தாகும்
கைகளில்தான் எழுத்துண்டு கண்களுக்கே அதுதெரியும்
ஆதலினால் கைகளை நாம் கவனமாகக் கையாள்வோம்
விண்ணவரும் இருப்பதெங்கள் கைகளில்தான் என்றே.

*உண்மையான பெரிய மனிதனுக்கு முதல் அடையாளம் பணிவாக இருத்தல்.*

07 பிறந்தோம் என்று நாங்கள் சொல்வதிலே அர்த்தமில்லை
பெற்றோம் என்று பெற்றோர் சொல்வதில்தான் அர்த்தமுண்டு
ஆதலினால் பிறந்தநாள் விழாக்களைநாம் விட்டுவிட்டு
பெற்றநாள் விழாவெடுத்து பெரும்பேறு அடைந்திடுவோம்.

08 இறப்பு எல்லோற்கும் உண்டென்று நாமறிவோம்
இறப்பின்பின் ஏதுண்டு என்பதையே அறியோம்நாம்
சொர்க்கமென்பார் நரகமென்பார் யார்யார்க்கு அவைகளெனில்
பிறப்புண்டேல் நரகமும் மீண்டும் பிறவாமை சொர்க்கமுமாம்.

09 இயலாதார் என்றொருவர் இல்லறத்துட் புகுந்துயாரும்
இயலாமை தன்னையே பயன்படுத்தல் நன்றன்று
இயலாமை ஒருவர்க்கே சொந்தமான ஒன்றன்று
இயலாமை எல்லோர்க்கும் வரும்தடுக்க இயலாது.

10 ஏதிலியாம் என்றொருவர் வாழ்க்கைக்கு எதுகைசொல்லி
மேதினியில் மேலவர்போல் மமதைகொள்ளல் நன்றன்று
ஊதியங்கள் ஒருவர்க்கே சொந்தமான ஒன்றன்று
வீதியோரம் வாழ்பவரும் விதிவந்தால் அதிபராவார்.

## நேர்மைக்கு, கூலியா

தொழில் ஒன்றும் கிடையாது ஏழை ஒருவன் வேலை தேடிச் சென்றபோது ஒரு பழத் தோட்டத்திற் காவலாளியாகக் கடமைபுரிய இடம் கிடைத்தது. அவன் தனது கடமையில் கண்ணும் கருத்துமாக இருந்தான். ஒருநாள் அத்தோட்டத்தின் முதலாளி வந்து தனது தோட்டத்திலுள்ள நல்ல பழத்தில் இரண்டைப் பறித்து வரும்படி காவலாளியை வேண்டினான். அவனும் அப்படியே இரு பழங்களைப் பறித்து வந்து கொடுத்தான். அப்பழத்தை முதலாளி சுவைத்துப் பார்த்தபோது அவை புளிப்பாக இருந்ததால் காவலாளியிடம் நீர் இவ்வளவுகாலமும் இந்தத் தோட்டத்தில் இருந்தும் புளிப்பும் இனிப்பும் உள்ள பழங்களின் வித்தியாசம் தெரியாதா என்று வினவியபொழுது காவலாளி தான் தங்களின் தோட்டத்தில் வேலை புரியவந்தேனே அன்றி பழங்களின் சுவையை அறியவல்ல என்று சொன்னதைக் கேட்ட முதலாளி அவன் நேர்மையில் சந்தோஷமடைந்து அவனுக்குக் கூலி உயர்த்திக் கொடுத்தான். ஆனால் காவலாளி ஐயா, நான் எனது கடமையைத்தான் செய்தேன். ஆனால் நேர்மைக்காக நீங்கள் கூலியை உயர்த்தித் தர வேண்டாம் என்று சொல்லி அத்தோட்டத்திலிருந்து வெளியேறிவிட்டான்.

*ஒழுக்கமில்லாத வாழ்வு மரணத்திற்கு நிகர்.*

# வயிரவர் வழிபாடு

– திருமதி பொ. திலகவதி அவர்கள் –

வயிரவர் வழிபாடு காலத்தால் மிகவும் பழையது. வயிரவரை முழுமுதலாகக் கொண்டு வழிபடும் வைரபமும் பழைய சமயங்களுள் ஒன்று. சைவத்திருக்கோயில்களின் வழிபாட்டு ஒழுங்கிலே வயிரவப் பெருமானுக்கு சிறப்பிடம் ஆகும். பெருமானுக்கு யாழ் குடாநாட்டில பல தனிக்கோயில்கள் உண்டு.



பிரமாவின் அகந்தையும் பாவத்தையும் தொலைக் கவும், விஷ்ணு முதலிய தேவர்கள் இறைவனை மறந்து தருக்குற்ற காலத்தில் அவர்களை திருத்துவதற்காகவும் கருணைகொண்டு சிவபெருமான் வயிரவக் கடவுளைத் தோற்றுவித்தார். இப்பெருமான் பிரமனது ஒரு சிரசை நகத்தாற் கிள்ளி ஏந்தி சூலப்படையுடன் இச்சிரசையும் திருக்கரத்தில் ஏந்தினார். ஏனைய தேவர்களின் சிரத்தை அவர்களின் தருக்கடங்கும் வரையும் கவர்ந்து அவர்களை ஆட்கொண்ட கோலம் வயிரவ மூர்த்தமாகும்.

சிவத்தினின்று தோன்றிய காரணத்தால் இவர் சிவகுமாரர் எனப்படுவார். ஆயினும் சிவத்தின் வேறாகாத சக்தி வடிவமே ஆவார். இவரது வாகனம் வேத வடிவ மாகிய நாய் ஆகும். அவரை வணங்கும்போது எங்களுடைய அகந்தையை நீக்கிக் காத்தருளும்படி வேண்டுதல் செய்ய வேண்டும். சிவபெருமானுடைய இரண்டாவது மகனே வயிரவர். சிவபெருமானைப்போல் வயிரவருக்கும் முக்கண் ணும் நான்கு கைகளும் சடாமுடியும் திரிசூலமும் உண்டு. அவர் நீலநிறம் பொருந்திய திருமேனியும், சிலம்புகள் ஒலிக்குந் திருவடியும், பாம்பு பொருந்திய திருவரையும் அனந்தகோடி சிரமாலைகள் அணிந்த திருமார்பும், சூலமும் மழுவும் பாசமும் உடுக்கும் ஏந்திய திருக்கரங்களும், திருநேந்திரங்களும் வக்கிரதங்களும் செவ்வானம் போலும் திருச்சடையும் கோபகுறிப்போடு கூடிய திருநகையும் உடையவர்.

அவரது உருவம் சுத்த நிர்வாணமாயிருக்கும். அவ்வுருவத்திற்கு உடை தரிப்பதே இல்லை. உலகபற்றை விடினும் உடல்பற்றை விடல் கடினம். உடல் பற்றிருந்தால் உடையில்லாதிருக்க முடியாது. ஆனபடியால் அவர் உடல்பற்று இல்லாதவர். வயிரவர் ஊரின் பாதுகாப்புப் பொருட்டும், பிணிக்கத்தின் பொருட்டும், துன்ப நீக்கத்தின் பொருட்டும் இருக்கிறார். வயிரவக் கடவுளின் பூதகணங்கள் காலவேகன், அக்னிமுகன், சோமகன், ஆலகாலன், அதிபலன். இராக் காலங்களில் வலி மீறி நிற்கும் அசுரர்கள் செய்கையால்

தேவர்கள் பாதியாமல் பாதுகாப்பதே அவரின் வேலையாகும். வயிரவருக்கு வடுகன் என்றொரு பெயர் உண்டு. வயிரவர் பரிவாரமூர்த்தி என்ற நிலையிலே எல்லா மண்டபங்களும் கடந்து கோவிலின் உட்புறத்தில் வடக்கிற்கும், வடகிழக்கிற்குமிடையில் இறைவன் சந்நிதியை நோக்கியவாறு வீற்றிருப்பார். வயிரவ விரதங்கள் மங்கல வார விரதம், சித்திரை பரணி விரதம், ஐப்பசிப் பரணி விரதம் என மூன்றாகும். தைமாசத்து முதல் செவ்வாய்கிழமை தொடக்கம் ஒவ்வொரு செவ்வாயும் வயிரவக் கடவுளைக் குறித்து அனுட்டிக்கும் விரதம் மங்களவார விரதமாகும். சித்திரைமாத பரணி நட்சத்திரத்தில் வயிரவரைக் குறித்து அனுட்டிக்கும் விரதம் சித்திரை பரணி விரதமாகும். ஐப்பசிமாத பரணி நட்சத்திரத்திலே வயிரவக் கடவுளைக் குறித்து அனுட்டிக்கும் விரதம் ஐப்பசிமாத விரதமாகும்.

வயிரவக் கடவுளின் பூசைக்குரிய பூக்கள் நந்தியாவர்த்தம் தவிர்ந்த ஏனைய பூக்களாம். இவருக்கு நிவேதனமாக வடைமாலை சாத்துவது வழக்கம். பாதுகாவல் தெய்வம் என்ற முறையிலே கோவிலின் திறப்பு ஒப்புவிக்கப்படுவது உண்டு. அதனால் முதற்பூசையும் இறுதிப்பூசையும் இவருக்கே நடப்பது உண்டு. பெருங் கோவில்களிலே மகோற்சவம் முன்பும் மகோற்சவம் முடிந்த பின்பும் பரிவார மூர்த்தியாகிய வயிரவருக்கு மடை போடப்படும். புதிதாகக் கோவில் கட்டும்போதும் பிரதிஷ்டை செய்யும்போதும் வயிரவரை முன் நிறுத்திக் கிராமசாந்தி செய்வது வழக்கம்.

பக்தியுடன் வருபவரை பார்த்திருந்து காத்தருள்வார். சூலம் ஏந்தியே வந்து சூழ்நிலை மாற்றியே காத்தருள்வார். வீதிஉலா வந்து எட்டுத்திக்கும் காவல் நின்று எங்களைக் காத்தருள்வார். இக்கால கஷ்டங்களில் துன்பமகற்றி இன்புற்று வாழ வயிரவரைப் பிரார்த்திப் போமாக.

பரமனை மதித்திடாப் பங்க யாசனன்
ஒருதலை கிள்ளியே யொழிந்த வானவர்
குருதியும் அகந்தையும் கொண்டு தண்டமுன்
புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம்.

வைரவ சுவாமி சரணஞ் சரணம்!


**சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னப்பணிக்கும் மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப் பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர் கீழே உள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.**

| **காசுக்கட்டளை** | **காசோலை** |
| --- | --- |
| செ. மோகனதாஸ் | செ. மோகனதாஸ் |
| சந்நிதியான் ஆச்சிரமம், | க.இல – 7342444 |
| தொண்டைமானாறு. | இலங்கை வங்கி, |
| தொ.இல – 0213219599, 0212263406 | பருத்தித்துறை. |

E.mail: suthanm329@gmail.com


*சுயநலமற்ற சேவையே மனிதனைத் தெய்வத்தன்மைக்கு உயர்த்திவிடும்.*

# மண்டூர்க் கந்தசுவாமி கோயில்

– திரு மூ. சிவலிங்கம் அவர்கள் –

இறையருளின் அருட்பிரசாதமான இயற்கை வளங்கள் மலிந்த மீன்பாடும் தேன்நாடாம் மட்டக்களப்பில் தில்லை மண்டூர்த் திருப்பதி அற்புதமானது. இத்திருவூர் மட்டு நகரின் தென்பால் இருபது கல் தொலைவில் நெடிய மட்டக்களப்பு வாவியின் மேற்குக் கரையில் அமைந்துள்ளது. இப்பதி புராண காலந்தொடக்கம் இறைவனின் திருவிளையாடலுக்குக் களம் அமைத்த பெருமையுடையது. அன்றுமுதல் ஆடம்பரமற்ற அமைதியான என்றும் மாற்றுக் குறையாத பழந்தமிழ் பாரம்பரியத்தையும், தூய சைவ நெறியையும் பக்தி வளம் குன்றாத மௌன பூசையால் யாவரையும் வழிபட ஒன்றிணைக்கும் புண்ணிய பூமி யாக அமைந்துள்ளது. பல நூறு வருடங்கள் கடந்தும் ஆரம்பகாலப் பண்பாட்டால் பாரம் பரியங்களால் திராவிட முறைப்படி முருக வழிபாடு மிகச் சிறப்படைந்துள்ளது.

காலத்தை அறிய முடியாத ஆதியில் தமது (திருவிளை) ஆடல் மையமாகச் சிதம்பரத்தைத் தேர்ந்தெடுத்தார். சைவநெறியின் தலைமைப்பீடமான கோயிலை அங்கு அமைத்தார். சைவ உலகின் கோயில் என்றால் முதலில் தோன்றுவது சிதம்பரம் என்னும் பதியாகும். இப்பதியின் சிறப்பை மேம்படுத்தவென்றே இச்சூழலில் "தில்லை" என்னும் தெய்வீக மரங்களை வளரச்செய்து சோலைவனமாக்கினார். "சிதம்பரம்" என்னும் பெயரைக் கூறுமுன்பே "தில்லை" என உணரவைத்தார். "தில்லை" என்னும் சொல் மேலோங்கியதை யாவரும் அறிவர். சைவ ஊற்று ஊறும் சிவத்தலம் "தில்லைச்சிதம்பரம்" என்பர்.

இறைவன் தாய்நாட்டின் தில்லை என்னும் பெயரைச் சேய் நாடாம் இலங்கையிலும் நிலைபெறச் சித்தங்கொண்டார். மட்டக்களப்பு மண்ணில் நெஞ்சில் வஞ்சனை இல்லாத வேட்டுவ மக்கள் வாழ்ந்த மண்டூரில் தமது பிரியமான தில்லை மரங்களை வளரச் செய் தார். இப்பதி பிற்காலத்தில் முருகனின் வேற்படையால் திருப்படைக் கோயிலெனவும் தில்லை மண்டூர்க் கந்தசுவாமி கோயிலெனவும் வழங்கப்படுவதையும் அறிவோம். இலங்கையில் வேறெங்கும் காணாத தில்லை மரம் மண்டூரில் வளர்ந்து தில்லை மண்டூர் எனப் போற்றப்படுவது இறையருளின் சித்தமாகும்.

## மண்டூரில் வேற்படை வந்த திருவிளையாடல்

மும்மலங்களே உருவாயமைந்த அசுரகுல பதியான சூரன் என்பவனும் அவன் தம்பியரும் இறைவனிடம் பெற்ற வரத்தின் துணையுடன் பல யுக காலம் மூவுலகையும் ஆண்டு தேவர்கள் முனிவர்களை வதைத்தனர். தாங்க முடியாத வேதனையால் யாவரும் இறைவனிடம் முறையிட இறைவன் அருள்தர விளைந்தார். தமது நெற்றிக் கண்ணால் தோன்றச் செய்த சுடர் பொறிகள் முருகனாகி சூராதி அசுரர்களை வதஞ்செய்யச் சித்தங் கொண்டார். அன்னை உமையவள் முருகனின் வெற்றிக்கு உறுதி செய்ய உளம் நாடினார். மும்மலங்களான அசுரரை அழிக்கவெனத் தமது பூரண சக்தியை உபயோகித்து ஞான சக்திவேல் ஒன்றை உருவாக்கி முருகனிடந்தந்து ஆசி வழங்கினார். நன்றியுடன் பெற்ற

*ஒருவர் உனக்குச் செய்த உபகாரத்தை ஒருபோதும் மறவாதே.*

வேற்படையுடன் முருகன் பாலகனாகவே சூரனுடன் பொருதக்களத்தை நாடினார். எண்ணிறைந்த வல்லோரை தேவர்களைப் பலி கொண்டு இறுமாந்த சூரன் இச்சிறுவனா என்னுடன் போருக்கு வருகிறான் என எள்ளி நகையாடினான். அச்சமயம் முருகப்பெருமான் தமது விஸ்வரூபத்தை எடுத்ததும் சூரன் திகைப்படைந்தான். சூரனின் மூடச் சிந்தனையைக் கச்சியப்ப சிவாசாரியார் பின்வருமாறு கந்தபுராணத்தில் கூறினார்.

"கோலமா மஞ்ஞை தன்னிற் குலவிய குமரன் தன்னைப்
பாலனென்றிருந்தேன் அந்நாட்பரிசு இவை உணர்ந்திலேன் யான்
மால்அயன் தனக்கும் ஏனை வானவர் தமக்கும் யார்க்கும்
மூல காரணமாய் நின்ற மூர்த்தி இம்மூர்த்தியன்றோ"

முருகனின் விஸ்வரூபத்தைக் கண்டதும் சூரனிடம் உறைந்திருந்த ஆணவம் அன்றோடழிந்தது. எஞ்சிய கர்ம வினையை மாய வலை நெறிப்படுத்த தனது செருக்கை நிலைநாட்டி மார்பைத் தட்டியவாறு சூரன் போருக்குப் புறப்பட்டான். முருகன் தமது பெற்றோரைத் தியானித்துச் சக்திவேலைத் தொட்டதும் வேலானது வீராவேசத்துடன் சூரனை நோக்கியது. ஆணவம் மறைந்த சூரனைப் பலம் வாய்ந்த வேலானது இருகூறாகப் பிளந்தும் அதற்கு பசி அடங்கவில்லை. அக்கணமே இந்துமா கடலிற் பாய்ந்தது. அதன் வேகம் கடலிற் பட்டதும் மூன்று கூறான பிளம்பாகி வேல் வடிவில் தனித்தனியே மேலெழுந்து இலங்கையின் கீழ் கரையை நாடின. அவற்றில் ஒன்று உகந்தை மலையிலும் அடுத்தது திருக்கோயிலிலமைந்த வெள்ளை நாவல் மரத்திலும் மூன்றாவது மண்டூரில் முதிர்ந்த தில்லை மரத்திலும் தங்க வேலாகப் பதிந்தது.

## மண்டூர் தில்லை மரத்தில் தங்கிய தங்கவேல்

இறையருளின் மகிமையால் மண்டூர் தில்லை மரத்தின் சந்தில் தங்கிய தங்க வேலானது தனது அற்புத சக்தியால் உரிய பக்தர்களைக் கவரக் காத்திருந்தது. அன்று காலைக் கதிரவன் உதயமாகிறான். பகலவனின் ஒளி பட்டதும் தங்கவேலானது தகதகவெனப் பிரகாசிக்கிறது. அன்றைய உணவிற்காகத் தூய சிந்தனையுடைய மண்டூர் வேடுவர் வெளிச் செல்கின்றனர். ஒருவனின் கண்ணை தங்கவேலின் ஒளிப்பிரகாசம் கவர்கிறது. அவ்விடத்தில் தன்னை மறந்து தில்லை மரத்தை நோக்குகிறான்.

பறவை இனங்களில் தமது சமூக ஒற்றுமையை நாடும் காக்கையினங்கள் ஏதேனும் உணவைக் கண்டால் தாம் நேரில் தனித்து நின்று பெறுவதில்லை. பகிர்ந்துண்ணும் பண்பான காக்கைகள் தம் இனத்தவரைக் கரைந்து அழைத்து யாவும் ஒருமித்தே பயன்பெறும். காக்கை இனத்தின் பண்பேபோல நெஞ்சில் வஞ்சமில்லாத வேடன் தான் கண்ட ஒளிப் பிளம்மை யாவரும் அறிந்து இன்ப சுகம் பெறும் நோக்கில் தமது இனத்தைக் கூவி அழைக்கிறான்.

இதேபோல நாலா திசையிலும் வேட்டைக்காகச் சென்ற யாவரும் கேட்ட குரலை நாடி விரைகின்றனர். வேட்டையாடுவதில் தொழில்நுட்பம் தெரிந்த வேடர் காட்டினுள் நிமிர்ந்து சென்றால் மிருகங்கள் ஓடி விடும் என்பதற்காக மிருகங்களைப்போலத் தாமும் ஒருவர் பின் ஒருவராகக் குனிந்தே செல்வர். நாலா பக்கங்களிலுமுள்ள வேடுவர் தங்கவேல்

அமைந்த தில்லை மரத்தடியில் ஒன்றுகூடினர். கண்ட காட்சியின் பெருமையால் தமது பக்தியான அன்பை வெளிப்படுத்தி ஆடியும் பாடியும் கூடி மகிழ்ந்தவண்ணம் அவர்களின் பொழுது விரயமாகிறது. படிப்பறிவில்லாதபோதும் தமக்குள் முதிர்ந்த தலைவரின் ஆணைப்படி ஒழுகும் பண்புள்ளவர்கள் வேடர்கள்.

## தில்லை மரக்காட்டில் தங்கவேல் முருகனின் ஆலயம்

தூய பக்தர்களின் உள்ளங்களே இறைவனின் இருப்பிடம். அன்று காலை தமது உணவை நாடி வேட்டைக்குச் சென்ற வேட்டுவர் தமது வாழ்வில் மறக்கமுடியாத தெய்வீக உணர்வை நாடிவர முடிந்தது. இன்ப உணர்வால் ஆடிப்பாடி மகிழ்ந்தவர்கள் தமது முதிய தலைவரின் அறிவுரையை அமைதியுடன் கேட்டனர். "வேடுவராகிய எங்களின் நல்வாழ்வுக்காக இங்கு தோன்றியது முருகப்பெருமானின் சின்னமாகும். நாம் யாவரும் இன்று இந்த மரத்தடியில் பெருமானுக்காக ஒரு கொத்துப் பந்தல் அமைத்துப் பூசை வழிபாடு செய்யவேண்டும். யாவரும் உரிய பணிகளைச் செய்து முருகப் பெருமானை வழிபட உதவுங்கள்" என்று முதியவர் யாவரையும் அன்புடன் உற்சாகப்படுத்தினார்.

மறுகணமே காட்டில் பந்தல் அமைப்பதன்பேரில் நேரிய நெடிய தடிகளை வெட்டி வந்து தில்லை மரத்தடியில் கொத்துப் பந்தலிடும் பணி ஆரம்பமானது. கப்புகள் நாட்டி தடிகளால் விட்டம் கட்டி அதன்மேல் நிழலுக்காக இலை குழைகளைப் பரப்பி மூடியதும் கொத்துப் பந்தல் உருவானது. வேறொரு பகுதியினர் அப்பந்தலைச் சூழ நாற்புறமும் மரம் செடி கொடிகள் புல் பூண்டுகளை அகற்றிச் சுத்தஞ் செய்தனர். பெண்கள் அவ்விடத்தைக் களி மண்ணால் மெழுகிப் புனிதப்படுத்தினர்.

வேறொரு பகுதியினர் காட்டிலுள்ள கொடிப்பூக்களால் அவ்விடத்தைச் சோடித்தனர். அவர்களுள் ஒரு சிலர் அடர்ந்த காட்டுக்குட் சென்று சுத்தமான தேன் வதையை உருமாற்றாது சுத்தமாக எடுத்து வந்தனர். கூடிச் சென்றவர்கள் நறுமணமுள்ள அழகிய மலர்களையும் நறுங் கனிகளையும் கொண்டு வந்தனர். தமக்குள்ள மதியூகமும் சாந்த குணமும் பக்குவ நிலையிலுள்ள ஒருவர் முருகனுக்கு நறுமலர்கள் சூட்டியதும் கனிகளையும் நறுந்தேன் வதையையும் நிவேதனமாகப் படைத்துப் பூசித்தனர். அவர்களின் பூசை அன்றுமுதல் மந்திர தந்திரமில்லாத பக்தியான மௌனபூசையாகும். யாவரும் அவ்விடத்தில் முருகனை அன்புடன் வழிபட்டனர். பின்னர் ஆடியும் பாடியும் ஆரவாரஞ் செய்தும் தமது பண்பான பக்தி வழிபாட்டைச் செய்து இன்புற்றனர். இவர்களின் பக்தி மயமான பூசையும் வழிபாடும் தொடர்ந்தன. காலங்களும் கடந்தன. சந்ததி சந்ததியாக வேடர் பூசை மண்டூரின் பக்தியை வளர்த்தது.

இவ்வரிய பக்திமயமான வழிபாடு பிற்காலத்தில் அவ்வூரை நாடுவோரையும் கவர்ந்தது. அயலூர்களிலிருந்து வேட்டையாடவும் வாவியில் மீன் பிடிக்கவும் வருவோர் இவ்விடத்தில் தங்கித் தாமும் வழிபட்டனர். இவ்வாறு வேடர்களின் பூசை வழிபாடுகள் எவ்வித தடைகளும் இன்றிப் பல நூற்றாண்டுகள் நடந்தன. தமது வழிபடு நிலையத்தின் பாதுகாவலை முன்னிட்டு காவலாளியாக வேடுவர் இரவு பகலாக வில்லம்பு ஏந்தியவாறு தூய பணியாற்றினர். காலங்கள்

*மனச்சாட்சி என்ற கூட்டிலேதான் ஒவ்வொரு நற்காரியமும் பிறக்கிறது.*

கடந்தும் வேடர்களிடத்தே நடை உடை பாவனை போன்ற பல முன்னேற்றங்கள் வந்தபோதும் இன்றும் பெருவிழாவில் சுவாமி ஊர்வலம் வரும்போது பண்டைய முறைப்படி வில் அம்பு ஏந்திய வண்ணம் ஒருவர் நாற்றிசையையும் அவதானித்துக் கடமை புரிவதை பின்னர் அறிவோம்.

**மண்டூரின் குடிப்பரம்பல்**

மண்டூர் தில்லை மரத்தில் தங்கவேல் பதிந்த காலத்தில் மண்டூரில் மட்டுமல்ல கீழ் மாகாணத்தில் குடிப்பரம்பல் ஏதுமில்லை. பல நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்த இயக்கர் நாகரின் பிற்சந்ததியான வேடுவரே மலைக்குகைகளில் ஆங்காங்கே வசித்து வந்தனர். மண்டூரின் மேற்திசையிலமைந்த கட்டாக்குளம் சுனையன் கல் ஆகிய பகுதிகளில் வாழ்ந்த ஆதிவாசிகளான வேடர்களே தில்லை மரத்தில் பதிந்த தங்க வேலைக் கண்டதும் கொத்துப் பந்தல் அமைத்து முருகனை வழிபட்டு வந்ததை முன்னர் அறிந்தோம்.

இயற்கை அன்னையின் பேரருளால் கீழ் மாகாணம் பரவலாக பாரிய வளம்மிக்க காடுகளாகவே காணப்பட்டது. மேற்கூறிய வேடுவர் பரம்பரையினரே சந்ததி சந்ததியாக இன்றுவரை பூசை செய்து வருவதை பின்னரும் வேறாக அறிவாம்.

இலங்கையின் ஆதிவாசிகளின் அரசியான குவேனியின் காலத்தில் வங்க தேசத்திலிருந்து பெற்றோரால் துரத்தப்பட்ட விஜயகுமாரன் வந்து நாட்டை ஆண்டான். தொடர்ந்து அரச நிர்வாகம் மற்றும் பணிகளின் பேரில் பலர் இங்கு வரவழைக்கப்பட்டு குடியேறினர். மேலும் இந்தியாவிலிருந்து கலிங்கர், கங்கர், சிங்கர், மறவர், மராட்டியர் ஆகிய இந்திய அரசர்களின் பிரதிநிதிகள், வம்சத்தினர், உறவினர் இலங்கைக்கு வந்து இலங்கையின் பல்வேறிடங்களில் குடியமர்ந்து தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி அரசாட்சி செய்தனர். தத்தமது அரசபணி, விவசாயம், ஆலயப்பணி, பாதுகாப்பின் பேரில் உதவியாட்களைக் காலத்துக்குக் காலம் வரவழைத்து இலங்கையின் குடிப்பரம்பலை விருத்தி செய்தனர். மட்டக்களப்பின் இயல்பான நீர்வளம், நிலவளம் கருதி விவசாயத்தை மேம்படுத்தினர். இவ்வாறமைந்த குடிப்பரம்பலில் நாட்டு மக்களின் வாழ்வியலை சிறப்பிக்கும் அன்றைய அரசர்கள் சிற்றரசர்கள் வேண்டிய உதவிகளையுஞ் செய்தனர். அதே சமயம் பிரதான ஆலயங்களையும் சிறப்பித்தனர். (தொடரும்...

## குருபூஜை தினங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| யூலை | 16 | ஆனி | 32 | திங்கள் | மாணிக்கவாசகர் |
| யூலை | 20 | ஆடி | 04 | வெள்ளி | மயில்வாகனம் சுவாமிகள் |
| யூலை | 21 | ஆடி | 05 | சனி | சுந்தரமூர்த்தி நாயனார் |
| யூலை | 27 | ஆடி | 11 | வெள்ளி | பட்டினத்தடிகள் |
| ஆகஸ்ட் | 21 | ஆவணி | 05 | செவ்வாய் | குங்கிலியக்கலயர் |

*கடமை உணர்வே உனது நேர்மையான வாழ்க்கைக்கு ஆதாரம்.*

# சங்கரா ஆர் கொலோ சதுரர்?

## (நயப்புரை)

– திரு இரா. சத்குருசங்காரவேல் அவர்கள் –

தந்தது உன்தன்னைக்; கொண்டது என் தன்னைச்;
சங்கரா ஆர் கொலோ சதுரர்?
அந்தம் ஒன்று இல்லா ஆனந்தம் பெற்றேன்!
யாது நீ பெற்றது ஒன்று என்பால்?
சிந்தையே கோயில் கொண்ட எம் பெருமான்,
திருப் பெருந்துறை உறை சிவனே!
எந்தையே ஈசா, உடல் இடம் கொண்டாய்,
யான் இதற்கு இலன் ஓர் கைம்மாறே!

சதுரர்- திறமை வாய்ந்தவர், சாமார்த்தியர்.

**பொருளுரை:-**

திருப்பெருந்துறைதனில் குடிகொண்டுள்ள எம்பெருமானே! எனது உள்ளத்தையே பெருங்கோயிலாகக் கொண்டிருக்கும் எம்பிரானே! உன்னை என்னிடம் கொடுத்துவிட்டு, அதற்கீடாக என்னை நீ வாங்கிக் கொண்டாய்! என்றும் சுகத்தை அளிப்பவனே இறைவா! நம் இருவரில் யார் சாமார்த்தியர்? மேலும், எல்லை என்ற ஒன்றே இல்லாத பேரின்பத்தை நான் பெற்றுக்கொண்டேன், என்னிடமிருந்து ஏதாவது ஒன்றையேனும் நீ பெற்றுக்கொண்டாயா? இல்லையே! என் பிதாவே! இறைவா! எனது காயத்தில் கோயில் கொண்டவனே! உன்னிடம் பெற்றுள்ள இந்தப் பெரும்பேறுகளுக்கு எல்லாம் என்னால் பிரதியுபகாரம் ஒன்றையேனும் தரமுடியாதுள்ளேனே!

**நயப்புரை:-**

இப்பாடலின் பொருளுரையைத் தொடர்ந்து, இதில் நிறைந்திருக்கும் நயங்களைத் தேடிக்கண்டு மகிழ்வோம். முதற்கண் மணிவாசகப் பெருமானார் அருளிச் செய்துள்ள "திருவாசகம்" என்னும் நூலை எடுத்து நோக்குவோம்!

மனிதன் சொல்ல பகவான் கேட்டது - திருவாசகம்
பகவான் சொல்ல மனிதன் கேட்டது - கீதை

இவ்விரண்டு நூல்களும் மனிதனை ஆற்றுப்படுத்துவதற்காகப் படைக்கப்பட்டவை ஆகும். இவற்றுள் திருவாசகம் மனிதனது மணிவாசகமாகி, இறைவனால் அங்கீகரிக்கப்பட்டு மகிமை பெற்றுள்ளது என்பதில் ஐயமில்லை. இம்மகிமையே திருவாசகம் அருளிய பெருமானாருக்கு, யாவரும் கொண்டாடும் "மாணிக்கவாசகர்" என்ற மனம்கவர் திருநாமம் வருவதற்குக் காரணமாகிவிட்டது. பெருமானாருக்கு அவரது பெற்றோர் இட்ட பெயர் எங்கும் காணமுடியவில்லை. பெயர் சரியாகத் தெரியாதவரை அவர் பிறந்த ஊரின் பெயரால்

அழைப்பது ஒரு பொது நியதி. இதன் பிரகாரமே "திருவாதவூரர்" என்கின்ற பெயரையும் தாங்கிக்கொண்டார். அவர் பிறந்த ஊர் "திருவாதவூர்" என்பது அனைவரும் அறிந்ததொன்று.

அடுத்து, மணிவாசகப் பெருமானாரின் தகைமைகளைச் சற்று நோக்குவோம். உயரிய பண்பும், சிறந்த கல்விஞானமும், இறைபக்தியும் ஒருங்கே அமையப்பெற்றவர். பாண்டிய மன்னனின் முதலமைச்சர் ஆனவர். "தென்னவன் பிரமராயன்" என்ற உயர் பட்டத்தையும் பெற்றுக்கொண்டவர்.

இவ்வாறான பெரும்பேறுகளைப் பெற்றுக்கொண்டவர், தனது திருவாசகம் எங்கும், எம் இறைவனை விண்ணுற உயர்த்தியும்; தன்னை அதிகமான இடங்களில் மண்ணில் இழிவான ஒரு சீவனிலும் தாழ்த்திப் பதிவு செய்துள்ளார். சில பதிவுகளைக் காண்போம்.

## ஆண்டவனை விழிக்கும்போது:-

மன்னவனே! வேந்தனே! கோவே! மூத்தவனே! மூவாத முதலானே! என்று பலவாறும், அவனது கருணையைக் காட்டும் இடங்களில்: கருணைக்கடலே! அம்மையே அப்பா ஒப்பிலா மணியே! தாயாய் முலையைத் தருவோனே! பால் நினைந்து ஊட்டும் தாயினும் சாலப் பரிந்து நீ...! என்றவாறும் உயர்த்திக் காட்டியுள்ளார்.

## தன்னைக் குறிப்பிடும் அதிகமான இடங்களில்:-

அறிவிலாதவன் எனை, பொய்யவன் எனை, கடையவன் எனை, நாணமில்லா நாயினேன், நாயிற் கடைப்பட்ட நம்மையும், ஊர் நாயின் கடை ஆனேன் என்றவாறு மிகவும் தாழ்த்தியும் காட்டுகின்றார்.

அடுத்து, உன்தன்னை - எந்தன்னை ஆகிய பதங்கள் இப்பாடலிற் முதன்மை பெறுகின்றமையால் முறையே ஆண்டவனையும் மணிவாசக அடிகளாரையும் சார்ந்த ஒரு சிறிய அறிமுகவுரையோடு, நயம் காணும் படலத்தினுள் பிரவேசிப்போம்!

அடிகளார், இறைவனார்க்கும் தனக்கும் இடையில் நடைபெற்றுள்ள ஒரு பண்டமாற்றைத் தெரியப்படுத்துகின்றார். இப் பண்டமாற்றின்மூலம் சாமார்த்தியரானது யார்? என்பதை இறைவனிடமே உரிமையுடன் வினாவுகின்றார். காரணம், பண்டமாற்றை நடத்தியவர் இறைவனாரே! குறித்த வினாவுக்கான விடையைக் காண்பதற்கு ஏதுவாகப் பண்டங்களின் பெறுமானங்களைக் காண்பது அவசியம். பெறுமானங்கள் கிடைத்ததும், பயன் அடைந்தவர் யார் என்பதோடு குறித்த வினாவுக்கான விடையும் கிடைத்துவிடும்.

குறித்த பண்டமாற்றத்தில் நடந்தவை, "தந்தது உன்தன்னை", "கொண்டது என் தன்னை" என்பனவேயாகும். "தந்தது" என்பது கொடுத்தது ஆகின்றது. அதாவது இறைவனார், தன்னை இலவசமாக அடிகளாரிடம் கொடுத்தருளியது. "கொண்டது" என்பது விலைக்கு வாங்கிக்கொண்டது ஆகின்றது. குறிப்பிட்ட இரண்டு பண்டங்களின் பெறுமானங்களை அடிகளாரது கூற்றாகவே தரப்பட்டுள்ள சிறிய அறிமுகவுரையில் காணும், இருவர் சார்பான பெறுமதிமிக்க பெறுமானம் ஒவ்வொன்றைக் கவனத்தில் எடுத்து ஆராய்வோம்.

## இறைவனாரின் பெறுமானம்:-

பால் நினைந்து ஊட்டும் தாயினும் சாலப் பரிந்து நீ... என்றவாறு மெச்சுகின்றார். பெற்ற குழந்தைக்குப் பசி எடுத்தாலும் வாய்விட்டுக் கேட்கத் தெரியாத பரிதாபநிலை!

*நிலைமையை மட்டும் மாற்றினால் போதாது, நீயும் மாறவேண்டும்.*

ஆனால், பெற்றதாயானவள் தனது குழந்தைக்குப் பசி எடுக்கும் நேரங்களை, உள்ளுணர்வு தூண்ட, தானாகவே உணர்ந்து, இரங்கிப் பால் ஊட்டிவிடுகின்றாள். இப்பெருங் கருணையைக் கருத்தில் வைத்தே, நம் முன்னோர்கள் மாதா, பிதா, குரு, தெய்வம் என்று தெய்வங்களை நிரைப்படுத்தும் வேளையில் தாய்க்கே முதல் இடம் தந்துள்ளனர். இத்தகைய பெருங் கருணைத் தாய்க்கும் மேலாகவே இறைவனாரை உயர்த்தி வைத்துள்ளார் மணிவாசகப் பெருமானார்.

## அடிகளார் பெருமானம்:-

ஊர் நாயின் கடை ஆனேன்... என்றவாறு தன்னைத் தானே மிகவும் இழிவுபடுத்தி உரைக்கின்றார். மண்ணிலே இழிவான சீவனுள் ஒன்று நாய். விதிவிலக்காக இக்காலத்தில், செல்வந்தர் வீடுகளில் வளர்க்கப்படும் நாய்களுக்குச் சில வசதி வாய்ப்புகள் கிடைக்கப்பெறு கின்றன. அதனால், இழிவுகள் சில மறைக்கப்படுகின்றன. இந்த நிலையைத் தவிர்த்துவிடவே தன்னை, ஊர் நாயிலும் கடையவன் என்றே தாழ்த்திக்கொண்டுள்ளார். எமது பேச்சு வழக்கில் ஊர்நாய் என்பது தெருநாய் என்றே வழங்கப்படுகின்றது. தெரு நாய்கள் மெலிந்து, நோய்வாய்ப்பட்டு, சொறி- குட்டமாகி, உணவின்றி அலைந்து திரிந்துகொண்டே இழிந்த நிலையில் சீவிக்கும். இந்த இழிநிலைக்கும் கீழாகவே தன்னைத் தாழ்த்திக்கொண்டுள்ளார் அடிகளார்.

இவ்விரண்டு உய்த்துணர்தலுடன், சகல மதிப்பீடுகளையும் கணக்கில் எடுக்கும் வேளையில், அடிகளார் தொடுத்த வினாவுக்கான விடை தெளிவாகவே புலப்படுகின்றது. இருப்பினும் இவ்விடையை மேலும் உறுதிப்படுத்த இப்பாடலின் 3ஆம் 4ஆம் அடிகளும் உறுதுணை புரிகின்றன. அவையாவன:-

(3) - அந்தம் ஒன்று இல்லா ஆனந்தம் பெற்றேன்!

(4) - யாது நீ பெற்றது ஒன்று என்பால்?

ஆனந்தம்- (எல்லையற்ற, உலக இன்பம் அல்லாத) பேரின்பம், கடவுள்.
ஆனந்தன்- அருகன், சிவன், கடவுள்
ஆனந்தி - பார்வதி என்றும் விரிவான சொற்பொருள்கள் கிடைக்கின்றன.

எனவே, 3ஆம் அடியின் பிரகாரம், முடிவு என்பது எப்பொழுதுமே ஏற்படாத பேரின்பத்தைப் பெற்றுவிட்டேன், என்பதை அடிகளார் தெரிவிக்கின்றார். அதாவது, இடைநடுவே மறைந்துவிடும் "சந்தோசம்" போன்று இல்லாது, நீக்கமறவே அவருடன் இணைந்தே இருக்கும் பேறு என்பதையும் உறுதிசெய்து உள்ளார். இதன் உட்பொருளாக, அந்தம் ஒன்று இல்லா ஆனந்தம், ஆதியும் அந்தமும் இல்லாத சிவன் ஆகி, அடிகளாரோடு ஒன்றுபட்டுவிட்டதை வெளிப்படுத்தி உள்ளார். உண்மையில் "சிவமாதல்" அற்புதமாக நடந்தேறியுள்ளது. இவ்வாறு தாம் சிவமாகிக் கொண்டுள்ளதைத் தனது திருவாசகம்- அச்சோப் பதிகம் முதலாவது பாடலில் "சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனை ஆண்ட அத்தன்..." என்றவாறு மேன்மையாகவே உறுதிப்படுத்திவிட்டார். காந்தம் இரும்பை இழுத்து வைத்திருந்தால், அந்த இரும்பு பின்னர் காந்தமாகிவிடும். இது விஞ்ஞானம்! சிவனார், அடிகளாரை ஆட்கொண்டு தன்வசம் ஆக்கிக்கொண்டார். அடிகளார் சிவமாகிவிட்டார்! இது மெய்ஞ்ஞானம்!

*கருணை எங்கு இருக்கிறதோ, அங்கு கடவுளின் அமைதி இருக்கும்.*

மேலும், 4ம் அடிதனில், "யாது நீ பெற்றது ஒன்று என்பால்?" என்று அடிகளார் மீண்டும் ஒரு வினாவைத் தொடுக்கின்றார். இறைவா! ஏதாவது ஒன்றைத்தானும் என்னிடம் இருந்து நீ பெற்றுக்கொண்டாயா என்ற இந்த வினாவின் தோரணையிலேயே, எந்த ஒன்றையும் பெற்றுக்கொள்ளவே இல்லை என்ற பதிலும் அடங்கி நிற்பதை நாம் புரிந்துகொள்ளலாம்.

இருவரும் பரிமாறிக்கொண்ட பண்டங்களின் பெறுமானங்களின் அடிப்படையில் வெளிப்படையான பார்வையில், அடிகளாரின் பக்கம் கணக்கில் அடங்காது உயர்ந்துள்ளன! இறைவனார் பக்கம் ஒப்பீட்டளவில் பூச்சியமாகத் தாழ்ந்துள்ளது! ஆகவே, அடிகளார் சாமார்த்தியர் ஆகின்றார்! கூடவே, ஆச்சரியம்- அதிசயம் ஒன்றும் இதனூடே நிகழ்ந்துள்ளது! இவ்வினாவை எழுப்பிய இப்பாடலிலேயே அடிகளார், தாம் சிவமாகி கொண்டதையும் பிரகடனப்படுத்தி உள்ளார்! ஆகையினால், இதுவரை கிடைக்கப்பெற்றுள்ள சகல தரவுகளையும் நோக்கும் வேளையில் கணிதச் சமன்பாடுகள் மூன்று வந்து சேர்ந்துள்ளன.

1. அடிகளார் = சாமார்த்தியர் ((முடிவின்படிக்கு)

2. சிவனார் = அடிகளார் (சிவமாதல் நிருபிக்கப்பட்டது)

ஆகையினால் 3. சிவனார் = அடிகளார் = சாமார்த்தியர்.

ஆகவே, முன்னர் எடுத்த முடிவு இப்பொழுது மறுபரிசீலனை செய்யப்பட்டு, இருவருமே சாமார்த்தியர் ஆகின்றனர்.

சிவமாகி, இறைவனாரோடு இணைந்து சாமார்த்தியர் ஆகிக்கொண்ட அடிகளார், எம்மையும் தன்னுடன் இணைத்துச் சாமார்த்தியர் ஆக்குகின்றார்! சாத்தியமானது எப்படி என்பதை நோக்குவோம்.

முக்கியமாக, முதன் மந்திரிப் பதவியும், தென்னவன் பிரமராயன் என்ற உயர் விருதும் பெற்றவர் எவ்வாறு தன்னை மிகவும் கீழ்மட்டத்துக்குக் கொண்டு சென்றார்? நிச்சயமாக அவர் பயித்தியம் பிடித்தவரும் அல்லர். அவ்வாறாயின் ஒரு முரண்பாடு இங்கே தோன்றவில்லையா? இல்லவே இல்லை! இங்கேதான் ஒரு நுட்பம் ஒளிந்துள்ளது.

அடியவர்கள் நிறைந்து சூழ்ந்திருக்க, குருவடிவாய் அமர்ந்திருந்த இறைவனாரால் ஆட்கொள்ளப்பட்டார். சிவமாகிக் கொண்டார். பட்டம் பதவிகளை மறந்தார். அடியவர் ஆகிக்கொண்டார்! இதனையே, "அடியேன் உன் அடியார் நடுவுள் இருக்கும் அருளைப் புரியாய் பொன்னம்பலத்து எம் முடியா முதலே!" என்றவாறு உருக்கமாக வேண்டி, அதனையும் பெற்றுக்கொண்டார். அடியவர் ஆகிக்கொண்டதும், அடியவர்கள் யாவரும் நற்கதி அடையவேண்டும் என்று சித்தம் கொண்டார். ஆகையினால் அவர்களது வினைகள் அனைத்தையும் தன்மேல் சுமத்திக் கொண்டார். இவ்வினைகளில் இருந்து விடுபட்டுக் கடைத்தேற எளிதான உபாயத்தைக் கண்டுகொண்டார். அதுவே, ஆண்டவனை அழுது தொழுதால் வினைகள் அகன்று, விமோசனம் பெற்று உய்யலாம் என்பதாகும்! இவ்வுண்மையை, "யானே பொய்! என் நெஞ்சும் பொய்! என் அன்பும் பொய்! ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே!" என்றவாறு திருச்சதகம்,9. ஆனந்தபரவசம், 90ஆம் பாடலில் உறுதிப்படுத்திவிட்டார். இப்பாடலில் வரும் "வினையேன்" என்பதின்மூலம் பாவங்களைப் புரிந்தவர்களும், பெற்றதாயினும் மேலானவரும், எவரிடம் இருந்தும் கைம்மாறு எதனையும் எதிர்பார்க்காதவரும் ஆகிய இறைவனை, அடிகளார் காட்டியுள்ள உபாயத்தின் படிக்கு, வழிபாடு செய்து கடைத்தேறலாம் என்பது வெள்ளிடைமலை!!

*பொறாமையுடன் போட்டி இருக்கிற வரையில் யாருக்கும் மனநிறைவு உண்டாகாது.*

இரவல் வழிமுறைகளை விடுத்து, நாமாகவே நம் வழியில் இறைவனை நோக்கி, மணிவாசகத் துணையுடன் பயணிப்போம்! நாம் எம் இறைவனை நோக்கி ஒரு அடி முன் வைக்க, அவன் எம்மை நோக்கிப் பல காதம் பறந்து வருவான். பாதகக்கமலங்களைத் தந்தருளுவான்! "தானே வந்து, எம்மைத் தலையளித்து ஆட்கொண்டு அருளும்..." என்றவாறு "திருவெம்பாவை" பாடலாலும் இவ்வுண்மையை நிலைநிறுத்தி உள்ளார்!

நாமும் அடியவராவோம்!
சாமார்த்தியராக உயர்வோம்!
சங்கரா! நாம் எல்லோமும் சதுரர்!
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகம் எல்லாம்!!

## என்றும் நினைவில்...



யாழ்ப்பாணம் வடமராட்சி பொலிகண்டி கிராமத்தைச் சேர்ந்தவரும், மாத்தளையை வசிப்பிடமாகக் கொண்டவரும், பிரபல வர்த்தகருமான "சண்" என எல்லோராலும் அழைக்கப்பட்ட கிருஸ்ணபிள்ளை சண்முகராஜா அகால மரணமடைந்ததையிட்டு நாம் மிகவும் மனம் வருந்துகின்றோம்.

அமரரின் அறப்பணியுடன் கூடிய சேவையினை என்றும் எம்மால் மறக்கமுடியாது. குறிப்பாக கதிர்காமத்தில் இடம்பெறும் உற்சவ காலங்களில் தெய்வானை அம்மன் தேவஸ்தானத்தில் நடைபெறும் அன்னதானச் செயற்பாட்டிற்கு தன்னாலான பங்களிப்பை வழங்கி அடியார்களின் பசிப்பிணியைப் போக்குவதில் பெரும் பங்காற்றிய பெருந்தகை.

யாழ் மண்ணிலிருந்து மாத்தளையூடாக சுற்றுலா செல்லும் பாடசாலை மாணவர்களது தேவைகளை நிறைவேற்றுவதில் முன்னின்று உழைத்தவர். அமரரின் இழப்பானது அவரால் பயனடைந்த மக்கள் அனைவருக்கும் ஒரு பேரிழப்பாகவே கருதவேண்டி உள்ளது.

அன்னாரின் பிரிவால் துயருற்றிக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அவரின் ஆத்மா சாந்திபெற சந்நிதியானை வேண்டுதல் செய்கின்றோம்.

சுபம், சாந்தி.

-சந்நிதியான் ஆச்சிரமம்-

(தொடர் -08)

# சமய வாழ்வு

– திரு இரா. செல்வவடிவேல் அவர்கள் –

அன்றிலிருந்து இன்றுவரை துறவிகளுக்கு சமயிகளிடம் மிகுந்த மரியாதையும் மதிப்பும் இருந்து வந்திருக்கிறது. குடும்ப வாழ்க்கை முறையை நான்காகப் பிரித்தவர்கள்கூட பிரம்மச்சரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம் ஆகிய மூன்றுக்குப் பிறகு இல்லறத்தில் உள்ளவன் மேற்கொள்ள வேண்டிய நிலையாக சந்நியாசத்தைக் குறிப்பிட்டார்கள். ஒவ்வொரு மனிதனும் வாழ்க்கையின் கடைசிக் கட்டத்தில், வயோதிகப் பருவத்தில் துறவு வாழ்க்கை வாழவேண்டுமென சமயம் வற்புறுத்துகிறது.

இந்த நிலைகளுக்கு உட்படாமல் ஆரம்பத்திலிருந்தே பந்த பாசங்களுக்குக் கட்டுப் படாமல், உலகியலிலிருந்து ஒதுங்கி வாழ்ந்தவர்கள் துறவிகள் என்று அழைக்கப்பட்டார்கள். தனது வாழ்க்கைத் தேவைகளை மிகவும் குறைந்ததாக ஆக்கிக் கொள்ளுகிறவனுக்கு என்றும் விசேடமான மதிப்பு உண்டு. காஞ்சிப் பெரியவர், மகாத்மா காந்தி போன்றவர்கள் தேவைகளைக் குறைத்துக் கொண்டவர்கள். இவ்வாறு பற்றுக்களைக் குறைத்துக் கொண்ட வனை சமூகம் வணக்கத்துக்குரியவனாகப் போற்றியது.

வாழ்க்கை எளிமையாகி விடுகிறபோது, தேவைகள் குறைந்து போகின்றன. தேவைகள் குறையும்போது ஆசைகள் கட்டுப்பாட்டுக்குள் வந்து விடுகின்றன. ஆசைகள் கட்டுப்பாட்டுக்குள் வரும்போது திருடுவது, பொய் சொல்லுவது, ஏமாற்றுவது போன்ற குணங்கள் தோன்ற வழி இல்லை.

எளிய வாழ்க்கை என்பது துறவின் முதற்கட்டம். பற்றுக்களைக் குறைத்துக்கொண்டே வரும்போது, ஒரு கட்டத்தில் பற்றற்ற நிலை சாத்தியமாகிவிடும்.

"ஆசையே துன்பங்களுக்கெல்லாம் காரணம்" எனச் சொன்னார் புத்தர். ஆடம்பர வாழ்க்கையில் மோகம் ஏற்படுகின்றபோது மனம் அங்காடி நாய்போல அலைகிறது. இது வேண்டும், அது வேண்டும் என்று தவியாய்த் தவிக்கிறது.

சமுதாயத்தில் இன்றைக்கு லஞ்சம் பெருகிவிட்டதாகச் சொல்லுகிறோம். ஊழல் மலிந்துவிட்டதாகச் சொல்லுகிறோம். இதற்கெல்லாம் என்ன காரணம் என்று நாம் எப்போதாவது சிந்தித்ததுண்டா?

நடுத்தரக் குடும்பத்தில் வருமானம் செலவை ஈடுசெய்வதாக இல்லை. ஆனால் ஆடம்பர வாழ்க்கை வாழவேண்டும் என்று அலைபவர்கள் அவர்கள்தான். பக்கத்து வீட்டைப் பார்த்து "அதை" வாங்கவேண்டும் என்று ஆரம்பித்து "லீசிங்" கம்பனிகளுக்குள் காலை வைப்பவர்களின் நிலையை இன்று நமது பிரதேசம் நன்கு அறியும். அதிகரித்த செலவு அலுவலகத்தில் லஞ் சம் உட்புகுவதற்கு காரணமாகிவிட்டது. இது ஒரு எடுத்துக்காட்டுத்தான். சிறிய நிலையிலிருந்து பெரிய நிலைவரை இது பொருந்தும். பற்று அதிகமாகும்போது குற்றங்களும் உற்பத்தியாகின்றன.

போதுமென்ற மனம் மனிதனுக்கு வருவதில்லை. ஒன்றைப் பெற்றவுடன் இன்னொன் றுக்கு ஆசைப்படுகிறது. அதுகூடத் தவறில்லை. ஆனால் தனது சக்தியைமீறி ஆசைகளை

*உனக்கு மனமொன்றிய இறைவன் திருநாமத்தைத் தேர்ந்துகொள்.*

வளர்த்துக்கொள்ளும்போது, உழைப்பும் முயற்சியும் பின்னுக்குத் தள்ளப்பட்டு விடுகின்றன. குறுக்கு வழிகளைப்பற்றி மனம் சிந்திக்கத் தொடங்குகிறது. ஒழுக்க நியதிகள் காற்றிலே பறக்கின்றன. அதனால்த்தான் தேவைகளைக் குறைத்துக் கொண்டவர்கள் மகாத்மாக்களாக வும் மகான்களாகவும் போற்றப்பட்டார்கள். இவற்றைச் சிந்தித்தவர்களால் "முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்படக் கூடாது" என்ற முதுமொழி உருவாக்கப்பட்டது.

தேவை எது என்பதை வரையறுத்துக்கொள்ளுவதுதான் ஆரம்பம். அதனைச் செய்யத் தவறினால் தனிமனித ஒழுக்கம் கெட்டுப்போகும் விளைவாக சமூக ஒழுக்கமும் கெட்டுப்போகும். எலியைப் பிடிக்க சாமியார் பூனை வளர்த்த கதையாக ஆகிவிடக் கூடாது. அவர் சாமியார், துறவி. பர்ணசாலையில் எலித்தொல்லை அதிகமாக இருந்தது. எலியின் தொந்தரவிலிருந்து விடுபட பூனை வளர்க்க ஆரம்பித்தார். பூனைக்குப் பால் கொடுக்கப் பசுமாடு தேவைப்பட்டது. பசுமாடு வாங்கிய பின்னர் அதைப் பார்த்துக்கொள்ள ஆள் தேவைப்பட்டது. பின்னர் மாடு மேய மேய்ச்சல் நிலம் தேவைப்பட்டது. இத்தனையும் சரியாக நடக்கிறதா என மேற்பார்வை யிட குடும்பத்தில் ஒருத்தி தேவை என்கிற நிலை ஏற்பட்டது. சந்நியாசி சம்சாரி ஆகிவிட்டார். பல நித்தியானந்தர்கள் உருவாவற்கு இதுவே காரணமாகும். பின்னர் தேவைக்கு முடிவு ஏது? மனைவியின் ஆசைகள், குழந்தைகளின் ஆசைகள்.....

வாழ்க்கைத் தேவை பெருகும்போது சிக்கல்கள் தோன்றுகின்றன. சுயநலம் முதலிடம் பெற்று விடுகிறது. பிறர்நலன் பின்னுக்குத் தள்ளப்பட்டு விடுகிறது.

எனவேதான் வேறு எவருக்கும் இல்லாத மரியாதையினை சைவ சமயத்தவர் துறவி களுக்குக் கொடுத்தார்கள். துறவிகள் பற்றற்றவர்கள், தங்களுக்கென வாழாதவர்கள், தங்களுடைய உடைமை என்று எதையும் வைத்துக்கொள்ளாதவர்கள். ஆதலால் இவர்களால் ஒழுக்கத்துடன் வாழ முடிந்தது. இவர்கள் ஒழுக்கத்தோடு வாழ்ந்ததோடு மட்டுமன்றி, மற்றவர் களுக்கு ஒழுக்கத்தைப் போதிக்கின்ற தகுதி பெற்றவர்களாகவும் விளங்கினார்கள். இவர்கள் கூறிய விடயங்களை மற்றயவர்கள் கவனத்துடனும் மரியாதையுடனும் கேட்டார்கள். சமூக ஒழுக்கத்தைப் பாதுகாக்கின்ற வேலியாக சமயத் துறவிகள் விளங்கினார்கள்.

இவர்கள் தங்களுக்கென்று எதையும் வைத்துக்கொள்ளவில்லை. ஆதலால் இவர் களின் குறைந்தபட்சத் தேவைகளை நிறைவேற்றுகின்ற பொறுப்பினை, இல்லறநெறியில் வாழ்பவர்களிடம் சமயம் ஒப்படைத்தது.

துறவிகளுக்கு இருக்கவேண்டிய முக்கிய குணமாக "அருளுடைமை" சொல்லப் பட்டது. இதை வள்ளுவர் மிக அழகாகச் சொல்லுகிறார்.

"அருட் செல்வம் செல்வத்துள் செல்வம் பொருட் செல்வம்
பூரியார் கண்ணும் உள"

செல்வங்களிலெல்லாம் மிகச் சிறந்த செல்வம் அருளாகிய செல்வமேயாகும். பொருட்செல்வம் இழிந்தவர்களிடத்திலும்கூட உண்டு என்கிறார் வள்ளுவர். இது அழகாகச் சிந்தித்து உணரவேண்டிய விடயமாகும். உலக மகா அயோக்கியர்கள் கோடீஸ்வரர்களாகவும் இருக்கலாம். பல கோடீஸ்வரர்கள் அப்படித்தான் இருக்கிறார்கள். ஒருவனிடம் செல்வம் குவிந்திருக்கிறது என்பதற்காக அவனை உயர்ந்தவனாக எண்ண வேண்டியதில்லை. ஆனால் ஒருவன் ஏழையாக இருந்தாலும் அருளுடைமை கொண்டவனாக இருப்பானே ஆயின் அவனே மிகச் சிறந்த செல்வத்தைப் பெற்றவனாகிறான். அனைவரின் மரியாதைக்கு உரியவனும் அவனே.

*உன் ஆகாரமே உனது மருந்தாக இருக்கவேண்டும்.*

துறவற இயலில் வள்ளுவர் எழுதியுள்ள முதல் குறள்தான் மேலே இருப்பது. அருளுடைமை எப்போது தோன்றும்? உள்ளத்தில் அன்பு இருந்தால் தோன்றும். உயிர்களிடத்து இரக்கம் இருந்தால் தோன்றும். தன்னலத்தை ஒதுக்கி வைத்துவிட்டு பிறர்நலத்தை நாடும்போது தோன்றும். சமுதாயத்தை ஒழுங்குபடுத்துவதில் துறவிகளுக்குள்ளிருந்த பாத்திரத்தினை சைவசமயம் பெரிதாக மதித்ததற்கு இதுவே காரணம்.

ஒரு சந்நியாசியின் சமுதாயப் பாத்திரம் என்ன என்பதை இராமகிருஷ்ண பரமஹம்சர் பின்வருமாறு கூறுகிறார். "சந்நியாசி ஒருவனுடைய தூய வாழ்க்கையைப் பார்த்து இல்வாழ்பவர்கள் சிறிது சிறிதாக பற்றற்ற வாழ்வில் பிரவேசிக்கின்றனர். சந்நியாசி ஒருவனுடைய நெறியான வாழ்க்கை அவர்களுக்கு எடுத்துக்காட்டாக அமையாவிடின் உலகப் பற்றுதல்களில் அவர்கள் இன்னும் அதிகமாக மூழ்கிவிடுவார்கள்". துறவறத்தில் இருக்கின்றவர்களுக்கு இல்லறத்தான் உதவுவதுபோலவே, துறவறத்தில் இருக்கின்றவர்கள் இல்லறத்தில் இருக்கின்றவர்களுக்கு வழிகாட்டி உதவுகிறார்கள். இது சைவசமயம் உருவாக்கிய அருமையான சமூக ஏற்பாடாகும்.

துறவு என்பது காசாயம் உடுத்தி, உருத்திராட்சம் அணிந்து, கமண்டலம் ஏந்துவதை மட்டும் குறிக்காது. உள்ளத் தூய்மைதான் துறவறத்தின் ஆரம்பம். மனதை அழுக்காக வைத்துக்கொண்டு புறத் தோற்றங்களில் மாற்றங்களைச் செய்வது துறவு நிலை ஆகாது. இதை வள்ளுவர் வெகு அருமையாக எடுத்துச் சொல்லுகிறார்.

"மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழித்து விடின்"

தலையை மொட்டை அடித்துக்கொள்வதும், ஜடாமுடி வளர்த்துக் கொள்ளுவதும் தேவை இல்லை. தவநிலையில் இருப்பவர்கள் உலகம் பழிக்கும் தீய ஒழுக்கத்தை விட்டுவிட்டால் அதுவே போதும் என்பது மேலே உள்ள குறளின் கருத்தாகும்.

துறவிகளின் எளிமையான வாழ்க்கை, தோற்றத்தில் சில மாற்றங்களைச் செய்து கொள்ளச் செய்தது. ஒருவரைப் பார்த்தவுடன் இவர் துறவு வாழ்க்கை மேற்கொண்டவர் என்கிற எண்ணத்தை ஏற்படுத்தியது. இது தவறில்லையாயினும், காலப்போக்கில் போலித் துறவிகள் சைவ சமயத்தில் தாராளமாகவே உருவாகிவிட்டார்கள். நம்பிக்கை மோசடி செய்வதற்கு துறவு வேடம்- சந்நியாசித் தோற்றம் பயன் உடையதாக இருக்கும் என்கிற எண்ணம் சிலரிடையே ஏற்பட்டும் விட்டது. இந்தப் போலிவேடம் இராமாயண காலத்திலேயே இருந்திருக்கிறது. சீதையைத் திருட்டுத்தனமாக தூக்கிச்செல்ல வந்த இராவணனுக்கு சந்நியாசி வேடம்தான் பொருந்தியது. மகாலட்சுமியின் அவதாரமான சீதாப்பிராட்டியே போலிச் சந்நியாசியைக் கண்டு ஏமாந்திருக்கிறாள். ஆகவே இந்தக் காலத்தில் வேடதாரிகள் மலிந்து போனதில் ஆச்சரியப்படுவதற்கு ஏதும் இல்லை. இராமாயண காலமாக இருந்தாலும் சரி, நாயன்மார்கள் காலமாக இருந்தாலும் சரி தவவேடம் போட்டு மோசடி செய்த சம்பவங்களை புராண இதிகாசங்களில் காணமுடிகிறது. சந்நியாசி ஒருவன் உலக சம்பத்துக்களையெல்லாம் முற்றாகத் துறந்தவனாக இருக்க வேண்டும். அவன் முற்றும் துறந்தவனாக இருக்கும்பொழுதுதான் தனக்கும் நலம் தேடிக் கொள்கிறான்; உலகுக்கும் நலம் நல்குகிறான். முற்றும் துறந்த துறவி ஒருவனைப் பார்க்கும்போது நமக்கும் சிறிதளவாவது உலகப் பற்றை ஒழித்துவிட வேண்டும் என்ற எண்ணம் வருகிறதல்லவா! (தொடரும்...

*அதிஷ்டமில்லாத காலத்தில் உன் கைத்தடிகூடப் பாம்பாகிவிடும்.*

# பெரியபுராணப் பெருமை

– திரு அ. சுப்பிரமணியம் அவர்கள் –

தமிழகத்திலே பன்னிரண்டாம் நூற்றாண்டின்போது சோழப்பேரரசை இரண்டாம் குலோத்துங்க மன்னன் ஆண்டு வந்தான். அக்காலம் சைவசமயமும் சிவநெறியும் வளர்ச்சியுற்றிருந்தன. அருள்மொழிவர்மர் எனும் பிள்ளைத் திருநாமம் பூண்ட சேக்கிழார் அடிகளை சோழ மன்னன் "உத்தம சோழப் பல்லவராயன்" எனும் உயரிய விருது வழங்கிச் சிறப்புச் செய்து தமது முதன் மந்திரியாக அமர்த்திக்கொண்டார்.

இவர் தொண்டை மண்டலத்தில் விவசாய குடும்பமாகிய சேக்கிழார் குடியில் பிறந்தமையால் சேக்கிழார் எனப்பட்டார். இவர் சிறந்த சைவாகம பண்டிதர். சிவநெறிக் காவலர். 63 சிவனருட் செல்வராய நாயன்மார்களின் வரலாறுகளை ஐயம் திரிபறக் கற்று, அதனால் சைவசமயமே தொன்மையானதெனவும் உண்மையெனவும் இதனாலேயே தாயுமான சுவாமிகள் சைவ சமயமே சமயம் "சமயாதீனப் பழம்பொருள்" என்றார். அத்தோடு மற்றவை பொய்யான சமயநெறி என்றார்.

இந்நிலையில் மனுநீதிசோழன் வழிவந்த குலோத்துங்கசோழன் ஐம்பெரும் காப்பியங்களாய சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி, மணிமேகலை, சிலப்பதிகாரம் ஆகியவற்றுள் ஒன்றான பொய்யான நெறி கூறும் சீவகசிந்தாமணியை உச்சிமேல் வைத்துப் போற்றுவதுகண்டு "உளம் வருந்திய அமைச்சராகிய சேக்கிழார் மன்னவனையணுகி முத்தி தரும் கைலைநாதன் பாதாரவிந்தமடைவதற்கு உண்மையான சைவநெறியிருப்பப் பொய்யான சமயநெறி கூறும் நூல்களைக் கற்பதேன்? என வினவினார்.

இதுகேட்ட வேந்தன் "உய்யும்படியான நெறியுடைய ஆன்மீக மணம் கமழும் சைவ நூல் ஒன்று பாடியருள்க. படித்து உண்மை கண்டு ஏற்றுக்கொள்வேன்" என்றனன். இதுகேட்டு மகிழ்ச்சியடைந்த சேக்கிழார் பெருமான் தில்லைக்குச் சென்று சிவபெருமானைப் பணிந்து வேண்ட அவர் "உலகெலாம் உணர்ந்து ஓதற் கரியவன்" என்று அடி எடுத்துக் கொடுப்ப அதனையே முதலாகவும் முடிவாகவும் வைத்துப் பதிகம் ஒன்று பாடினார். பெருமைமிக்கதால் அஃது பெரியபுராணம் ஆகியது. பெரியபுராணத்தின் பெருமைபற்றி ஆராய்தலே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பெரியபுராணத்தின் மூலவேராக சமயகுரவர் நால்வருள் ஒருவராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடியருளிய திருத்தொண்டத்தொகை உள்ளது. இதனால் பெரியபுராணத்துக்குத் திருத்தொண்டர் புராணம் என்றும் பெயர் உண்டு.

சேக்கிழார் பெருமான் 63 நாயன்மார்களின் வரலாறுகளையும் சிவனருட் செயல்களையும் தாம் கற்று உணர்ந்தபடி தேனினுமினிய செந்தமிழ்ப் பதிகங்களால் பக்திச் சுவை நிரம்பிய பதிகங்களால் மலர்ந்தது பெரியபுராணம். இது குலோத்துங்க சோழ மகாராசாவைச் சைவசமயியாக்கி சிவநெறிக்குட்படுத்திய பெருமையே பெரியபுராணம்.

இறைவனால் "உலகெலாம்" என முதலடியெடுத்துக் கொடுத்த பெருமைக்குரியது பெரியபுராணம். சைவசமயமும் பைந்தமிழும் வளர்ச்சியடைய வளவர்கோன் பாவையாய

*கடவுளின் திருநாமம் புலன்களைவிடச் சக்தி வாய்ந்தது.*

மங்கையர்க்கரசி புனிதவதியாராகிய காரைக்கால் அம்மையார் போன்ற மங்கையர்மூலம் பெருமைபெற்றது பெரியபுராணம்.

சைவசமயமும் தமிழும் வளர அருந்தொண்டாற்றிய பெருமை நாயன்மாருக்குண்டு. இதனை விளக்கியுரைப்பது பெரியபுராணம். இது சிவசிந்தனையை வளர்க்க சைவசமய நெறியினைப் பேணவும் வழி செய்தது. அதுவே பெரியபுராணத்தின் பெருமை. சேக்கிழார் பெருமானது அறிவுக் கருவூலமே பெரியபுராணத்தின் பெருமையாகும்.

சேக்கிழார் பெருமான் தில்லையிலே நடராசப் பெருமான் 'உலகெலாம்'' எனத் தொடக்கம் கொடுக்க "அவனருளாலே அவன்தாள் வணங்கித் தில்லை மூவாயிரவரைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் "தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்'' என்று மூல வேராக அடி எடுத்துக்கொடுத்தார் என்றால் அதனடியாகப் பிறந்த பெரியபுராணத்தின் பெருமை பேசும்திறன் பெரிதாகும்.

சைவசமய உண்மைகளை எடுத்துக்காட்டிய பெருமை பெரியபுராணத்திற்கு மாத் திரமே உண்டு. சோழ வேந்தனைச் சைவசமயத்திற்கு மாற்றிச் சிவானந்தப் பெருவாழ்வு வாழ வழி அமைத்துத் தந்த பெருமைக்கு உரியது பெரியபுராணமாகும்.

சேக்கிழார் பெருமானும் சோழவேந்தனும் இணைந்து கோவில் திருப்பணிகள் செய்து வரலாயினர். இவற்றால் மகிழ்ந்த இறைவன் "இவர்கள் எனது அன்புக்குரிய தோழர்'' எனக் கூறியதாகத் திருவாரூரில் உள்ள கல்வெட்டொன்று கூறுகிறது. இருவருமாய்ப் பணி ஆற்றிய கோவில்களில் ஒன்று அருள்மிகு பூங்குழலி சமேதராய கைலைநாதர் தேவஸ்தானம் ஆகும்.

இந்து சமயம் பதினெண் புராணத்தைக் கொண்டவை. இவற்றுள் பத்து சிவபுராணங் களாகும். இவற்றுள் பன்னிரண்டாவது திருமுறையான பெரியபுராணம் சிவனருட் செல்வர்களின் சிவனருட்டிறன் பேசுதலினாலும்'' சைவசமயத்தின் மேன்மையும் செந்தமிழின் சிறப்பும் உணர்த்துவதாலும் பெரியபுராணத்தின் பெருமை வெளியாகிறது. இது பெரியபுராணத்தின் பெருமை ஆகும்.

சேக்கிழாரடிகள் சைவ நாயன்மார் 63பேரினதும் வரலாறுகளை பக்திச்சுவை ததும்ப இனிய பதிகங்களாக்கி நாயன்மார்களின் பெருமை பேசுவதால் பெருமை பெற்றது பெரிய புராணம். 63 நாயன்மார்களின் வரலாற்றுள் ஏறக்குறைய மூன்றில் ஒரு பங்களவான திருஞான சம்பந்த சுவாமிகளது பதிகம் பாடவந்த சேக்கிழார் பெருமான்

"வேதநெறி தழைத்தோங்க மிகு சைவத்துறை விளங்க
பூதபரம்பரை பொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவயற் புகலித் திருஞான சம்பந்தன்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்'' என்கிறார்.

காரைக்காலம்மையாரது பிள்ளைத் திருநாமம் புனிதவதி என்பதாகும். பெயருக்கேற்ற புனிதை. சிவநெறி தவறாதவர். சிவனடியார்களையும் சமயத்தொண்டர்களையும் உபசரித்து உணவளித்து மகிழ்பவர். ஒருநாள் சிவனடியார் அவரது இல்லத்தை நாடி வந்தார். அவரை நன்கு உபசரித்து உணவளிக்க எதுவுமின்மையால் கணவன் அனுப்பி வைத்துள்ள இரு மாம்பழங்களில் ஒன்றைக் கொடுத்து ஆசீர்வாதம் பெற்றார். மதியம் நாயகன் உணவுண்ண வந்து சாப்பிட்ட பின்பு தான் அனுப்பி வைத்த மாங்கனியைக் கேட்டான். நங்கை ஒரு

பழத்தை அரிந்து கொடுத்தார். அஃது தேவாமிர்தமாக இனித்தது. இது கண்ட வணிக நாயகன் மற்றொரு மாங்கனியையும் கேட்டான். உள்ளே சென்ற புனிதை சிவனை வேண்டுதல் செய்து பெற்ற கனியை நாயகனிடம் தந்தார். அதனையுண்ட கணவன் அது மேலும் சுவை கூடியிருப்ப ஐயமுற்று வினவி விபரமறிந்து சிவனிடம் பழம் பெற்ற உண்மைகண்டு தெய்வமாகத் தொழுது விட்டகன்று வேற்றூர் போய் இன்னொரு பெண்ணை வதுவை பூண்டு அவர்மூலம் பிறந்த பெண்ணுக்கு புனிதவதி என்று பெயரிட்டு வாழ்ந்து வந்தார். இவ்வகை வரலாறுகளையும் மேல் நடந்தவற்றையும் பக்திப் பரவசமாகப் பாடிவைத்தமையுமே பெரிய புராணத்தின் பெருமையாகும்.

சைவசமய வளர்ச்சிக்கு அருந்தொண்டு புரிந்துள்ள "வளவர்கோன் பாவையாகிய மங்கையர்க்கரசியார் பற்றிச் சேக்கிழார் சுவாமிகள் கூறும் "மங்கையர்க்குத் தனியரசி" பெண்களின் பெருமை பேசும் பெரியபுராணத்தின் பெருமை எனலாம்.

அறுபத்துமூன்று நாயன்மார்களது வரலாறுகளைப் பாடியுள்ள சேக்கிழாரடிகள் திரு ஞானசம்பந்தப் பெருமானது சரிதைக்கு ஏறக்குறைய மூன்றிலொரு பகுதி இடமொதுக்கியுள் ளார்கள். இஃது பெரியபுராணத்தின் பெருமைக்குச் சான்று கடலில் கட்டிவிடப்பட்ட பாறாங்கல் "சொற்றுணை வேதியன்" என்ற நமசிவாயப் பதிகத்தால் தெப்பமாக மாறிச் சமண மன்னனை யும் சமணரையும் சைவராக்கிய பெருமை பெரியபுராணத்துக்கு மட்டுமேயுண்டு.

திருத்தொண்டத் தொகையை அடிப்படையாக வைத்து நாயன்மார்களின் வரலாற் றினைச் செந்தமிழ்ப் பாமாலையாக்கிச் சூட்டிய பெருமை சேக்கிழார் சுவாமிகளுக்கு உண்டு. இதுவே பெரியபுராணத்தின் பெருமையாகும்.

பெரியபுராணம் 63 நாயன்மார்களின் வரலாற்றுப் பொக்கிஷம். சைவத் தமிழருக்குக் கிடைத்த நவநிதியம். அதனைப் பேணிப் பாதுகாத்தலும் படித்து இன்புறுதலும் இளைஞர் யுவதிகளின் கடமையாகும். இது நாம் நல்நெறியில் வாழ்வுபெற சேக்கிழார் சுவாமிகட்கு நாம் செய்யும் அஞ்சலியாகும்.

"சேக்கிழார் நாமம் வாழ்க"
பெரியபுராணப் பெருமை ஓங்குக"
"என்றும் இன்பம் சூழ்க"

**வினைகள் போக்கி வாழ வைத்திடு**
**வீரத் தமிழன் ஆக ஆக்கிடு**

நினைத்ததை அவனே முடித்து வைப்பான்
நினைத்த உடனே வந்து நிற்பான்
அனைத்தும் அவனின் திருவிளை யாட்டே
அவனல் லாது அணுவும் அசையா
தினைப்புன வள்ளியைத் திகைக்க வைத்து
செவ்வேள் கையில் ஏந்திய வேலா
வினைகள் போக்கி வாழ வைத்திடு
வீரத் தமிழன் ஆக ஆக்கிடு.

-வ. யோகானந்தசிவம்-

கடவுளின் சட்டம் ஒருவருக்கும் தீங்கு செய்யாது.

[தொடர்ச்சி...

# கண்டோம் கதிர்காமம்

– திரு அன்னைதாசன் அவர்கள் –

ஆம்! அக்கல்விப் பணிகளுக்குப் பொறுப்பாக இருந்தவரிடமிருந்து பெறப்பட்ட தகவல்களின்படி முழுக்க முழுக்க வறுமைக்கோட்டின்கீழ் உள்ள பிள்ளைகளாகவும், நகர்ப்புறம் சென்று தனியார் கல்வி நிறுவனங்களில் மேலதிக கல்வியைப் பெறமுடியாதவர் களாகவும் பல பிள்ளைகள் பெற்றோரில் ஒருவரை இழந்தவர்களாகவும் இருப்பதையும் இந்நிலையம் அவர்களது கல்விப் பசிக்கு உகந்த தீனிபோடும் அவசிய தேவையுடையதாக இருப்பதையும் உணரமுடிந்தது.

தொடர்ந்து முதியோர் இல்லத்தை நாடியபொழுது இன்முகத்துடன் பேராசிரியர் குணசிங்கம் எங்களை ஆவலுடன் வரவேற்றார். எங்கள் ஆச்சிரம சுவாமிகள் ஏற்கனவே இவர்களை நன்கு அறிந்தவராகவும் தொடர்புடையவராகவும் இருப்பதையும் அறிய முடிந்தது. இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியராக இருந்ததுடன், லண்டன், அவுஸ் திரேலியா ஆகிய நாடுகளில் பேராசிரியராகச் சேவை செய்தும் தமது ஏழு நூல்களை 19 நாடுகளில் வெளியிட்டதனூடாகப் பெற்ற பலகோடி ரூபாக்களை தமது தாய் தந்தையர் பெயரில் இந்நிலையத்தினூடாக முதலிட்டு ஏழைகளுக்கு கல்விப் பணியுடன் முதியோர் பராமரிப்பிலும் ஈடுபடுவதை அறிய முடிந்தது. தொடர்ந்து இப்பயணத்தில் பண்டாரவன்னியன் மகா வித்தியாலய ஆசிரியர் ஒருவரின் தனிமனித முயற்சியினால் கல்வி கற்றுக்கொண்டிருக் கிற ஓர் நிறுவனத்தைச் சந்தித்ததுடன் சுவாமிகள் கொண்டு வந்த கற்றல் உபகரணத் தொகுதிகளையும் இவர்களுக்கு வழங்கிய நிறைவுடன் இப்பயணம் இனிதே நிறைவுற்றது.



சுறுசுறுப்பான தேனீக்கு வருத்தப்பட நேரமில்லை.

அன்பான வாசகர்களே! கதிரமலையானைத் தரிசிக்கப் புறப்பட்ட அடியேனுக்கு அப்பயணத்தைத் தொடர்ந்து அவன் தன் அடியவர்களுடன் கூட அனுபவித்த, சந்நிதியானின் சேவைகளைப் பெற்றுக்கொண்ட ஒரு பகுதியினரையும் அவர்களூடாக அவர்களின் அனுபவங்களுடனான இக்காலத்தின் பதிவுகளையும் இக் "கண்டோம் கதிர்காமம்" தாங்கி வருவதைப் பலர் வாசித்து ஊக்கமளித்த காரணத்தினால் இத்துணை வளர்ந்து இப்போ நிறைவுக்கு வருகிறது. இதனை எப்பவோ முடிக்க ஆசைப்பட்டேன். அதேவேளை இந்தப் பகுதியை எழுத அன்னையின் பேரருளும் அழகனின் திருவருளும் என்னை உயிருடன் வைத்திருக்கும் சமகாலத் திருவருளையும் சான்றாக்குகின்றேன். எமது ஆச்சிரம சுவாமிகள் இதனை நன்கறிவர். தலையோடு வந்த விபத்து தலைப்பாகையுடன் போகும்படி செய்தது திருவருளே. அத்திருவருளை வியந்துபோற்றி கதிரமலை ஏறி அக்காட்சிகளின் நிறைவோடு அதன் தொடர்ச்சியாக அனைவரும் திருக்கேதீஸ்வரத்தானைத் தரிசிக்க ஆயத்தமானோம். அன்றிரவு 9.00 மணிக்குப் புறப்பட்ட நாம் அதிகாலை 3.05க்கு திருக்கேதீச்சரத்தைச் சென்றடைந்தோம். அங்கே பாலாவியில் நீராடி அத்தேவார முதலிகளால் அன்று போற்றப்பட்ட ஐயனை வணங்கி காலைப் பூசைகளிலும் பங்குபற்றி வழிபட்டோம். ஆதிலிங்கத்தில் ஏதோ மறு ஏற்பட்டுவிட்டது என்று அப்பிரமாண்ட லிங்கத்தை பரிவார மூர்த்திகளுடன் வைத்திருந்தனர். கோபூசை மிக அற்புதமாக இருந்தது. திருக்கேதீஸ்வரத்திற்கும் இதுவே எனது முதற் பயணமும் ஆகும். தேவாரத்தில் வர்ணிக்கப்பட்ட பாலாவியின் நிலையும், இப்போ அங்குள்ள சூழலின் நிலையும் பார்த்த எனக்கு உண்மையில் நெஞ்சு நெருடியது. எவ்வளவு அழகுச் சோலையில், அழகுத் தீர்த்தத்தில் திளைத்த அவனின் நிலை இப்போ மெல்ல மெல்ல மீண்டுகொண்டிருப்பதை அறியமுடிந்தது. அந்த நெஞ்சை நெருடும் நினைவுகளைச் சுமந்தபடி எமது கதிர்காமப் பயணம் நிறைவுற்றது.

ஆக மொத்தத்தில் இக் "கண்டோம் கதிர்காமம்" திருவருளோடு குருவருள் பொழியும் சந்நிதியானின் இக்கால திருவருட் சிறப்புக்களை வருங்கால மக்களுக்குப் புகழ வைக்கின்ற ஓர் ஆவணமாக அமைந்துள்ளதை பல அன்பர்களும் எம்மிடம் குறிப்பிட்டார்கள். அந் நேர்ச்சிந்தனையாளர்கள் அனைவர்க்கும் அழகனின் அருள் நீடிக்கப் பிரார்த்தித்து இக்கண்டோம் கதிர்காமக் காட்சிகளை நிறைவு செய்கின்றேன்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"
"அன்றோடு அருளைப் பொன்றவிடாது
எம்மோடு இருக்கிறான் எந்தை முருகன்"

(நிறைவுற்றது)

## நிலை நின்று எமைக் காப்பது கந்தன் கைவேலே

எத்தனை எத்தனை இடர்வந்து சேர்ந்திடினும்
அத்தனையும் வேல் விலக்கி எமைக் காக்கும்
நித்தமும் நினைப் போர்க்கு நிம்மதி கொடுக்குமே
அத்தனை சக்தி கந்தன் கை வேலுக்கிருக்குதே
சத்தியம் இது உண்மை சந்தேகம் இல்லையப்பா
முத்திக்கும் வழிகாட்டும் முழுவதும் அது செல்லும்
வித்தகன் முருகன் கையேந்திடும் வேல் அது
விதியையும் மாற்றிடும் செல்வச்சந்நிதி வேலிதுவே.

-சின்னப்பு தவபாலசிங்கம்-

*பெண் விடுதலை ஆத்ம ஞானத்தை ஆதாரமாகக் கொண்டது.*

# சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்

– திரு பு. கதிரித்தம்பி அவர்கள் –

சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம் உடையவர்கள் சிவனடியார்கள். அவர்கள் எந்நேரமும் சிவனடியை மனதிலிருத்தி பஞ்சாக்கிரகத்தை ஓதிக்கொண்டிருப்பார்கள். உலகப் பற்றைக் களைந்து அவனடியில் மனதை இருத்தி, இறை பணியில் ஈடுபட்டுக் கொண்டிருப்பார்கள். "எம்மையும் உலகத்தையும் படைத்தவன் நீ, எம்மைக் காப்பவன் நீ, எமக்கு அருளுபவனும் நீ, கூறும் நாவே முதலாகக் கூறும் காரணம்நீ, நீயன்றி அணுவும் அசையாப்பரம்பொருள், எமக்கு அடைக்கலம் நீ, உன்னையன்றி யாரையும் நம்பிலோம், எமக்கு மானிடப் பிறப்பைத் தந்து, உனது திருவடியை வணங்க வைத்தாய். இனிப் பிறவாது உன்னடியில் இருக்க வரம் தா என்று சிவஞானம் பெற்ற சிவனடியான் வேண்டுவான்.

இறைவனால் படைக்கப்பட்ட பூவுலகில், சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவ ஞானம் பெற்ற நாயன்மார்களும், சந்தான குரவர்களும், யோகிகளும், சித்தர்களும் பல அற்புதங்கள் புரிந்து இறைவனடி சேர்ந்துவிட்டார்கள். இந்த வரிசைகளில் மாணிக்கவாசக சுவாமிகள் அரிமர்த்தன பாண்டியனுக்கு மந்திரியாக இருந்து கடமையை ஓடும் புளியம்பழம் போல் பற்றற்ற நிலையில் செய்து வந்தார். அவர் அரசன் கட்டளைப்படி கலிங்க நாட்டிற்கு குதிரைகள் வாங்க பணத்துடன் தூதுவர்களுடன் புறப்பட்டுச் சென்றார். இவரை ஆட்கொள்ள சிவபெருமான் குருவேடந்தாங்கி, சிவகணங்களுக்கு சிவஞானபோதம் என்னும் பாடத்தைப் போதித்துக்கொண்டிருந்தார். திருப்பெருந்துறையை அடைந்த மாணிக்கவாசகருக்கு, குரு உபதேசம் காதில் பட்டது. உபதேசத்தைக் கேட்கவேண்டுமென்ற ஆவல் ஏற்பட்டது. விரைந்து சென்ற மாணிக்கவாசகர் குருவைப் பார்த்து, ஐயா சிவம் என்றால் என்ன? ஞானம் என்றால் என்ன? போதம் என்றால் என்ன? இதன் பொருளை விளக்குவீரானால் ஆலால விருட்சத்தில் இருந்து அருள்புரிந்த குரு நீங்களே ஆவர் என்றார். குரு சிவஞானபோதத்தின் பொருளை விளக்கினார். மாணிக்கவாசகர் தன்னை மறந்தார். இறைவன் வயப்பட்டு சிவனுக்குப் பாத பூசை செய்ய பீடம் சமைப்பித்தார். கிடந்த பொருள் பணம் முழுவதையும் இறைவனுக்கு அர்ப்பணித்து, வெறுங் கையனாய் நின்றார். தன்னுடன் வந்த தூதுவர்களையும் மறந்தார். குதிரைகள் வாங்கும் எண்ணத்தையும் மறந்து அவனடி பூசையில் ஈடுபட்டார். இதைத் தூதுவர்கள்மூலம் அறிந்த அரசன் மாணிக்கவாசகரை துன்புறுத்த, வைகை பெருக்கெடுக்க, அணைகட்டும் கூலியாளனாக சிவபெருமான் வந்தி அம்மையார் வீட்டிற்குச் சென்று, பிட்டும் சாப்பிட்டு, உதிர்ந்த பிட்டை கந்தை வஸ்திரத்தில் கட்டிக்கொண்டு வைகைக் கரையில் அணைகட்டாது பல திருவிளையாடல் புரிந்துநின்ற பெருமானுக்கு அரசன் கட்டளைப்படி ஏவலாளர் அடித்த அடி உலகெங்கும் பட்வைத்த சிவனின் பெருமையைப் பேசவும் வேண்டுமோ? இதுபோல் சிவனடியே சிந்திக்கும் சிவஞானம் பெற்ற திருத்தொண்டர் தனது

*தீய ஆசைகளுக்கு அடிமையாகாதீர்கள்.*

ஒரேயொரு மகனை அடியானுக்கு அமுது கொடுப்பதற்கு வெட்டிக் கறி சமைத்துக் கொடுத் தானல்லவா. அவனின் சிவஞான அருளை எடுத்துக்கூறவும் முடியுமோ? இதுபோல் குங்குலியக் கலய நாயனாரும், தன் பசி, குடும்பப் பசியை நோக்காது பணம் முழுவதையும் குங்குலியம் வாங்குவதில் செலவு செய்தார்.

பதினெட்டாம் நூற்றாண்டில் சிவனடியே சிந்திக்கும் சிவஞானம் பெற்ற ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் தனது பணம் முழுவதையும் இறைபணிக்கே செலவு செய்தார். வண்ணை வைத்தீஸ்வரன் கோவில் தொண்டனாக இருந்து, நூல்கள் வெளியிட்டு சைவ சமயத்தின் பெருமையை மக்களுக்குத் தெளிவுபடுத்தினார். தற்காலத்தில் பல ஆலயங்கள் அடியார்களினால் கட்டப்படுகின்றன. அந்த வரிசையில் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயம் இரு கோபுரங்களைத் தாங்கி மக்களுக்கு அருள்புரிந்து வருவதை அறியாத சிலர் (உலகப் பற்றுடைய மூடர்) "ஏன் அம்மனுக்கு இரு கோபுரம் கட்டவேண்டுமா? அப்பணத்தை ஏழைகளுக்கு வழங்கலாமே" என்று பிதற்றுகின்றனர். இதற்கு தெல்லிப்பழை அம்மன் நிர்வாகிகள் "நாம் பிறக்கும்போது பணம் கொண்டுவரவில்லை, வந்தபின்புதான் அம்பாள் பணத்தைத் தருகிறாள். எம்மைத் தூண்டுகிறாள், அவள் பணத்தைக்கொண்டு, அவளுக்குக் கோபுரங்கள் அமைப்பதில் என்ன தவறு உண்டு? நாங்கள் அவள் பணத்தைக் கொண்டு அநாதைப் பெண்பிள்ளைகளைப் பராமரித்து, வீடுகட்டிக் கொடுத்து, விவாகமும் செய்து வைக்கின்றோம் என்று பதில் கூறுகின்றனர். துர்க்காதேவியின் பணத்தைக்கொண்டு தெல்லிப் பளை புற்றுநோய் ஆஸ்பத்திரிக்கு உதவி செய்கின்றோம். யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலைக்கும் உதவி செய்துள்ளோம். இன்னும் வேறு அநாதை இல்லங்களுக்கும் உதவி செய்து வருகிறோம். எல்லாம் அவள் பணம்" என்று பதிலளிக்கின்றார்கள்.

அதுபோல் தொண்டைமானாறு செல்வச்சந்நிதியான் அருள்பெற்று, அன்னதானம் செய்து வருகின்ற அடியவனும், வரும் எத்தொகை அடியார்களுக்கும் இரவு பகல் பாராது அன்னம் வழங்குவது செயற்கரிய காரியம் என்பதை யாவரும் அறிவர். சந்நிதியான் ஆச்சிர மத்தை வழிநடத்தும் அடியவன் சொல்லுகிறான் "சந்நிதியான் தருகிறான் தான் செய்கிறேன். அவன் பணத்தைக் கொண்டு வெள்ளிக்கிழமைகளில் சிறப்பாக அடியார்களை நல்வழிப்படுத்த பிரசங்கங்களும் கலை நிகழ்ச்சிகளும் செய்து வருவதாகக் கூறுகின்றார். அவன் பணத்தைக் கொண்டு இடர் நடைபெறும் இடங்களுக்குச் சென்று பண உதவி செய்து வருவதாகவும், வறிய பிள்ளைகள் துவிச்சக்கரவண்டியில் சென்று படிக்க, வண்டிகள் வழங்க பணம் தரு கிறான் சந்நிதியான் என்று கூறுகின்றார். எப்படிப் பணம், பொருள் வருகின்றதென்று தெரி யாது, எப்படிப் போகின்றதென்றும் தெரியாது, கணக்கு அறிக்கை ஒன்றும் இல்லை. ஏதோ என்னைச் செல்வச்சந்நிதியான் செய்யும்படி தூண்டுகிறான், நான் ஆடுகின்றேன். எல்லாம் அவன் செயல் என் செயல் ஒன்றுமில்லை என்று பகருகின்றார். சந்நிதியான் தருவதை நான் கொடுப்பதில் என்ன தவறு உண்டு என்று கேட்கின்றார். சிவனடியே சிந்திக்கும் திருப் பெருகு சிவஞானம் பெற்றவர்களின் செயல் இதுதான் என்பது உண்மை. எனவே மானுடராகப் பிறந்த நீங்கள் சிவனடியே சிந்திக்கும் சிவஞானம் பெற சந்நிதியான் ஆலயம் சென்று நிம்மதியைக் கொடுக்கும் அருள்பெற்று அவன் ஆசி பெற்று சந்நிதியான் ஆச்சிரமத்தில் அமுது உண்ணுங்கள்.

(கட்டுரைத்தொடர் - 42)

# சித்தர்களின் ஞானம்

– திரு சிவ மகாலிங்கம் அவர்கள் –

## பாடல்பெற்ற தலமாகிய திருக்கேதீஸ்வரத்தில் வாழ்ந்த சித்தர்கள்

### ஸ்ரீமத் சபாரத்தினம் சுவாமிகள் (திருவாசகச் சுவாமிகள்)

(01) திருக்கேதீஸ்வரத் திருத்தலத்தின் சிறப்பு:

தவயோகியாகிய திருமூலநாயனார் அருளிய தமிழ் மந்திரமாகிய திருமந்திரத்தில் ஈழமணித் திருநாட்டைச் சிவபூமி எனக் குறிப்பிட்டுள்ளார். பஞ்ச ஈஸ்வரங்கள் என்று அழைக் கப்படுகின்ற சிவஸ்தலங்களில் இலங்கையின் வடக்கில் நகுலேஸ்வரமும், கிழக்கில் கோணேஸ் வரமும், வடமேற்கில் முன்னேஸ்வரமும், தெற்கில் சந்திரசேகரேஸ்வரமும், மேற்கில் திருக் கேதீஸ்வரமும் மிகத் தொன்மைக்காலம் தொட்டு இருந்தன என இலங்கையின் வரலாற்று நூல்கள் பல குறிப்பிட்டுள்ளன. இவற்றில் மன்னார் மாவட்டத்தில் உள்ள திருக்கேதீஸ்வரமும், திருக்கோணமலை மாவட்டத்தில் உள்ள திருக்கோணேஸ்வரமும் பாடல்பெற்ற தலங்களாகக் காணப்படுகின்றன. கேதீஸ்வரத்தின்மீது சம்பந்தரும் சுந்தரரும், கோணேஸ்வரத்தின்மீது சம்பந்தரும் பாடல்களைப் பாடியுள்ளார்கள்.

நவக்கிரகங்களில் ஒன்றாகிய கேது பூசித்த தலம் ஆகையால் திருக்கேதீஸ்வரம் என்ற பெயர் ஏற்பட்டது எனப் புராண நூல்கள் கூறுகின்றன. திருக்கேதீஸ்வரம் அமைந்துள்ள இடம் மாதோட்டம் என்ற பெயரால் அழைக்கப்பட்டது. பௌத்த இலக்கியங்கள் மகாதீர்த்தம் என இந்த இடத்தின் பெயரைக் குறிப்பிட்டுள்ளன. இத்தலத்தின் தீர்த்தத்தின் பெயரினைப் பாலாவி எனச் சம்பந்தரும் சுந்தரரும் தங்கள் பாடல்களில் குறிப்பிட்டுள்ளார்கள். "மாதோட்டத்து மன்னு பாலாவியின் கரையில் கேதீச்சரம்" எனச் சம்பந்தரும், "பாலாவியின் கரைமேல் செய்ய சடைமுடியான் திருக்கேதீச்சரத்தானே" எனச் சுந்தரரும் பாலாவித் தீர்த்தத்தின் மகிமை யைத் தங்கள் பாடல்களில் வெளிப்படுத்தியுள்ளார்கள். தன்னிடம் வந்து நீராடும் அடியவர் களின் பாவங்களைப் போக்கித் தூய்மை செய்வதால் மகாதீர்த்தம் என்ற பெயர் ஏற்பட்டதாகப் பௌத்த இலக்கியங்கள் கூறுகின்றன.

போர்த்துக்கேயருடைய ஆட்சிக் காலத்தில் திருக்கேதீஸ்வர ஆலயத்தின் சொத்துக்கள் சூறையாடப்பட்டு கோயில் முற்றாக இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டது. ஆலயத்தின் இடித்த கற்களைப் பயன்படுத்தி மன்னார் துறைமுகத்தைப் போர்த்துக்கேயர் கட்டினார்கள். காடு மண்டிப்போயிருக்கும் திருக்கேதீஸ்வரத்தை புனருத்தாரணம் செய்யவேண்டுமென்று நாவலர் பெருமான் "யாழ்ப்பாணச் சமயநிலை" என்ற விஞ்ஞாபனத்தின் ஊடாகச் சைவப் பெருமக்களிடம் வேண்டுகோள் விடுத்தார்.

"திருக்கேதீஸ்வரம் வடமாகாணத்தின் கண்ணுள்ள மன்னாருக்கு அதி சமீபத்தில் இருக்கின்ற மாதோட்டத்தில் உள்ளது. இத் திருக்கேதீச்சரம் அழிந்து காடாகக் கிடக்கின்றதே! புதிது புதிதாக இவ் இலங்கையில் எத்தனையோ கோயில்கள் கட்டப்படுகின்றனவே! நீங்கள் இந்த மகாஸ்தலத்தை சிறிதும் நினையாததென்னையோ! இவ்விலங்கையிலுள்ள விபூதிதாரிகள்

எல்லாரும் சிறிது சிறிது உபகரிக்கினும் எத்துணைப் பெருந்தொகைப் பணம் சேர்ந்துவிடும். இதை நீங்கள் எல்லோருஞ் சிந்தித்து இத் திருப்பணியை நிறைவேற்றுவீர்களாயின் அருட் கடலாகிய சிவபெருமான் உங்களுக்கு அனுக்கிரகம் செய்வார்" என்பது நாவலர் பெருமானின் வேண்டுதல் ஆகும்.

நாவலருடைய வேண்டுதலை ஏற்ற பசுபதிச் செட்டியார் 1894ஆம் ஆண்டு திருக்கேதீஸ்வரம் இருந்த இடத்தைக் கண்டுபிடித்து அங்கு தற்காலிகமாக சிவாலயமும் அம்பாள் ஆலயமும் நிறுவி பூசைகளும் முறையாக நடக்கக்கூடிய ஒழுங்குகளைச் செய்தார். தொடர்ந்து சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரனார் ஆலயத் திருப்பணி வேலைகளில் ஆர்வத்துடன் செயற்பட்டார். சுதந்திர இலங்கையின் முதலாவது பிரதமரான D.S. சேனநாயக்காவின் செயலாளராக இருந்த சேர் கந்தையா வைத்தியநாதன் திருக்கேதீஸ்வரத் திருத்தலத்தின் புனரமைப்பு வேலைகளில் தம்மை அர்ப்பணித்துச் செயற்பட்டார். இங்கு நடைபெறும் நித்திய பூசையில் திருமுறைகளுக்கு உரிய இடத்தை ஏற்படுத்திக் கொடுத்த பெருமை இவரையே சாரும்.

## (02) சபாரத்தினம் சுவாமிகள்:

திருக்கேதீஸ்வரச் சூழலில் பக்தராகவும், ஞானியாகவும், சித்தராகவும் வாழ்ந்த பெருமைக்குரியவராகச் சபாரத்தினம் சுவாமிகள் திகழ்ந்தார். கோயிலின் தெற்குப் புறமாக இருக்கும் கௌரி அம்பாள் வாசலுக்கு நேராகச் சிறு குடில் அமைத்து அந்த இடத்திலேயே சபாரத்தினம் சுவாமிகள் வாழ்ந்து வந்தார். இவர் 1904ஆம் ஆண்டு பங்குனித் திங்கள் திருவாதிரை நட்சத்திரத்தில் (28.03.1904) இல் வடமராட்சியின் அல்வாய் கிராமத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி என்பவருக்கும் பாண்டியன் தாழ்வைச் சேர்ந்த சின்னத்தங்கம் அம்மையாருக்கும் அருந்தவப் புதல்வனாக அவதரித்தார். இவருக்கு இரு இளைய சகோதரர்கள் இருந்தார்கள். தாயாரின் ஊரான பாண்டியன் தாழ்வு தவத்திரு யோகர் சுவாமிகள் வாழ்ந்த கொழும்புத்துறைக்கு அயலில் உள்ள கிராமமாகும். இதனால் சிறிய வயதிலேயே யோகர் சுவாமிகளின் அருட்பார்வையும் ஆசீர்வாதமும் இவருக்குக் கிடைத்தது. ஆரம்பக் கல்வியை கொழும்புத்துறை சைவப் பாடசாலையில் மேற்கொண்டார். அந்தக் காலத்தில் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளை கிறிஸ்தவ மிஷனரியினரே நடாத்தி வந்தார்கள். ஆசிரியர் பயிற்சியை முழுமையாகப் பெறுவதற்கும், ஆசிரியராகப் பணியாற்றுவதற்கும் கிறிஸ்தவராக மதம் மாறவேண்டும் என்ற நிலை இருந்தது. ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் சபாரத்தினம் அவர்கள் கல்வி பயின்றுகொண்டிருந்த வேளையில் மதம் மாறவேண்டும் என்று கட்டாயப் படுத்தியதால் பயிற்சியை இடைநடுவில் விட்டு விலகினார். இதேபோன்ற நிகழ்வு காரைநகரைச் சேர்ந்த ஆசிரியர் அருணாசலத்திற்கும் ஏற்பட்டது. மதம் மாற மறுத்து இரவோடிரவாக தெல்லிப் பழையில் இயங்கிவந்த ஆசிரிய கலாசாலையை விட்டு வெளியேறிய அருணாசலம் ஆசிரியர் அவர்களே சைவ ஆசிரிய கலாசாலை தோன்றுவதற்கு மூலப் புருஷராக இருந்து செயற்பட்டவர்.

இவர் திருமணம் செய்து சிறிது காலத்திலேயே குழந்தைச் செல்வம் இல்லாமலே மனைவியும் மறைந்து விட்டார். மனைவியின் மறைவுக்குப் பின்பு தலயாத்திரை மேற்கொண்டு சிதம்பரம் சென்று நடராஜப் பெருமானைத் தரிசனம் செய்தார். தாய் நாட்டிற்குத் திரும்பிய சபாரத்தினம் அவர்கள் ஈழமணித் திருநாட்டில் உள்ள பல ஆலயங்களுக்குச் சென்று

தரிசனம் செய்து வந்தார். 1940ஆம் ஆண்டில் திருக்கோணமலையில் இருந்து திருக் கேதீஸ்வரம் வந்து சேர்ந்தார். பாடல்பெற்ற திருத்தலமாகிய திருக்கேதீஸ்வரத்துக்கு வருகை தந்து ஆலயத்தின் தெற்கு வீதியில் கௌரி அம்பாள் வாசலுக்கு நேராக ஒரு சிறிய குடில் அமைத்து அங்கே வசித்து வந்தார். மணிவாசகப் பெருமான் அருளிய தெய்வ வாசகமாகிய திருவாசகத்தில் இவருக்கு மிகுந்த ஈடுபாடு ஏற்பட்டது. திருவாசகத்தின் ஐம்பத்தொரு பதிகங் களையும் அறுநூற்று ஐம்பத்தொரு பாடல்களையும் உணர்ந்து அனுபவித்துப் படித்து சீவனுக்குள்ளே சிவமணம் பூத்த ஞானச் செல்வராக வாழ்ந்து வந்தார். பேச்சும் மூச்சும் திருவாசகம் எனும் நினைவுடனேயே வாழ்ந்ததால் இவரை அடியவர்கள் அனைவரும் திரு வாசகச் சாமி என்றே அழைத்தார்கள். திருவாசகத்தில் காணப்படும் நுட்பமான உட்பொருளை உணர்ந்தவராகவும், அனுபவித்தவராகவும் இருந்ததோடு பல நூற்றுக்கணக்கான அடியவர் களுக்கு அவற்றைப் போதித்தும் வந்தார். கௌரி அம்பாள் சமேத கேதீஸ்வரநாதனை வணங்கவரும் அடியார்களுக்கு திருவாசகத்தின் பெருமையை உணர்த்தியதோடு வயிற்றுப் பசி நீங்க உணவும் வழங்கி வந்தார்.

திருக்கேதீஸ்வர ஆலயத்தின் தலைவராக இருந்து பெரும் பணியாற்றிய சேர் கந்தையா வைத்தியநாதனுக்குப் பக்கபலமாக இருந்து செயற்பட்டார். கௌரி அம்பாள் பாடசாலை, நெசவு சாலை என்பன கட்டுவதற்கு கந்தையா வைத்தியநாதனுக்கு உதவியாக இருந்து பணிபுரிந்தார். திருவாசக மடம் அமைவதற்கு உறுதுணையாக இருந்ததோடு இங்கு 35 அடி ஆழக் கிணற்றினை வெட்டுவித்தார். நல்லூர்த் திருவிழாவிற்கு திருக்கேதீஸ்வரத்தில் இருந்து கால்நடையாகவே வருகை தருவார். இப்படியாக ஒருமுறை வருகின்றபொழுது வெள்ளாங் குளத்தில் காட்டு யானை ஒன்று இவரை மறித்தது. உடனே உன்னிடத்தில் இருப்பதுதான் என்னிடத்திலும் இருக்கிறது என்று நின்றுவிட்டார். யானை இவரை வணங்கிவிட்டுத் திரும்பிச் சென்றுவிட்டது.

சபாரத்தினம் சுவாமிகள் துணைவியார் மறைந்த பின்பு மறவன்புலவில் உள்ள சின்னத் தம்பிச் சுவாமிகளின் சமாதியில் சிறிதுகாலம் இருந்து தொண்டாற்றினார். நான் இவ்வளவுகாலம் பணி செய்தும் எனக்கொருவிதமான தெய்வ அனுக்கிரகமும் கிடைக்கவில்லையே என்று மனம் நொந்தார். அன்றிரவே சின்னத்தம்பிச் சுவாமிகள் கனவில் தோன்றிப் பின்வரும் திருவாசகப் பாடலை இவருக்கு உபதேசம் செய்தார்.

ஒருவனே போற்றி ஒப்பில் அப்பனே போற்றி வானோர்
குருவனே போற்றி எங்கள் கோமளக் கொழுந்தே போற்றி
வருக வென்றென்னை நின்பால் வாங்கிட வேண்டும் போற்றி
தருக நின்பாதம் போற்றி தமியனேன் தனிமை தீர்த்தே

(திருவாசகம், காருண்யந்திரங்கல்)

சின்னத்தம்பிச் சுவாமிகளின் உபதேசம் இவரைத் திருவாசகச் செம்மலாக்கியது. நாவலர் பதிப்பித்த திருவாசகப் பிரதியைத் தான் போகும் இடமெல்லாம் கையிலே கொண்டு திரிந்தார். அறுநூற்று ஐம்பத்தாறு பாடல்களையும் மனனம் செய்து திருவாசகமயமானார். சிலகாலம் சின்னத்தம்பிச் சுவாமிகளின் சமாதிக் கோயிலிலே இருந்து தொண்டு புரிந்த பின்பு பாரத நாட்டிற்குச் சென்று தலயாத்திரை செய்து புண்ணிய ஷேத்திரங்கள் பலவற்றையும் தரிசனம் செய்தார். காசிக்குச் சென்று விசாலாட்சி அம்பாள் சமேத விஸ்வநாதப் பெருமானையும்

*தீய செயல்களிலிருந்து நம்மைத் தடுப்பவனே நண்பன்.*

வணங்கி அவருடைய திருவருளுக்கும் பாத்திரமானார். கதிர்காமத்திற்கு முப்பத்தைந்து முறை பாதயாத்திரை மேற்கொண்டார். ஒருமுறை மாணிக்க கங்கையில் நீராடிவிட்டுச் சடையம்மா மடம் சென்றவேளை ஓர் அன்பர் காவியும் உருத்திராட்சமும் இவருக்கு அன்பளிப்பாகக் கொடுத்தார். அதனை அன்புடன் வேண்டி அணிந்தார். இந்தக் காவி வேடத் திற்குத் தன்னைத் தயார்பண்ண வேண்டும் என்று அடிக்கடி கூறுவார். அந்த நேரத்தில் "ஒன்றும் போதா நாயேனை" என்னால் அறியாப்பதம் தந்தாய்" என்ற திருவாசக வரிகளை அடிக்கடி நாவால் உச்சரிப்பார்.

கண்டகி தீர்த்தம் என்று அழைக்கப்படுகின்ற கீரிமலைக் கடற்கரையில் அமைந்துள்ள குழந்தைவேற் சுவாமிகளின் சமாதிக்கோயிலில் சபாரத்தினம் சுவாமிகள் ஓர் இரவு தங்கினார். அதிகாலை வேளை ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தபொழுது அமங்கலமான கனவு ஒன்று கண்டார். சடுதியாக நித்திரையால் எழும்பியவர் வேட்டியைக் கட்டிக்கொண்டு சால்வையை உதறித் தோளிலே போட்டுக்கொண்டு தனது பிறந்தகமாகிய பாண்டியன்தாழ்வை நோக்கி நடந்தார். அதிகாலைவேளை யாழ்ப்பாணம் பெரியகடைப் பகுதிக்கு வந்து சேர்ந்தார். பெரியகடையின் வடபுறத்திலே இருந்த செட்டியார் இல்லத்திலே ஆறுமுகம் சுவாமிகள் என்ற துறவி ஒருவர் வாழ்ந்து வந்தார். சபாரத்தினம் ஆறுமுகம் சுவாமிகளைச் சந்தித்துவிட்டுப் பாண்டியன் தாழ்வுக்குச் செல்வோம் என நினைத்தார். ஆறுமுகசுவாமி இவரைக் கண்டதும் "கோத்தை செத்தால் உனக்கென்ன" என்று கூறித் தன்பக்கத்திலே அமரச் செய்தார். (ஆத்தை என்று அழைக்கும் தாயாரைக் கிராமிய வழக்கில் கோத்தை என்றும் சொல்லும் வழக்கம் உண்டு) காலையிலே தேநீர் கொடுத்து உபசரித்ததோடு நண்பகல் 25சதம் பணத்தைக் கொடுத்துச் சாப்பிட்டுவிட்டு வரும்படி கூறினார். உணவு உண்டபின் இருவரும் சிறிதுநேரம் சம்பாஷனை செய்து கொண்டு இருந்தார்கள். பி.ப இரண்டு மணியளவில் இவரை இனி நீ போ என்று கூறி வழி அனுப்பி வைத்தார். இல்லம் சென்றதும் தாயாரின் ஈமக்கிரியைச் சடங்குகளுக்கான ஆயத்தங்கள் செய்வதைக் கண்டார். உறவினர்கள் பலரும் சபாரத்தினத்தை எல்லா இடமும் தேடிக் காணாததால் கிரியைகள் நடைபெறுவதற்கான செயற்பாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். தம்பிமார் இருவரும் சுண்ணம் இடிப்பதற்கு தயாராகிக் கொண்டிருந்தார்கள். இவர் அங்கே சென்றதும் உற்றார், உறவினர் அனைவரும் வியப்படைந் தார்கள். தாயாரின் ஈமக்கிரியைகளில் இளைய சகோதரர்களோடு சேர்ந்து தானும் பங்காற்றினார்.

பஞ்சாட்சர அம்மா என்ற மாதரசி தனது கணவனை இழந்தபின்பு திருக்கேதீஸ்வரத் திருத்தலத்தை நாடி வந்தார். சிவத்தொண்டும் அடியார் தொண்டும் செய்துகொண்டு இங்கே தங்கினார். திருவிழா, திருவெம்பாவை, சிவராத்திரி காலங்களில் அடியார்கள் பலர் திருக் கேதீஸ்வரம் வருவார்கள். திருவாசகச் சுவாமிகளைக் காண்பதற்காக அடியார்கள் சிலர் அவர் இருந்த குடிலுக்கு வருவார்கள். வருகை தந்த அடியார்களும் சுவாமிகளும் திருவாசகம் பற்றிக் கலந்துரையாடுவார்கள். அடியார்கள் கூறும் திருவாசகக் கருத்துக்களில் ஏதாவது தவறுகள் கண்டால் வயது முதிர்ந்த நிலையில் தடியை ஊன்றிக்கொண்டு வந்து அம்மையார் அவர்கள் தவறுகளைத் திருத்துவார். இவரிடமிருந்த திருவாசக அறிவு அப்போது புலப்படும்.

சிறந்த சிவப்பணிகள் செய்துவந்த அம்மையார் நோயுற்றிருந்த வேளை சபாரத்தினம் சுவாமிகள் யாழ்ப்பாணத்தில் இருந்தார். சுவாமிகள் இல்லையே என்று அனைவரும் ஏங்கிக்

*எதையும் திட்டமிடுவது மனிதன் நிறைவேற்றி வைப்பது இறைவன்.*

கொண்டிருந்தபோது சுவாமிக்குத் திருவருள் உணர்த்தத் திடீரென்று திருக்கேதீஸ்வரம் வந்து சேர்ந்தார். சுவாமிகள் வந்தபின்புதான் பஞ்சாட்சர அம்மா இறைவனடி சேர்ந்தார். சிதம்பரம் நடராஜப் பெருமானோடு மணிவாசகர், நந்தனார் சேர்ந்திருந்ததுபோல சபாரத்தினம் சுவாமிகளும் சேர்ந்திருப்பார். இவருடைய பெருமைகளை எழுத்தில் வடிக்கமுடியாது. அவர் இருந்திருந்தால் உள்நாட்டு யுத்த காலத்தில் கோயில் மூடப்பட்டிருக்காது. நாமும் அநாதைகளாக வெளியேறி இருக்கமாட்டோம் என திருக்கேதீஸ்வரத்தில் திருவாசக மடத்தை நடாத்திய சரவணமுத்துச் சுவாமிகள் குறிப்பிட்டுள்ளார்.

ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கும் மதுரவாசகமாகிய திருவாசகத்தில் தோய்ந்த சபாரத்தினம் சுவாமிகளின் நூற்றாண்டு விழாவின்போது பல ஆன்மீகச் செல்வர்களும், அறிஞர்களும் அவரைப் பற்றி வெளியிட்ட பாடல்களும், செய்திகளும் அவரின் பெருமைக்கு உரைகல்லாகக் காணப்படுகின்றன.

### மகாவித்துவான் வீரமணி ஐயரின் வாழ்த்துப் பாடல்

உருகாத மனத்தினையும் நெக்குருக்கி
உளமார சிவபிரானின் பதம் சேர்க்கும்
பெருவாசகத் தேனைப் பொழிந்து மாந்தர்
பேரின்ப வாரிதியில் ஒன்று சேரத்
தருமா சபாரத்ன செம்மல் சேவை
தாரணியில் மாந்தரது நெஞ்சில் என்றும்
திருவாசகம் போலத்தித்தித் தன்பாய்
நிகழ்ந்திருமே சபாரத்தினம் வாழிவாழி.

சாவின் போதும் தமிழ் படித்துச் சாகவேண்டும்
எந்தன் சாம்பரும் தமிழ் மணக்க வேக வேண்டும்

என்று பண்டிதர் க. சச்சிதானந்தம் அவர்கள் பாடியதுபோல சாவின்போதும் திருவாசகம் படித்துச் சாகவேண்டும் எந்தன் சாம்பரிலும் திருவாசக மணம் வீசவேண்டும் என்ற உறுதிப்பாட்டுடன் வாழ்ந்த சபாரத்தினம் சுவாமிகளைச் சைவப் பெருமக்கள் அனைவரும் போற்றித் துதிக்க வேண்டும். இவர் வாழ்த்துக்குரியவர் மட்டுமல்ல வணக்கத்திற்கும் உரியவர் என்பதை சதாசிவம் பிள்ளை அருளிய திருக்கேதீஸ்வரநாதர் கிள்ளை விடுதூதுப் பாடல் ஒன்று குறிப்பிடுகிறது.

தேர்வீதி மார்க்கம் திரும்பி வலம் வரும் கால்
அரும் பெரும் தவத்தோன் அன்புருவோன் ஈரநெஞ்சன்
தெய்வ நலஞ்சேர் திருவாசகச் சுவாமி
செய்ய சபாரத்தினந்தாள் சென்று பணிந்து உய்யத்
திருவாசக மடத்தைச் சேர்.

யோகியாகவும், விரதியாகவும் வீற்றிருந்து திருவாசகத்தேனை வாரிவழங்கும் சபாரத்தினம் சுவாமிகளின் திருவடிகளை வணங்கி அனைவரும் உய்திபெற வேண்டுமென்று வித்துவான் ஆறுமுகம் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

*சோதனைகள்தான் ஒரு மனிதனை அவனுக்கு அறிமுகப்படுத்துகின்றன.*

மேற்றிசையை நோக்கின் விரவும் மரச்சோலை
தோற்றுமதன் நாப்பணோர் தொல் குடிலில் நோற்றுயரும்
அன்புருவன்! என்புருவன்! ஆன்ற திருவாசகத்தேன்
இன்புடனே ஈந்துவக்கும் ஏற்றமுளான் தென்புதர
வீற்றிருக்கும் யோகி விரதி சபாரத்தினமாம்
சாற்றரிய சாமிகுருதாள் பணிந்து போற்றிலுயர்....

திருவாசகத் தேனைப் பருகினார். திருவாசக மடத்தை அமைத்தார். திருவாசக விழாவை நடாத்தினார்; திருவாசகச் சுவாமி என்ற நாமத்தைப் பூண்டார். இவர் தான் சபாரத்தினம் சுவாமிகள் என்பதைக் கவிஞர் வி. கந்தவனம் அவர்கள் தனது பாடலின் ஊடாக வெளிப்படுத்தியுள்ளார்.

திருவாசகத்தேன் மிக வுண்டார்
திருவாசகமா மடங் கண்டார்
திருவாசகத்து விழாக் கண்டார்
திருவாசகப் பேர் தன்னைக் கொண்டார்
கற்றுத் தெளிந்த கருத்து மணி
கனித்துக் கவருங் கழுத்து மணி
முற்றி முழுதும் பழுத்த கலை
முற்றுந் துறந்த மௌன முனி.

பிற்காலத்திலே தனது சொந்த இடத்திலே வாசம் செய்த சுவாமிகள் (25.01.1988) ஆம் ஆண்டு தனது 84ஆவது வயதில் இறைபதம் அடைந்தார். துண்டி மயானத்தில் இவரின் பூத உடல் தகனம் செய்யப்பட்டது. இவருடைய அஸ்தி அடங்கிய நினைவாலயம் மறவன்புலவில் அமைக்கப்பட்டுள்ளது. சுவாமிகளின் குருபூசை 1992ஆம் ஆண்டுவரை யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. 1993ஆம் ஆண்டிலிருந்து கொழும்பு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்று வருகிறது. (தொடரும்...

---

## அகர வரசையில் அன்பு முகாம்

அழகன் குமரனருளாலே அவன் சந்நிதியில் அன்புமுகாம்
ஆறுபடையான் ஆச்சிரமத்தில் ஆசியுடன் ஆனந்த முகாம்
இடர் களையும் இடத்தில் இளையவனின் இன்ப முகாம்
ஈசனருளாலே ஈசன் பெயரமைந்த ஈசன் மலையமர்ந்த சமுகத்தின் முகாம்
உவப்புடனே உணவும் உறவுகளின் உணர்வும் ஒன்றித்த முகாம்
ஊமையைப் பேசவைத்த சக்திமகன் வாசலில் சரித்திர முகாம்
எளிமையுடன் வாழும் எந்தன் பெயர் அமைந்த சுவாமிகளினன்புடன் முகாம்
ஏற்றமுடன் வாழ்வளிக்கும் ஏற்புடைய வழிமுகாம்
ஐயங்கள் தெளிவுறவே கலியுகவரதன் ஐயாவின் ஐதீக முகாம்
ஒரு பொல்லாப்புமில்லாமல் எப்பவோ முடிந்த முகாம்
ஓம் எனும் பிரணவத்தின் ஓங்காரமாய் ஒலித்த முகாம்
ஔடதமாய் வாழ்வினிற்கு வரமளித்த முகாம்
அஃது அந்த மோகனதாஸ் சுவாமிகளின் அறுசுவை உணவோடு நிறைவு கண்ட முகாம்.

இ. மோகன்

# தொண்டர் தம் பெருமை சொல்லவும் அரிதே

– திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அவர்கள் –

உலகில் வகுக்கப்பட்ட சைவம் முதலாய அளவற்ற சமயங்களையும் தன்னுள் அடக்கி மேலோங்கி நிற்பது சைவ சித்தாந்தம். இதற்கு முழுமுதற் கடவுள் சிவபெருமான். சிவன் கடவுளர் வரிசையில் முன்னவனாக வைத்து எண்ணப்படுபவன்- வணங்கப்படுபவன். அவனே முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளானவன். அவனே பொறிவாயில் ஐந்து அவித்தவன். அவன் கூறிய நெறியே பொய்தீர் ஒழுக்க நெறியாகிய சைவசித்தாந்த நெறியாகும். சைவசித்தாந்தமே சிவனை அடைய வழிகாட்டும் சீரிய நெறியாகும். அந்நெறியே எல்லா உயிர்களையும் பாதுகாக்கும் சீரிய நெறியுமாகும்.

இத்தகைய சைவசமயத்தின் ஜீவநெறியாகிய சைவ சித்தாந்த நெறியினை விளக்க எழுந்த இலக்கியம் பன்னிரு திருமுறைகள். இவ்வருள் நெறி நின்று ஒழுகும் சைவப் பெருமக்களுக்கு நல்லதோர் சாதனமாக அமைந்துள்ளதும், நற்பயன் அளிப்பதும் திருவைந் தெழுத்தான நமசிவாய என்பதாம்.

திருவைந்தெழுத்து ஆகிய "நமசிவாய" எம் பெருமானது திருநாமம் ஆகும். அதே போன்ற சைவசமயத்தை வளர்க்க பூவுலகில் அவதாரம் செய்த அப்பர், சுந்தரர், சம்பந்தர், மணிவாசகர் ஆகியோரது திருநாமங்களையும் மந்திரங்களாகவே நாம் கொள்வதில் தவறேதுமில்லை எனலாம்.

இதற்கோர் எடுத்துக் காட்டாக 63 நாயன்மார்களுள் ஒருவரான அப்பூதியடிகள் தனது பிள்ளைகளுக்கு நாவுக்கரசரின் பெயரை வைத்து அழைக்கலானார். திருநாவுக்கரசு என்னும் பெயரை எழுதியும் ஓதியும் முத்திபெற்ற இவர் வேறொரு தவமும் செய்ததாக இல்லை என சிவப்பிரகாச சுவாமிகள் பாடியுள்ளார் என்றால் இந்நாமத்தை மந்திரம் என்று சொல்வதில் தவறில்லை அல்லவா?

இதுமட்டுமல்ல, பெரியபுராணம் தந்த சேக்கிழார் சுவாமிகள் புராணத்தைத் தொடங்கும்போதே "வாகீசர் வாய்மை திகழ் பெரு நாமச்சீர் பரவல் கூறுகின்றேன் பேருலகில் ஒரு நாவுக்கு உரை செய்ய சீர் பரவலுறுகின்றேன்" என்று கூறி பெருமிதம் கொள்கின்றார்.

இதேபோன்ற பக்தி மார்க்கத்தைப் பண்ணிசைமூலம் பரப்பிய சமய குரவர்களில் வயதில் இளையவரான ஞானசம்பந்தரின் நாமமும் ஒரு திருமந்திரமாகவே விளங்கியது. தம்மை அடைந்த ஆன்மாக்களை ஈடேற்ற அவதரித்த திருஞானசம்பந்தரை உபாசனா மூர்த்தியாகக் கொண்டு அவர் திருவடியை சதா உச்சரித்து முத்தி பெற்றவர் கணநாத நாயனார்.

இதேபோன்று நம்பியாரூரர் நாமம் புகன்ற தன்மையினால் நற்பேறுகள் பெற்றவர் சுறும்ப நாயனார். சோமாசிமாற நாயனார் குண்டையூர்க்கிழார் போன்ற பெரியார்களும் சுந்தரமூர்த்தி நாயனார் திருவடிக்கு அன்பு செலுத்தி உய்வு பெற்றவர்கள்.

*இறைவனிடம் பயம் ஏற்பட்டாலன்றி நல்லொழுக்கம் உண்டாகாது.*

சேக்கிழார் பெருமானே சுந்தரர் திருவடிகளை வணங்க வாய்ப்பளித்த தனது மனிதப் பிறவிக்கே வணக்கம் செலுத்துகின்றார் என்றால் சுந்தரர் பெருமை சொல்லும் தரமானதோ?

தொண்டர் தம் பெருமை சொல்லவும் அரிதே.

நேசம் நிறைந்த உள்ளத்தால்
நீலம் நிறைந்த மணிகண்டத்து
ஈசன் அடியார் பெருமையினை
எல்லா உயிரும் தொழ எடுத்துத்
தேசம் உய்யத் திருத்தொண்டர்
தொகைமுன் பணித்த திருவாளன்
வாசமலர் மென்கழல் வணங்க
வந்த பிறப்பை வணங்குவோம்.

## சந்நிதி முருகன் கைவிடமாட்டாரே!

உற்றவளே என்னைப் பெற்றவளே
தினம் உமக்கே நமஸ்காரம்
பெற்றீர் வளர்த்தீர் பெயருமிட்டீர்
ஜீவப்பிரதிஷ்டை செய்வித்தீரே!
(உற்றவளே

இரவுமுழுவதும் தூங்காதிருந்து நீர்
எந்தனைக் காத்தீரே!
அரவு முதற் பல ஜெந்துக்களால் வரும் -
ஆபத்தைத் தீர்த்தீரே!
(உற்றவளே

பாலும் சோறும் பட்சணங்களும் எனக்கிட்டு
பழஞ் சோறுண்டீரே!
காலமெல்லாம் நல்ல சோமன் நானுடுக்க
நீர் கந்தை கைக்கொண்டீரே!
(உற்றவளே

ஆறுவயது நிரம்பிய உடனே - என்னைப்
பள்ளியில் சேர்த்தீரே!
ஆரம்பக்கல்வி முதல் பல்கலைக் கல்விவரை
கற்றுத்தேறப் பாங்காய் உழைத்தீரே!
(உற்றவளே

பட்டம் பெற்றுவந்தவுடன் தொழிலுக்கு விண்ணப்பித்து
ஆசிரியத் தொழில் தேடித் தந்தீரே!
தனிமையில் நின்று இத்தனை செயல்களையும்
சிறப்புறச் செய்த உம்மைக் கைவிடமாட்டாரே!
சந்நிதி முருகன் கைவிடமாட்டாரே!
சந்நிதி முருகன் கைவிடமாட்டாரே!

-க. சரவணபவன்-

# படங்கள் தரும் பதிவுகள்



சித்திரை மாத ஞானச்சுடர் மலரின் சிறப்புப்பிரதி பெற்றோரிற் சிலர்...






சித்திரை மாத ஞானச்சுடர் மலரின் சிறப்புப்பிரதி பெற்றோரிற் சிலர்...






சந்நிதியான் ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் சமுதாயப் பணிகளின் வரிசையில் வறுமைக்கோட்டின்கீழ் கல்வி கற்கும் பாடசாலை மாணவர்களுக்கான துவிச்சக்கரவண்டியினை மறைந்த நித்தியசீதரன் அவர்களின் 1ஆம் ஆண்டு நினைவு நிகழ்வின்போது வழங்கப்பட்டது.

உலகில் அடக்கமுடியாத அசுரன் அலட்சியம்.







2018.05.17 அன்று வருடாந்த கதிர்காம பாத யாத்திரையின் பொருட்டு யாத்திரையில் கலந்துகொள்ளும் அடியவர்கள் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்திலும் சந்நிதியான் ஆச்சிரமத்திலும் இடம்பெற்ற பூசை வழிபாட்டினைத் தொடர்ந்து தமது யாத்திரையை ஆரம்பித்தனர்.

தன்னைத்தான் அடக்கியவன் தன் விரோதியை அடக்குவான்.






எளிமையைப் பின்தொடர்ந்து மகிழ்ச்சி வருகிறது.

# வட இந்திய யாத்திரை - 05


(தொடர்ச்சி...

– மோகனதாஸ் சுவாமிகள் –

எப்படியும் அதிகாலை அகோரிகளைக் காணவேண்டும் என்ற அவாவின் காரணமாக சரியான உறக்கம் இல்லை. கடிகாரம் நான்குமணி காட்டியதும் முதல் ஆளாக கஜன் எழுந்து எம்மை எழுப்பினார். நாங்களும் விழித்திருந்த காரணத்தால் உடனடியாக எழுந்து கங்கைக் கரையை நாடி நாம் ஒழுங்கு செய்திருந்த படகோட்டியுடன் தொடர்பினை ஏற்படுத்தி கங்கையின் மறு கரையை அடைந்தோம்.

எமது வழிகாட்டி கூறியபடி அகோரிகள் இருக்கும் இடத்திற்கு நடந்துதான் போக வேண்டும். நாம் அனைவரும் நடப்பதற்கு ஆயத்தமானோம். சிறிது தயக்கமாகவும் இருந்தது. நாம் போகும்பொழுது அகோரிகள் அவ்விடத்தில் இருந்தால் என்ன செய்வார்கள் எமது வரவை எவ்விதத்தில் ஏற்றுக்கொள்வார்கள் என்ற மன எண்ணத்துடன் இரவு கொழுந்துவிட்டு எரிந்த தீயின் அடையாளத்தை வைத்து அவ்விடத்தை நாடி நடக்கத் தொடங்கினோம்.


சுமார் இரண்டு மைல் தூரம் நடந்திருப்போம். எமது கண் பார்வையில் பர்ணசாலையை ஒத்த வகையில் ஒரு குடிசை தென்பட்டது. குடிசைக்கு முன்பாக தீமூட்டிய இடத்திலிருந்து புகை எழுந்துகொண்டு இருந்தது. அந்த இடத்தை அணுகியதும் என்ன நடக்கப்போகிறது என்ற மனப் போராட்டத்துடன் அவ்விடத்தை அடைந்தோம். நாம் அந்த இடத்தை அடைந்த பொழுது காலை புலர்ந்து கொண்டு இருந்தது. குடிசைக்குச் சமீபமாக சென்றபொழுது கங்கையிலோ குடிசையிலோ ஒருவித சனநடமாட்டமுமில்லை. வெறிச்சோடிப் போய் இருந்தது. இவ்வளவு தூரம் வந்தும் ஒருவரையும் காணமுடியவில்லையே என்ற ஏக்கத்துடனும், எதிர்பார்ப்புடனும் குடிசையை எட்டிப் பார்த்தோம்.



உள்ளே எமது கண்ணில் பட்டது ஒரு யாக குண்டம். இரவு முழுக்க யாகம் செய்ததற்கான அடையாளம் தெரிந்தன. குறிப்பாக யாக குண்டத்தின் நான்கு கரைகளிலும் மண்டை ஓடுகள், குங்குமக் கரைசலுடன் கூடிய வெற்றிலைகள் மற்றும் யாகத்திற்குரிய பல பொருட்கள் சிதறுண்டு காணப்பட்டன. என்ன ஒருவரையும் காணவில்லை என்ற ஆதங்கத்துடன் யாக குண்டம் அமைந்த இடத்தை அடைந்து உள்ளே பார்வையைச் செலுத்தினோம். சற்று அதிர்ந்துதான் போனோம். காரணம் குடிசையின் உட்புறத்தில் இருவர். அதில் ஒருவர் பிறந்த மேனியுடன் நிர்வாண கோலத்தில் கண்ணை மூடியபடி சிலைபோல் அமர்ந்திருந்தார். சாம்பல் படிந்த மேனியுடனும், சடாமுடியுடனும் கழுத்தில் பலவித மாலைகளையும் அணிந்த

*உன்னைப்பற்றி உயர்வாக எண்ணுவதுபோல, பிறரைப் பற்றியும் உயர்வாகவே கருது.*

தோற்றத்துடன் அமர்ந்திருந்தார். முதலில் பார்த்தபொழுது சிலைதான் என்று எண்ணத் தோன்றியது. நன்கு உற்றுப் பார்த்தபொழுதுதான் தெரிந்தது அது மனிதன் என்று. அவரைப் பார்த்தபடி குடிசையைச் சுற்றிப்பார்த்த பொழுது அரையில் சிறு துண்டுடன் உள்ளிருந்து ஒருவர் வந்தார்.



எம்மைக் கண்டதும் சத்தம் போடவேண்டாம் என்று கையால் சைகை செய்து குடிசைக்கு வெளியே அழைத்து வந்தார். எங்கே வந்தீர்கள்? என்று தமிழில் கேட்டதும் நாம் வியந்து போனோம். அவரது வயது சுமார் 30க்குள் இருக்கும். எமக்கும் அவர் தமிழ் மொழியில் கதைத்ததும் மனதில் இருந்த பயம் நீங்கி உற்சாகம் பிறந்தது. இங்கு ஏன் வந்தீர்கள்? இரவு வந்திருந்தால் நடப்பது வேறு. காலை புலர்ந்த காரணத்தால் உள்ளே இருப்பவரைத் தவிர மற்றவர்கள் அனைவரும் காட்டுக்குள் சென்றுவிட்டார்கள். இப்பிரதேசம் ஒரு பயங்கரமான இடம் என்று கூறியதுடன் உடனடியாகத் திரும்பிப் போங்கள் என்று கூறி குடிசைக்குள் போவதற்கு ஆயத்தமானார். அப்போது... (தொடரும்...

---

ஒருவர் உங்கள் மனத்தைப் புண்படுத்திவிட்டால், முகத்தை நீட்டிக்கொண்டு மூலையில் உட்கார்ந்து விடாதீர்கள். ஏதாவது செய்யுங்கள். கையில் காயம் ஏற்பட்டால் என்ன செய்வீர்களோ, அதை உடன் செய்யுங்கள். அதாவது புண்ணுக்கு மருந்து போடுங்கள், இல்லாவிட்டால் நிலமை கட்டுமீறிப் போய்விடும். உங்கள் மனத்தைக் காயப்படுத்தியவரை மன்னித்து அவரது நலனுக்காகப் பிரார்த்தனை செய்வதே, உங்கள் புண்ணை ஆற்றக்கூடிய மருந்து. வன்ம உணர்ச்சி வடியும்வரை விடாது பிரார்த்தனை செய்யுங்கள்.

# ஆனி மாத வாராந்த நிகழ்வுகள்

01.06.2018 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :– "இன்றைய வாழ்வு"

வழங்குபவர் :– ஸ்வாமி சிதாகாசானந்தா அவர்கள்

(சின்மயா மிஷன்)

---

08.06.2018 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

"இன்னிசை"

(பக்கவாத்திய சகிதம்)

---

15.06.2018 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :– "மனித வாழ்வுக்கு உகந்தது"

வழங்குபவர் :– ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் அவர்கள்

---

22.06.2018 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :– "கந்தபுராணம்" (தொடர்)

வழங்குபவர் :– திரு அ. குமாரவேல் அவர்கள்

(சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்/ கல்லூரி வட்டுக்கோட்டை)

---

29.06.2018 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

**ஞானச்சுடர் ஆனி மாத வெளியீடு**

வெளியீட்டுரை :– பிரம்மஸ்ரீ கு. தியாகராஜசர்மா அவர்கள்

(நீர்வைமணி)

மதிப்பீட்டுரை :– திரு க. நவரத்தினம் அவர்கள்

(இளை. ஆசிரியர், நெல்லியடி)

246ஆவது மலர்

பதிவு இல. QD/49/NEWS/2018

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்

